மங்கையர் மலர்

அக்டோபர் 84 ரூ 2



நட்சத்திர வாழ்க்கை



கலந்துரையாடல்



பாப்பாவின் பச்சிளம் சருமத்தில் முத்தமிடுதல்போல் மென்மையானது

ஜான்ஸன்ஸ் பேபி சோப்—
பாப்பாவின் சிறிய உலகின் சில
சிறந்த பொருட்களில் ஒன்றாகும்.

பாப்பா மீதான உங்கள் ஸ்பரிச
மென்மையும் பாசமும்
போன்றதாகும் ஜான்ஸன்ஸ்
பேபி சோப்பில் உள்ள லேனோலின்.
மென்மை மணம் வழங்குகிறது
ஜான்ஸன்ஸ் பேபி சோப—
நாளெல்லாம் குழந்தைக்கு
நறுமணம் தருகிறது.



ஜான்ஸன்ஸ் பேபி சோப்
தூய்மையானது. மென்மையானது.
பாதுகாப்பானது

Johnson & Johnson

ஜனாதிபதி ஆட்சி எப்படியிருக்கும்?

இந்தியாவில் ஜனநாயகம் பிழைக்குமா என்ற கேள்வி விசுவரூபமெடுத்திருக்கிறது. இதற்குக்காரணம் ஒவ்வொரு மாநிலமாகப் பெரும்பான்மை ஆதரவுடன் அமைக்கப்பட்ட ஆட்சிகள் கட்சிமாறிகளைக் கொண்டு கவிழ்க்கப்பட்டுப் பதிலாக மத்திய அரசின் கைப்பொம்மையாக இயங்கும் தலைவர்களிடம் ஆட்சி ஒப்படைக்கப்பட்டு வருகிறது.

சிக்கிம், காஷ்மீர், ஆந்திரா என்று பட்டியல் நீள்கிறது. மத்திய ஆட்சியின் பிரதிநிதியாக நியமிக்கப்படும் கவர்னர்கள் இதற்காகவென்றே தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படுகிறார்கள். ஆட்சியை கவர்னர் மாளிகையிலேயே கவித்துவிடும் சதித்திட்டங்கள் உருவாக்கப்பட்டு அமல் செய்யப்படுகின்றன.

ஆந்திராவில் என். டி. ராமராவுக்கு அசைக்கமுடியாத பெரும்பான்மை இருந்த போதிலும் அவர் இந்திராகாந்தியை எதிர்க்கிறார் என்ற ஒரே காரணத்துக்காக அவருடைய கட்சியைச் சேர்ந்த சிலரைப் பயன்படுத்தி ஆட்சிக் கவிழ்ப்பு செய்யப்பட்டது. சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கத் தயாராக இருந்தும் என்.டி ஆருக்கு வாய்ப்பு கிடைக்காமற் போக பலவகையான யுக்திகள் கையாளப்பட்டன. எப்படியோ என். டி. ஆர். மீண்டும் முதல்வராகித்தன் பெரும் பான்மையையும் நிரூபித்துவிட்டார். ஜனநாயகத்திற்கும் கொஞ்சம் மூச்சு வந்திருக்கிறது.

இப்படிப்பட்ட ஜனநாயக விரோதச் செயல் ஒவ்வொன்றையும் வாக்காளர்கள் உன்னிப்பாகக் கவனித்து விமரிசனம் செய்து வருகிறார்கள் என்பதையோ மீண்டும் தேர்தலுக்கு அவர்கள் மக்களிடம் போகும் போது சரியானபடி பாடம் கற்பிக்கப்படுவார்கள் என்பதையோ பதவி வெறியில் உள்ளவர்கள் கவனிப்பதேயில்லை.

ஆட்சியைப் பிடித்துவிட்டால் வாக்குகள் உட்பட எதையும் வாங்கி விடலாம் என்ற மனப்பான்மை அரசியல்வாதிகளிடையே வளர்ந்து வருகிறது. இந்திராகாந்தியே அப்படித்தான் நினைக்கிறார் என்று தோன்றுகிறது.

தன் தலைமையை எதிர்ப்பவர் யாரும் எந்தப் பதவியிலும் இருக்கக் கூடாது என்ற எண்ணத்தில் அவர் செயல்படுகிறார் என்பது வெளிப்படை.

ஆனால் சிக்கிம், காஷ்மீர் முதலான சிறு மாநிலங்களில் இது போன்ற அரசியல் உத்திகள் பலிப்பது போல பெரிய மாநிலங்களில், பெரும்பான்மை மக்கள் ஆதரவுடன் ஆட்சி அமைத்துள்ள எதிர்க்கட்சி ஆட்சிகளிடம் பலிப்பதில்லை.



✻ ஆர். கே. லக்ஷ்மண்



மேற்கு வங்காளத்தில் இடது கம்யூனிஸ்டுகளை ஒன்றும் செய்ய முடியவில்லை. கர்நாடகத்திலும் ஜனதா ஆட்சியைப் பலவகையில் முயன்றும் அசைக்க முடியவில்லை.

ஆந்திராவில் பெரும்பான்மையே இல்லாத ஆட்சி ஒன்றைத் திணிக்க முயன்று படுதோல்வி.

மாநிலங்களில் எதிர்க்கட்சி ஆட்சிகள் ஏற்படுவதற்குக் காரணம் தேசியக் கட்சியாக இயங்கும் இந்திரா காங்கிரஸுக்கு

ஆதரவு இல்லை என்பது தான். மக்களிடையே ஆதரவைத் திரட்டிக் கொண்டு ஜனநாயக முறையில்தேர்தலில் வெற்றியடைந்துஆட்சி அமைப்பதற்குப் பதிலாக குறுக்கு வழிகளில் இறங்கி கேலிக்கிடமானசெயல்களில் ஈடுபட்டு உள்ள பெயரையும் கெடுத்துக் கொண்டு வருகிறார் இந்திராகாந்தி.

இந்தச் சூழ்நிலையில் இந்த ஆண்டு இறுதியில் நடைபெற்றாக வேண்டிய பார்லிமெண்ட் தேர்தல் இந்திரா கட்சிக்குச் சாதகமாகத் தீர்ப்பளிக்கும் வாய்ப்புக்கள் குறைந்து கொண்டே வருகின்றன. எதிர்க்கட்சிகளிடையே ஒற்றுமை இல்லாதது இந்திரா காந்தியின் வெற்றிக்குச் சாதகமாக இருந்து வந்தது. இப்போது காஷ்மீர், ஆந்திரா இரு மாநிலங்களிலும் ஜனநாயக விரோத நடவடிக்கையில் ஈடுபட்டு எதிர்க்கட்சிகள் அனைத்தையும் அவருக்கு எதிராக திரளுவதற்கு உதவி செய்திருக்கிறார்.

> மகிழம்பூ சேம்பும் பொழுது தேங்காய் பாலில், சிறிது சர்க்கரையைக் கரைத்து வைத்துப் பிசைந்தால் முறுக்கு அதிகச் சுவையுடன் இருக்கும்.
>
> —டி. பாலா.

என். டி. ஆர்., பரூக் அப்துல்லாவின் பின்னால் அனைத்து எதிர்க்கட்சிகளும், அணிவகுத்து 'ஜனநாயகம் காப்போம்' என்ற ஒரே கோஷத்தை முன்வைத்துத் தேர்தல் களத்தில் இறங்க முடிவு செய்துள்ளன.

• • •

அடுத்த தேர்தலில் இந்திரா காங்கிரஸுக்கு பார்லிமெண்டில் மெஜாரிட்டி கிடைக்காதோ என்ற பயம் கட்சியின் மேலிடத்தைப் பிடித்துள்ளது. இதன் பின்னணியில் தான் பார்லிமெண்டரி ஜனநாயக ஆட்சி முறைக்குப் பதில் ஜனாதிபதி ஆட்சி முறையை அமலாக்க வேண்டும் என்ற கோரிக்கை எடுத்து அது பற்றித் தீவிரமாக விவாதிக்கப்படுகிறது.

ஜனாதிபதி ஆட்சிமுறை என்பது ஜனாதிபதியை நேரடியாக தேசிய அளவில் மக்களே தேர்ந்தெடுப்பார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியிடம் எல்லா அதிகாரமும் குவிந்திருக்கும். அவருடைய பதவி பார்லிமெண்ட் தேர்தல் முடிவுகளால் பாதிக்கப்படாது. தேர்தலில் கட்சியின் வெற்றிக்காகச் சிரமப்பட வேண்டியிருக்காது.

பிரதமர் இந்திராகாந்தி தற்போது அவருக்குபார்லிமெண்டில் இருக்கும் பெரும்பான்மை ஆதரவைப் பயன்படுத்தி அரசியல் சட்டத்தைத் திருத்தி ஜனாதிபதி ஆட்சி முறையைக்கொண்டு வந்து அவரே ஜனாதிபதியாகி விடலாம்.

ஸ்ரீலங்காவில் ஜெயவர்த்தனே இப்படித்தான் ஜனாதிபதி ஆனார். 1977-ல் அவர் கட்சி பார்லிமெண்ட் தேர்தலில் அமோக வெற்றி பெற்றது. உடனே ஜனாதிபதி ஆட்சியை அமலுக்குக் கொண்டு வந்து தானே ஜனாதிபதியானார். பார்லிமெண்ட் காலத்தையும் இன்னும் ஏழாண்டுகள் நீடித்து அவரது கட்சி உறுப்பினர்கள் நீண்ட காலம் பதவியில் இருக்கும் வாய்ப்பைப் பரிசாக அளித்தார்.

விளைவு. இன்று இலங்கையில் ஜனநாயக ஆட்சி குழி தோண்டிப் புதைக்கப்பட்டு ராணுவ சர்வாதிகார ஆட்சி நடக்கிறது.

அமெரிக்காவில் உள்ளது போல் இங்கே ஜனாதிபதி ஆட்சி முறை ஏற்பட்டால் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அமெரிக்காவில் வேரூன்றியுள்ள அளவுக்கு இங்கு ஜனநாயக மரபுகள் வேரூன்றவில்லை. ஒருமுறை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால் நிரந்தரமாக, அதே பதவியில், தேர்தல் நடத்தாமல், நீடிக்கும் வாய்ப்புக்கள் ஜனாதிபதி முறை ஆட்சியில் உண்டு.

இந்தியாவில் ஜனாதிபதி ஆட்சி முறை என்பது அடக்குமுறை சர்வாதிகாரமாகத்தான் இருக்க முடியும். இதனால் தான் எதிர்க்கட்சிகள் அனைத்தும் 'ஜனநாயகம் காப்போம்' என்ற கோஷத்தை எழுப்பி அரசியல் சட்டத்தைத் திருத்தி அமைக்கும் யோசனையை முழுமூச்சோடு எதிர்க்கின்றன.

• • •

ஆசியாவின் பெரிய விருதான மக்ஸாய்ஸாய் விருது பிலிப்பைன்ஸ்நாட்டிலிருந்து தரப்படுகிறது. இந்த ஆண்டு இந்த அரிய விருது டைம்ஸ் ஆப் இந்தியாவில் கார்ட்டூனிஸ்ட்டாக பணிபுரியும் ஆர். கே. லக்ஷ்மணுக்குக் கிடைத்திருக்கிறது. உலகத்திலேயே சிறந்த கார்ட்டூனிஸ்ட்களில் ஒருவராக இவர் மதிக்கப்படுபவர். முப்பதாண்டுகளுக்கு மேல் இவர் வரைந்து குவித்துள்ள கேலிச் சித்திரங்கள் நாட்டின் அரசியல் நடப்பை, ஊழலை, பொருளாதார அலங்கோலத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டும்.

ஆர். கே. லக்ஷ்மண் பிரபல நாவலாசிரியர் ஆர். கே. நாராயணனின் சகோதரர். பிரபல நாட்டிய நடிகை கமலாவை இவர் மணந்தார். ஓராண்டிலேயே விவாகரத்து நடந்து பிறகு உறவிலேயே ஒரு பெண்ணை மணந்து கொண்டு திருப்தியுடன் வாழ்ந்து வருகிறார்.

இவருக்குக் கிடைத்த விருது இந்தியாவுக்குக் கிடைத்த பெருமையாகும்.

-ரங்கபுரி

பரிட்சை நெருங்கிடும் காலம்?
கவனமாக படித்திடும் நேரம்



முழுதும்
தயாராயிருந்திட
வேண்டிய காலம்
காம்ப்ளான்®
பருக வேண்டிய
நேரம்.

காம்ப்ளான் ஒன்றில்தான் அவனுக்கு தேவையான அதி ஊட்டமளிக்கும் 23 மூலாதார சத்துணவுகள் உள்ளன.

குழந்தைகள், முக்கியமாக பரிட்சைக்கு படிக்கும் காலத்தில், திடமாக இருந்திடுவது அவசியம். அதனால்தான் பரிட்சை நடக்கும் நேரம் காம்ப்ளான் நேரம் என்று அன்னையர் அறிவர்.

உடல் வளர்ச்சியில் பங்கு பெறுவதே புரதம் என்ற சத்துதான். காம்ப்ளானில் குழந்தைகளுக்குத் தேவையான புரதம் (20%) இருப்பது மட்டுமல்ல, அப்புரதம் மிகச்சிறந்த புரதமுமாகும் (பால் புரதம்). அத்துடன், அது குழந்தைகளுக்கு தேவையான அதி ஊட்டமளிக்கும் கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்புச்சத்து, வைட்டமின்கள், தாதுக்கள் ஆகிய 22 கூடுதல் மூலாதார சத்துணவுகள் கொண்டதாகும்.

துவங்குங்கள் காம்ப்ளான் உங்கள் குழந்தைகளுக்கு—அன்றுடம் இருவேளை.

காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளாம் சாக்கலேட், ஏலக்காய்—குங்குமப்பூ, ஐஸ்க்ரீம், ஸ்டராபெர்ரியும், சாதா ரகத்திலும்.

குழந்தைகள் மிகவும் விரும்பிடும் சுவைகள்.



காம்ப்ளான்® — திட்டமிட்ட பரிபூர்ண உணவு

GK&E.884.GLC.13 Tam.

ஒரு இனிய மாலைப் பொழுது...

கலந்துரையாடலில் பங்கு கொண்டவர்கள்
ஃ அட்டையில்
திரு & திருமதி சுஜாதா,
திரு. அனிதா ராமச்சந்திரன்,
திருமதி.பத்மா சீனிவாசன்
திருமதிஜெயா வி. ராமன்
திருமதி தனலட்சுமி ஸ்ரீநிவாஸன்,
திருமதி லலிதா சிவராமகிருஷ்ணன்,
திருமதி வசந்தாகோவிந்தன்,
திருமதி அம்புஜம்
திருமதி ஞானஇலைத்தியநாதன்
திருமதி லக்ஷ்மி விஸ்வநாதன்,
திருமதி ராஜலட்சுமி
குமாரி சித்ரா
திருமதி சீதாசேகர்.

உண்மையாகவே கலகலப்பு மிகுந்த இனிய மாலைப் பொழுதாகத்தான் இருந்தது அன்று. பெங்களூரில் எழுத்தாளர் சுஜாதாவும், மங்கையர்மலர் வாசகிகளும் கலந்துரையாடினர். மங்கையர்மலர் பற்றிய விமரிசனமாகவும், பொதுவாக ஒரு பெண்கள் பத்திரிகை எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றியும், பல பொது விஷயங்களிலும் பேச்சு நுழைந்து சென்றது. மூன்று மணி நேரம் போனதே தெரியவில்லை.

கலந்துரையாடலில் இடம் பெற்ற சில சுவையான பேச்சுக்கள்...

சுஜாதா: பொதுவாக ஒரு பெண்கள் பத்திரிகை எப்படி இருக்கணும், என்ன வந்தால் சுவையாக இருக்கும்ங்கறதைப் பத்திப் பேசறதோட ஆரம்பிக்கலாமா?

திருமதி சுஜாதா: பெண்கள் பத்திரிகைன்னு தனியா ஒண்ணு இல்லே. தனிப்படுத்திச் சொல்றதே கூடத் தப்பு. ஆண்கள் பலரும் இப்பல்லாம் பெண்கள் பத்திரிகையைப் படிக்க ஆரம்பிச்சுட்டாங்க. ஏன்னுப் பெண்களைப் பத்தித் தெரிஞ்சுக்கறதுல அவங்களுக்கு எப்பவுமே ஒரு இண்ட்ரஸ்ட் உண்டு.

வசந்தா: சமவுரிமை பெண்களுக்குவேணும்னு சொல்றாங்க. ஆனா இப்ப சமவுரிமையெல்லாம் தாண்டிப் போய் பெண்கள் தான் ஆதிக்கத்துல இருக்காங்கன்னு சொல்வேன். சாதாரண ஒரு நடுத்தர பேமிலியில அந்தவீட்டுத் தலைவி சொல்றது தான் சட்டமா இருக்கு. அதுவும் அவ வேலைக்குப் போறவளா இருந்தாக் கேக்கவே வேண்டாம்.

சீதா: நான் இதைக் கடுமையா ஆட்சேபிக்கிறேன். ஒவ்வொரு குடும்பத்திலேயும் பெண் உழைக்கிறவளாகத் தான் இருக்கா. அவ வேலைக்குப் போறா ரெண்டு இடத்துலேயும் உழைக்கணும். பத்தாததிற்கு சம்பளத்தையும் கொடுத்துட்டு, 'இவ சம்பாதிக்கறான்னு 'கர்வம்' என்று இடிப் பதையும் கேட்டுக் கொள்ளவேண்டும்.

சுஜாதா: இந்த மாதிரி சமூகப் பிரச்சினைகளைச் சொல்றதா பெண்கள் பத்திரிகை இருக்கணும்னு விரும்பறீங்களா? அது தவிர வேறு என்ன இருக்கணும்னு நினைக்கறீங்க...?''

ராஜலட்சுமி: நிச்சயமா இவர்கள் சமுதாயப் பிரச்சினையையே முக்கியமான 'தீமா' எடுத்துக்கணும். பெண்களின் பிரச்சினையை மட்டும் சொல்லிட்டாப் போறாது. எதிர்த்து நின்னு குரல் கொடுக்கும் தைரியத்தையும் கொடுக்கணும்.

திருமதி சுஜாதா: பெண்கள் எப்படி இருக்கணும்னு நினைக்கறீங்க?

தனலட்சுமி: சமுதாயம், நாலு பேர் என்ன நினைப்பாங்க என்று யோசிக்கிறதே எல்லா அடிமைத்தனத்திற்கும் காரணமாகிறது. ஐயோ இந்தக் கொடுமைக்கார புருஷனோட குடித்தனம் பண்ணும வெளியே வந்தா நம்பளை வாழாவெட்டின்னு நாலு பேர் சொல்லுவாங்களேன்னு பயப்படறாங்க. அவன் கொலையே செஞ்சாலும் பணியறாங்க. இந்த மாதிரி இல்லாம பெண்களுக்குத் தைரியம் ஊட்டும் வகையில கட்டுரைகள், கதைகள் வரணும்.

பத்மா: பொதுவாப் பெண்கள் பத்திரிகைன்னா சமையல் குறிப்பு, கோலம் இதுதானேன்னு கேலியாப் பேசறாங்க. ஆனா வாழ்க்கைக்கு அதுவும் தான் முக்கியம்ங்கறதை மறந்துடறாங்க. கோலம் போடற பெண் புத்திசாலியா இருக்கக் கூடாதா? டாக்டருக்குப் படித்த பெண் சமையலில் கெட்டிக்காரியா இருக்கக் கூடாதா? எல்லாக் கலைகளிலும் சிறப்பாக ஒரு பெண் இருக்க வழிகாட்டக் கூடாதா என்ன?

சீதா: திருமணமலர் படிக்கறதுக்கு ரொம்ப இண்ட்ரஸ்டிங்கா இருக்கு. எத்தனை விதமான ரசனைகள் மக்களுக்கு இருக்குன்னு புரிஞ்சுக்க முடியறது.

சுஜாதா: பெண்கள் எதை ரசிப்பாங்கன்னே எங்களாலே புரிஞ்சுக்க முடியறதில்லே. (சிரிப்பு).

ராத்திரி டீ. வி. யில சல்மா நியூஸ் படிச்சுக்கிட்டு இருப்பாங்க. அவங்க முகத்தில ஏதோ ஒரு சோகம் படிஞ்சிருக்கிறதா எனக்குத் தோணும். அதை இவகிட்ட சொல்லணும்னு திரும்பினு இவ சொல்லுவா,

'ஹா, அவ போட்டிருக்கற தொங்கட்டான் எவ்வளவு அருமையா இருக்குப் பாருங்களேன்!''

இத என்ன சொல்ல?

திருமதி சுஜாதா: உங்களுக்கு எதுல இண்ட்ரஸ்ட்டோ அதப் பாக்கறீங்க. நான் தொங்கட்டானைப் பார்க்கறேன். அவ படிக்கிற நியூஸையும் கேட்கறேன்.

சீதா: எங்க ரசனை ஒண்ணும் குறைஞ்சு போயிடலை. உங்க ஆண் வர்க்க ரசனைகள் தான் மோசம். பாருங்களேன், 'மேட்ரிமோனியல்' காலத்தை. அழகா, சிகப்பா, ஒல்லியா பொண்ணு இருக்கணுமாம். இது தவிர அவ கவர்ன்மெண்ட்லயோ, பேங்க்லேயோ சம்பாதிக்கறவளா இருக்கணுமாம்.

அம்புஜம்: உம்... அத்தோட இந்தப் பையன் இருக்கற இடத்துக்கு மாத்திக்கிற 'ஜாப்'பா இருக்கணும். அத மறந்துட்டீங்களே!

(எல்லோரும் சிரிக்கின்றனர்.)

சுஜாதா: ஆக ரசனைகளும், ஜாதியும் எங்க போச்சுன்னு மேட்ரிமோனியல் காலத்துக்குப் போச்சுன்னு சொல்லணும். ஆமா, இந்த சமையல் குறிப்பெல்லாம் போடறாங்களே, பயங்கரமா...?

நாலைந்து பேர்: (ஒரே குரலாக) பயங்கரமாகவா...? எவ்வளவு புதுமையான குறிப்பெல்லாம் போடறாங்க?

சுஜாதா: ஐயையோ, அதெல்லாம் பாக்கவே 'ஒரு மாதிரி'யா இருக்கும். அதையெல்லாம் யார் சாப்பிடறது? மரியாதையா கழண்டுக்கறது தான் நல்லது.





ஜெயா: ஏன் போட்டோ கூடத்தான் போடறுங்க. அழகாத்தானே இருக்கு?
சுஜாதா: போட்டோவுல இருக்கும். செஞ்சா வராது.
சீதா: அதெல்லாம் ஒண்ணுமில்லே. நாங்க எல்லாம் செய்யறோமே. நல்லாத்தான் வருது.
ஜெயா: பத்திரிகைகளில் படிச்சு நான் கேக் செய்யறேன். நல்லாருக்கு.
திருமதி சுஜாதா: அதே மாதிரி பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பது என்று வரும் ஆலோசனைப் பகுதிகளும் நல்லதுதான்.
சுஜாதா: பத்திரிகைகளில் ஒரு பிரச்சினைக்கு தீர்வைப் படிச்சுட்டு, நம் வாழ்க்கையில அதைத் தீர்த்துக்க முடியும்னு நினைக்க றீங்களா?
ராஜலட்சுமி: நிச்சயமா முடியும். நாம ஒருத்தருக்குச் சொல்றதால கேட்டுக்கற தில்லே. அதுவே, பத்திரிகைல இப்படி வந்திருக்கு அப்படின்னு பிரிண்டட்மேட் டராக் கொடுத்தால் ஏத்துக்கறாங்க. அவங்களுக்கு மனசுல உறைக்கறது.
ஜெயா: எனக்குச் சட்ட சம்பந்தமான பிரச்சினைகளில் ஆர்வமில்லே.
வசந்தா: உங்களுக்கு அந்த மாதிரி பிரச்சி னைகள் இல்லேன்னாலும், மத்தவங்களுக்கு அந்த மாதிரி ஏதாவது வந்தா ஆலோ சனை சொல்லலாமே!
சுஜாதா: நல்ல காலம் நமக்கு இந்த மாதிரி பிரச்சினைகள் இல்லேயேன்னு சந்தோஷ மாவது படலாம்!
சீதா: இது படிச்சவங்களுக்கு, இது சாதா ரண குடும்பத் தலைவிகளுக்கு அப்படின்னு பிரிச்சுப் பார்க்காம எல்லா லெவல்லே யும் மேட்டரைக் கொடுக்கணும். ஒரு பெண் எல்லா ரசனைகளையும் உடையவளா இருக்கணும். அப்பத்தான் பல்வேறு ரசனை களை உடைய குடும்பத்தாரை அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டுப் போக முடியும்.
சுஜாதா: நீங்க இதை சொல்றப்ப எனக்கு



ஒரு கோர்ட் நிகழ்ச்சி ஞாபகம் வர்றது. காலையிலே கோர்ட்டுக்கு ஜட்ஜ் வர்றார். எங்கேயோ ஒரு மூலையிலே ஒண்டுக் குடித்தன ஃப்ளாட்டுக்காக அண்ணன், தம்பி ரெண்டு பேர் சண்டை போட்டுக்க றாங்க. அது யாருக்குன்னு தீர்ப்பு சொல் லிட்டு அடுத்தது ஒரு கொலை கேஸ். ஓ. கே., இவன் கொலை செஞ்சான்னு நிருபணமாச்சு இவனைத் தூக்குலேத் தொங்க விடு'ன்னு தீர்ப்பு சொன்னாராம். வரிசையா இப்படிப் பல கேஸ்கள்... ஒண்டுக் குடித்தனமும், தூக்குத் தண் டனையும் வரிசையாப் பார்த்துக்கிட்டே போக வேண்டிய நிகழ்ச்சிகளா?
ஜெயா: அதுக்காக கொலைகேஸை மட்டுமே பார்க்க முடியுமா, இல்லே ஒரே கட்டுரை யையே பத்திரிகை மொத்தமுமே படிக்க முடியுமா?
சுஜாதா: 'ஜஸ்ட்' எனக்கு ஞாபகம் வந்த துன்னு சொன்னேனே. இதுக்கும் அதுக் கும் சம்பந்தமில்லேதான். இடையிலே ஒரு குட்டிக்கதையா எடுத்துண்டு போங் களேன்.
(அனைவரும் சிரிப்பு.)
பேச்சு வளர்ந்து, வேறுபுறம் திரும்பு றது. சுஜாதாவின் நாவல்களைப் பற்றி யும் ஒரு வாசகி கேட்டார்.
சீதா: கல்கின்னு சிவகாமியின் சபதம், அகிலன்னு பாவை விளக்குன்னு ஒவ் வொருத்தருக்கு ஒவ்வொரு கதை நினைப் புல வச்சுக்கற மாதிரி இருக்கு. ஆனா உங்க கதைகள் எதுவுமே நினைவுல இல்லியே...
சுஜாதா: அதுக்குக் காரணம் உங்க வயசு, ப்ளஸ் நான் இப்பவும் எழுதிக்கிட்டு இருக்கறது ரெண்டும் தான். உங்களுக் கும் வயசாயிடிச்சு'ன்னு வச்சுக்குவோம், நானும் எழுதித் தீர்த்தவன்னு ஆயிட் டோம்னு 'அந்தக் காலத்துல சுஜாதான்னு ஒருத்தர் இருந்தார்; என்ன அருமையா எழுதுவார்தெரியுமா? இந்தக் காலத்துல யும் எழுதறாங்களே, அப்படின்னு உங்க பேத்திக்கு இடிச்சுக் காட்டுவீங்க.
(சிரிப்பு.)
சித்ரா: முகஸ்துதிக்காக சொல்லலே. நீங்க ரொம்ப நல்லா எழுதறீங்க. எல்லா ஃபீல்டையும் வச்சு எழுதியிருக்கீங்க. அதுதான் ஆச்சரியப்பட வேண்டிய விஷயம்.
சுஜாதா: அதனால் தான் என்னுடைய ரசிகர் எப்படிப் பட்டவர் என்பதை அவர் வந்து உட்கார்ந்தவுடனே என்னால கண்டுபிடிச்சுட முடியும். என் கதைகள்ள உங்களுக்குப் பிடிச்ச கதை எதுன்னு சொல்லுங்க. நீங்கள் எப்படிப்பட்டவர்ங் கிறதை நான் சொல்றேன்...
இப்படி உரையாடல் நீண்டுகொண்டே போனது. பல ஆக்கபூர்வமான யோசனைகளை மங்கையர்மலருக்குக் கூறினார்கள். ஒரு பத்தி ரிகையின் மேல் இவ்வளவு அத்தியந்த நட்பு வைத்திருக்கிறார்களே என்ற ஆச்சரியம்தான் எழுந்தது. அன்பும் சிரிப்புமாக அந்தக் கூட்டம் கலைந்தபோது மணி இரவு ஒன் பதைத் தாண்டிவிட்டது.

—மஞ்சுளாரமேஷ்


இதோ உங்களுக்காகவே பறந்து வருகிறது சத்து நிறைந்த
ஸ்பென்ஸர்ஸ் ஹை-மில்க் பிஸ்கட்டுகள்
Spencer's
Spencer's
அதோ தெரிகிறதே அதுதான்
பால்வளம் கொண்ட சக்தியை
அள்ளித்தரும் புதியதொரு பூமி.
உங்கள் குழந்தைக்காகவே ஒரு
விசேஷமான பரிசை கொண்டு
வருகிறது. ஸ்பென்ஸர்ஸ்
ஹை-மில்க் பிஸ்கட்டுகள்.
பாலின் சக்தியை கொண்ட
சுவைமிக்க மொறுமொறுப்பான
பிஸ்கட்டுகள்.
இந்த சக்திமிக்க கும்பலில்
நீங்களும் கலந்துகொள்ளுங்கள்.
ஸ்பென்ஸர்ஸ்
ஸ்பென்ஸர்ஸ் ஹை-மில்க்
பிஸ்கட்டுகள். சக்தி தரும்
பொருளின் படையெடுப்பு
S 3986 TAM

ராசி பலன்

அக்டோபர் 1984

மேஷம்



வீடு, மனை வாங்கத் திட்டமிட்டிருப்பவர்களுக்கு எதிர்பாராத விதமாக இம்மாதம் நினைத்தது கைகூடும். நெருங்கிய உறவினர் அல்லது நண்பரின் உதவியால் பணவரவு ஏற்படுவதுடன் சிக்கலென நினைத்திருந்த காரியங்கள் எளிதாக முடியும். அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சிலருக்கு வெளியூர்ப் பிரயாணங்களும் உண்டாகலாம்.

ரிஷபம்



நீண்ட காலமாகப் பிரிந்திருந்த உறவொன்று மீண்டும் உங்களை வந்து அடையவிருக்கிறது. அதனால் பொருளாதார ரீதியாக உயர்வும், மனச் சந்துஷ்டியும் உண்டாகும். இல்லத்தில் சுபநிகழ்ச்சிகள் ஏற்படும். புதிய மனிதர்களின் நட்பும், பொது மக்களின் ஆதரவும் உண்டாகும். கணவருடைய உத்தியோக நிமித்தம் வெளியூர்ப் பிரயாணங்களும் ஏற்படலாம். குழந்தைகளினால் பரிசும் பாராட்டும் கிடைக்கும்.

மிதுனம்




உடல்நிலை சரியில்லாமல் சிறிது நாட்கள் இருந்ததற்கு மாறாக, இம்மாதம் சுறுசுறுப்பாக இயங்க வேண்டி வரலாம். பண விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டி வரலாம். எதிர்பாராத விதமாக செலவினங்கள் அதிகமாவதுடன் உறவினர்களின் போக்குவரத்தும் அதிகமாகும். அலுவலகத்தில் அதிக விவாதத்தில் ஈடுபடாமல் ஒதுங்கியிருந்து விடுவது நல்லது.

கடகம்



கணவன் மனைவியரிடையே பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாட்கள் இவை. கூடியவரை மற்றவர் விஷயத்தில் தலையிடாமல் இருந்து விடுவது நல்லது. குழந்தைகளின் காரணமாகச் செலவினங்கள் அதிகமாகும். மாதத்தின் இறுதியில் திட்டமிட்ட காரியங்கள் நிறைவேறுவதுடன், பண நெருக்கடியும் சிறிது தளரும் வாய்ப்புண்டு. அரசாங்க ஆதரவும் உங்கள் பக்கம் இருப்பதால் விரைவில் நிலைமைகள் சீரடையும்.

சிம்மம்




பொது மக்கள் தொடர்புத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நல்ல எதிர்காலத்தைக் கொண்டுதரும் மாதமிது. நடக்கின்ற சுப நிகழ்ச்சி ஒன்றின் மூலமாகப் புதிய நண்பர்களும், பயனுள்ள நட்பும் கிடைக்கவிருக்கிறது. எதிர்காலத்தில் நீங்கள் திட்டமிட்ட காரியங்களை நிறைவேற்றச் சிறந்த அடித்தளம் அமைக்கும் நாட்களாக இவை அமையும். பணவரவு அதிகம் இல்லையென்றாலும் செலவினங்கள் கட்டுக்கடங்கியே இருக்கும்.

கன்னி



தனியார்த் துறையில், சுயத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் என்ற நிலையே இருக்கும். அதிகம் பரபரப்பில்லாத சாதாரண வேலைகள் உள்ள மாதமாகவே இம்மாதம் விளங்கும். குழந்தைகளினால் சிறுபிரயாணங்களும் உண்டாகலாம். மாதத்தின் இறுதியில் பணவரவும், ஆபரண சேர்க்கையும் உண்டாகலாம். கணவன் — மனைவியிடையே இருந்த பிணக்கு நீங்கி சுமுகஉறவு உண்டாகும்.

துலாம்



குழந்தைகளுக்காக நீங்கள் திட்டமிட்டிருந்த காரியங்கள் தடங்கலில்லாமல் நிறைவேறும். எதிர்பாராத விதமாக ஏற்படுகின்ற சிறுதோல்விகளுக்கு மனமுடைந்து கோபத்தின் வசம் அகப்படாதீர்கள். மாத நடுவில் சிறிய அசௌகரியங்கள் ஏற்பட்டாலும் விரைவில் அவை நீங்கிப் பழைய நிலை வந்துவிடும். மேலதிகாரிகளிடமும், முதலாளிகளிடமும் சுமுகமான உறவையே வைத்துக் கொள்ளுங்கள்.

விருச்சிகம்



மாதத்தின் இறுதியில் நீங்கள் சந்தேகப்பட்டுக் கொண்டிருந்த பணத் தொகை கைக்கு வரும். நினைத்ததையும் விடச் சிறப்பாக இல்லத்தில் சுபநிகழ்ச்சிகள் நிறைவேறுவதுடன், குடும்பத்தாரிடையே சிறிது நாட்களாக இருந்து வந்த மனக்கசப்பும் நீங்கிவிடும். புதிய நபர்களின் வருகையும் சில குடும்பங்களில் ஏற்படலாம். மாதத்தின் முதல் நாட்களில் அதிகம் விவாதத்தில் ஈடுபடாமல் இருப்பது நல்லது.

தனுசு



அரசியல், சமூக விவகாரங்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நல்லதொரு அந்தஸ்து நிறைந்த பதவி காத்திருக்கிறது. நடுவில் ஏற்படுகின்ற சிரமங்களை மனோதைரியத்துடனும் விடா முயற்சியுடனும் கடந்து விட்டீர்களானால் இனி வெற்றி உங்கள் பக்கம்தான். பொருளாதாரம் சிறிது இழுபறி நிலைமையாகத்தான் இருக்கும். நீண்டதொரு வெளியூர்ப் பிரயாணமோ, சிலருக்கு வெளிநாட்டுப் பயணமோ ஏற்படலாம்.

மகரம்



சொத்துத் தகராறில் உள்ளவர்களுக்கு இம்மாத நடுவில் வெற்றியின் போக்கைக் கணித்துவிட முடியும். அதனால் எதிர்பாராத பணவரவு ஏற்படுவதுடன், நண்பர்களின் கூட்டுறவால் செலவினங்களும் அதிகமாகும். புதிய வாகனங்களை வாங்க முயற்சிப்பதைத் தள்ளி வைப்பது நல்லது. எழுத்தாளர்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைப்பதுடன், மீண்டும் புதிய முயற்சிகளுக்கு ஆதரவும் கிடைக்கும். குடும்பத்தில் சிறிதே பூசல் ஏற்பட்டு அடங்கும்.

கும்பம்



இல்லத்தில் புதிய கடமைகளை மேற்கொள்ள வேண்டியதாக இருக்கும். இதனால் வேலைப்பளு அதிகமாகும் என்றாலும், உற்சாகமான சூழ்நிலையும், பாராட்டுக்களும் உண்டாகும். உங்கள் குழந்தைகள் உங்களுடைய விருப்பத்திற்கு மாறாக நடக்கும் நிலை உண்டாகலாம். ஏற்படும் புதிய சிக்கல்களை பொறுமையுடனும், விவேகத்துடனும் சகித்து விட்டீர்களானால் நிலைமை தீவிரமாகாமல் சமாளித்து விடலாம். பணவரவு கொஞ்சம் கடினம்தான்.

மீனம்



உங்களை அண்டி உங்கள் பாதுகாப்பில் இருப்பவர்களினால் சில பிரச்சினைகள் எழக் கூடும். இதனால் உறவினர்களிடையே பெரிய பாதிப்புக்கள் ஏற்படலாம். முதலிலேயே கண்காணிப்புடன் எந்தப் பிரச்சினையையும் அணுகுவது நல்லது. யாருக்கும் வாக்குறுதிகளை எளிதில் தந்து விடாதீர்கள். உங்கள் மேல் தவறாகப் புரிந்து கொண்டு விரோதம் பாராட்டும் நிலைமையும் ஏற்படலாம். மிகுந்த ஜாக்கிரதையுடன் நெருக்கடி நிலையைத் தாண்டி விட்டீர்களானால், விரைவில் நிலைமை சீரடைந்து விடும்.

பருமன் குறைய... 10 யோசனைகள்!

1. நிதானமாகச் சாப்பிடவும்.— உங்கள் ஆகாரத்தை பல சிறுபாகங்களாகப் பிரித்துக் கொள்ளவும். நன்றாகக் கடித்து மெதுவாக விழுங்கவும்.

2. பசித்தால் ஒழிய எதுவும் சாப்பிடாதீர்கள் — சாப்பிடும்முன்பு கேள்வி எழுப்பவும், இது சாப்பிட வேண்டிய அவசியம் என்ன என்று. உங்கள் பசி ஆறியதும் சாப்பாட்டை நிறுத்தவும்.

3. ஒவ்வொரு தடவையும் தட்டில் குறைந்த சாப்பாடே இருக்கவேண்டும். இதுவே ஒருவிதி என எண்ணிச் சாப்பிட உட்காரவும்.

4. ஒவ்வொரு சாப்பாட்டுக்கும் முன்பு — ஒரு டம்ளர் தண்ணீர். டீ அல்லது காபி அல்லது கலோரி இல்லாத பானங்கள் குடிக்கவும்.

5. சாப்பாட்டில் உப்பை ஒதுக்கவும்.

6. பானங்களில் சர்க்கரை உபயோகிக்க வேண்டாம்.

7. காய்கறிகளால் செய்தசாலட்டுகள் நிறைய சாப்பிடவும்.

8. வெண்ணெய், மார்கரின், எண்ணெய்கள், க்ரீம்கள், கொழுப்புகள் முதலியவை உபயோகிக்க வேண்டாம்


9. அதிகச் சத்துள்ள சில ஆகார வகைகளை ஒதுக்கி விடவும். உதாரணம்: ஐஸ்க்ரீம்கள், உலர்ந்தபழங்கள், கொட்டைகள் என்பன.

10. இரண்டாவது தடவை எதையும் இடையில் போட்டுக் கொள்ள வேண்டாம்.

அப்புறம்—

உங்கள் உடலுக்கேற்ற எடையை அடைந்தவுடன் அதே எடையில் எப்பொழுதும் இருக்கும்படியாகப் பார்த்துக் கொள்ளுங்கள்.

—தனலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்





மார்பிள் பிரிண்ட் புடவைகள்!

மார்பிள் பிரிண்ட் புடைவைகள் பொருட்களைப் பார்த்து நீங்கள் ஆசைப் பட்டு ஏகமாய் கொட்டிக்கொடுத்து வாங்கியிருப்பீர்கள்! சில ரூபாய் செலவில் நீங்களே உங்கள் புடவைக்கு பிரிண்ட் போட்டுக் கொள்ள முடியும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

புடவை மட்டுந்தானா?

முட்டை, மெழுகுவர்த்தி, பேப்பர், ப்ளாஸ்டிக் கிண்ணங்கள், பேப்பர் தட்டுகள், தோல் செருப்புகள் என்று எதில் வேண்டுமானாலும் உங்கள் கைவண்ணத்தைக் காட்ட முடியும். இதற்குத் தேவையானதென்னவோ, கற்பனையும், சில கலர்களும் மட்டுமே!

ஒயிட் ஸ்பிரிட் (White Spirit) Oil bound fabric printing inks (தேவையான நிறங்களில்)

சிறிய கண்ணாடி பாட்டில்கள் அல்லது கப்புகள் — ஸ்டேஷனரி சாமான்கள் விற்கும் கடையில்கிடைக்கும். இவைகளை வாங்கித் தயாராக வைத்துக் கொண்டு விடுங்கள். பாதி வேலை முடிந்தது போல் தான்!

ஒவ்வொரு நிறச் சாயத்திலும் சிறிதளவு எடுத்துத் தனித்தனி கண்ணாடி பாட்டில்களில் போட்டுச் சிறிது ஒயிட் ஸ்பிரிட் சேர்த்துக் க்ரீம் பதம் வரும் வரை கலக்க வேண்டும்.

ஒரு அகலமான பழைய பாத்திரத்தில் பாதியளவிற்குத் தண்ணீரை எடுத்துக் கொண்டு அதில் கலக்கி வைத்த சாயத்தில் ஒரு துளி விட வேண்டும். சாயத்துளி நீரின் மேற்பரப்பில் மிதந்து பரவ வேண்டும். அவ்வாறில்லாமல் நீரினுள் அமிழ்ந்தால் நாம் கலக்கி வைத்துள்ளசாயம் மிகவும் கெட்டியாக உள்ளது என்பதைக் கண்டுகொண்டு மேலும் சிறிது ஒயிட் ஸ்பிரிட் சேர்த்துக் கலக்கிக் கொள்ள வேண்டும்.

இப்போது பல வண்ணங்களில் சாயம் தயார்.

பாத்திரத்தில் உள்ள தண்ணீரின் மேல் பரப்பில் ஒவ்வொரு வண்ணத்திலும் ஒவ்வொரு சொட்டாக விட்டு ஒரு குச்சியால் தண்ணீரை லேசாகக் கலக்கினால்... அடேயப்பா...

'இவ்வளவு அழகாகக் கூட இருக்குமா என்ன?'

என்று மூக்கின் மேல் விரலை வைத்து விடுவீர்கள். பல வண்ணங்களும் ஒன்றுடன் ஒன்று கலந்து சுழித்துக் கொண்டுதண்ணீரின் மேற்பரப்பில்பரவி விரவியிருக்கும் அழகே அழகுதான்.

ப்ரிண்ட் போட வேண்டிய காகிதத்தை வண்ணக் கலவையில் படும் படி வைத்து எடுத்து விடுங்கள். காற்றுக் குமிழ்கள் இல்லாமல்பார்த்து கொள்ள வேண்டும். தண்ணீரில்பரவிக் கிடந்த டிசைன் இப்போது காகிதத்தில்! காகிதத்தை உலர வைத்துத் தேவையானால் அயர்ன் பண்ணிக் கொண்டு விடலாம். பாத்திரத்தில் மேலும் சில வண்ணங்களைச் சேர்த்துச் சுழற்றி அடுத்த ப்ரிண்டைப்போடலாம்.

மெழுகுவர்த்தியாக இருந்தால் திரியைப் பிடித்துக் கொண்டு சாயத்தில் நனைத்து எடுத்து விட வேண்டும்.

ப்ளாஸ்டிக் டம்ளர்கள் தட்டுகள் இவைகளில் மார்பிள் பிரிண்ட் போட்டபின் பாலியூரிதேன் வார்னிஷ் கொண்டு வெளிப்புறத்தைத் துடைத்து பளபளப்பாக்க வேண்டும். இவைகளை சாப்பிடவோ, தண்ணீர் குடிக்கவோ பயன்படுத்தக் கூடாது. அலங்காரப் பொருட்களாகப் பயன்படுத்தலாம்.

— சக்திதேவி.


அமிர்தாஞ்சன்
அறியும்
தலைவலியின்
கடுமையை
எளிதாகப் பூசிட ஏற்ற மிருதுவான
அடிப்படைபொருள் கொண்டது.
புத்தம் புதிய, கார்க்கிறுவான
உள் அமைப்பு மருந்தின்
சக்தியைப் பாதுகாக்கிறது.
AMRUTANJAN
Pain Balm
AMRUTANJAN
PAIN BALM
OBM 8708 TM
1984 ஒலிம்பிக் போட்டி
இந்திய விளையாட்டு
வீரர்களுக்கு பெய்ன்-
பாம் சப்ளை செய்ய
அங்கீகாரம் பெற்றவர்கள்.
அமிர்தாஞ்சன்
துரித நிவாரணம் உறுதியுடன் அளிப்பது.
தீய பின்விளைவுகள் இல்லாதது.

மாதம் ஒரு நடனம்—1

பரதம்

பரத நாட்டியம் பற்றி ஒரு கட்டுரை வேண்டும், விஷயம் தெரியாதவர்களுக்கும் கொஞ்சம் புரிய வைக்கும்படியாய் அமைந்திருக்கவேண்டும் என்றார்கள். அரிய பெருங்கலையை இந்த அளவில் அடக்க முடியுமாவென்று சற்று மலைத்துத்தான் போனேன். இருந்தாலும் ஒரு முயற்சி.

-கோமளா வரதன்.



பரத நாட்டியக் கலையைப் பற்றி ஆராயப் புகுவோமானால் அது, முதல் மூல நூலான பரத முனிவர் எழுதிய நாட்டிய சாஸ்திரத்தில் போய் நிற்கும். கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப் பட்ட நாட்டிய சாஸ்திரம், தற்கால அர்த்தப்படி நாட்டியம், நாடகம் இவற்றோடு தொடர்பு கொண்ட ஏராளமான விஷயங்களை விளக்கும் ஒரு அரிய நூலாகும்.

எல்லோரும் கண்டு, கேட்டு, ரசித்து, மகிழ, நாலு வேதங்களுக்கும் ஒப்ப ஒரு ஐந்தாவது வேதம் போலவே பிரம்மா நாட்டிய சாஸ்திரத்தை அருளிச் செய்ததாக பரதமுனி இதன் ஆரம்பத்தில் குறிப்பிடுகிறார். எல்லா அறிவும் பொருந்தியதாகவும் உலகையும் அதன் நடவடிக்கைகளையும் பிரதிபலிப்பதாகவும், எல்லாத் திறன்களையும் காட்டக் கூடியதாகவும் இக்கலை அமைந்திருக்கும் என்றும் சொல்கிறார்.

இன்று தென்னாட்டில் நம்மிடையே வழக்கிலிருந்து வரும் பரதக் கலையில் இரு முக்கியமான அம்சங்கள் உண்டு. நிருத்தம், அபிநயம் என்பன அவை.

நிருத்தமானது, ஜதி, தாள கோர்வைகளுக்கேற்ப அழகாகவும் விறுவிறுப்போடும் ஆடப்படும் ஆடல் தொகுதி.

பொதுவாக ஒரு பெண்ணுக்கு பரத நாட்டியம் சொல்லிக் கொடுக்கையில் நட்டுவனார் வந்து அடைவுகளிலிருந்து ஆரம்பிப்பதைப் பார்க்கிறோம். அடைவுகள்தான் பரத நாட்டியத்தின் அடிப்படை ஆடல் தொகுதிகள்.

நாட்டிய சாஸ்திரத்தின் கரணங்கள் மருவி அடைவுகளாக வழங்குகின்றன. பல அடைவுகளைத் தொகுத்துத் தான் கோர்வையாக ஜதிகளுக்கு ஆடுகிறோம். இந்த அடைவுகள் பாணிக்குப் பாணி மொத்த எண்ணிக்கையில் வேறுபட்டிருந்தாலும் மாணவிகள் குறைந்த பட்சம் 70, 80 அடைவுகளையாவது நிரக் சற்றுத் தேர்ச்சி பெற வேண்டும்.

அபிநயம் என்றாலே புரியும், ஒரு பாட்டின் பொருளுக்கேற்ப அதன் உள்ளர்த்தத்தை விளக்கும் வகையில் முத்திரைகள் பிடித்தும் முகபாவங்கள் காட்டியும் ஆடுவது இதற்கு உதவியாக இருபத்தெட்டு ஒற்றைக் கை(அஸம்யுத) முத்திரைகளும் இருபத்தி நான்கு இரட்டைக்கை (ஸம்யுத) முத்திரைகளும் அவற்றின் விநியோகங்களும் அப்படியே மற்றபிற உறுப்புக்களின் அசைவுகளும் உபயோகங்களும் வகைப்படுத்தப் பட்டு, விவரிக்கப்பட்டிருக்கின்றன.

இவற்றை உபயோகித்து சொல்லுக்கேற்ப முத்திரைகளைப் பிடிப்பது மட்டும் அபிநயமாகி விடாது. அபிநயம் நால்வகைப்படும். ஆங்கிகம், ஆஹார்யம், வாசிகம், ஸாத்விகம். மேலே சொன்னது ஆங்கிகம். ஆடையணி அலங்காரங்கள் ஆஹார்யமாகவும், பாட்டு வாசிகமாகவும் கொள்ளப்படும். கடைசியான ஸாத்விகந்தான் உயிர் நாடி — அந்தந்த மனோநிலைகளில் ஒன்றி உணர்வுகளைப் பிரதிபலிக்கச் செய்தல் அபிநயிப்போர் இப்படி வேறுபட்ட உணர்வுகளை தம் முகத்தில் பிரதிபலித்துக் காட்டுவதையே பாவமென்கிறோம்.


இந்த 'பாவ'ங்களை அவர் செம்மையாகக் காட்டுவதன் பிரதிபலிப்பாய் பார்ப்போர் மனதில் எழும் உணர்ச்சியே நாட்டியத்தில் ரஸம் எனப்படுகிறது. நவரஸங்களைப்பற்றி நாமெல்லோருமே அறிவோம்.

உலகின் எல்லா நாட்டிலும் நடன வகைகள் இருக்க, நம் நாட்டு நடனக்கலையின் தனிச் சிறப்பென்ன? இந்த அபிநய விவகாரம் இப்படி விஸ்தாரமாக வளர்ந்திருக்கும் விதந்தான். அதிலும் நம் நாட்டிலேயே உள்ள பல நடனவகைகளிலுங்கூட பரத நாட்டியத்தில்தான் இது தனிச்சிறப்பு பெற்றுத் திகழ்கிறது.


ஆகவே, பரத நாட்டியம் பயிலும் மாணவிகள் சிரத்தையுடன், பல வருடங்கள் பயில வேண்டியது அவசியம். இந்த அரிய கலையின் மேன்மை குன்றாதவாறு வளர்ப்பது நம் எல்லோருடைய கடமையுங்கூட..


வண்ணப்படம் (வேறு பக்கத்தில்)

-பால்ராஜ்





— பத்மாவதி —











தேவிக்கு நமஸ்காரம்!

''பத்மா ஸனே பத்மோரு
பத்மாக்ஷி பத்ம ஸம்பவே!
த்வம் மாம் பஜஸ்வ பத்மாக்ஷி
யேந ஸௌக்யம் லபாம் யஹம்!''

(தாமரையில் வீற்றிருப்பவளே! தாமரை போன்ற தொடையினளே! தாமரை போன்ற கண்ணுடையவளே! தாமரையில் தோன்றியவளே! எதனால் நான் சௌக்யத்தை அடைவேனோ அதை எனக்கு அருளவேண்டும்.)

''புத்ர பௌத்ர தனம் தான்யம்
ஹஸ்த்யச் வாஜா விகோரதம்!
ப்ரஜானாம் பவஸி மாதா
ஆயுஷ்மந்தம் கரோது மாம்!''

(''புத்திரர்கள், பௌத்திரர்கள், தனம், தானியம், யானை, குதிரை, வெள்ளாடு, செம்மறியாடு, பசுக்கள், தேர் எல்லாவற்றையும் கொடுத்தருள்வாய். நீயே மக்களுக்கெல்லாம் தாய். என்னை ஆயுள் உடையவனாகச் செய்தருள்வாய்.'')

(ஸ்ரீஸூக்தம்)

ஸ்ரீ மூகாம்பிகை அம்மன் படஉதவி: ஸ்ரீ சாந்தா அம்மையார்
வர்ணப்படுத்தியவர்: கல்பனா

ஒரு நடிகனின் மனைவி

நாடகத்தில் பங்கேற்றவர்கள்:

கோபால்:	பி. கிருஷ்ணமூர்த்தி,
சபா செகரட்டரி:	குடந்தை குப்புசாமி,
மகன் மூர்த்தி:	மாஸ்டர் மோகன்,
கங்கா:	திருமதி. வி. ஆர். திலகம்,
விஜி:	திருமதி. ஜெயந்தி சுந்தரேசன்,
டாக்டர்:	பி. சுந்தரேசன்,
சம்பந்தியம்மாள்:	மீனாமூர்த்தி.

காட்சி 1

(பாத்திரங்கள்: கோபால், மனைவி கங்கா, கோபாலின் மகன், சபா செக்ரட்டரி.)

கோபால்: அம்மா, தாயே பராசக்தி! நான் இப்ப அரங்கேற்றம் செய்யப்போற நாடகம் 'ஓடாதே நில்' 100 மேடையைப் பார்க்கணும். நல்ல நாடகம்னு எல்லோரும் பாராட்டணும். நீதாம்மா துணை, துணை. கங்கா, கங்கா, இந்தா கற்பூரம் எடுத்துக்கோம்மா.

கங்கா: ஒண்ணு சொல்றேன். கோபப்பட மாட்டீங்களே.

கோபால்: பெண்டாட்டிதானே குடும்பத்துல ஆலோசனைக் கமிட்டித்தலைவர். நீ என்ன வேணும்னாலும் சொல்லு. தலைவி விதியேன்னு கேக்கறேன்.

கங்கா: ஒண்ணுமில்லே, இப்படிப் புதுநாடகத்துக்கு 'ஓடாதே நில்' அப்படின்னு பேர் வச்சிருக்கீங்களே. எப்படியோ இருக்குங்க. ஏற்கெனவே உங்க எட்டு நாடகங்களுந்தான் ஓடாம நின்னுப் போச்சே. இன்னும் எதுக்குங்க உங்களுக்கு விஷப் பரீட்சை?

கோபால்: கங்கா, 'ஓடாதே நில்' அப்படின்னு போட்டும் ஓஹோன்னு ஓடிச்சுன்னு எல்லோரும் சொல்லணும். அதுக்காகத்தான் இந்தப் பேரை செலக்ட் பண்ணியிருக்கேன். கலைப்படாதேகுணச்சித்திர கோபால் நடிக்கறேன். அப்படியே ஆடியன்ஸை அழ வச்சிட மாட்டேன்? இந்த நாடகம் நல்லா ஓடட்டும். நம்ம கஷ்டமெல்லாம் விடிஞ்சுடும்.

மகன்: அப்பா, அப்பா நம்ம வீட்டு வாசல்ல சபா செகரட்டரி நரசிம்ம மூர்த்தி நிக்கறார்.

கோபால்: பாத்தியா கங்கா, குடுக்கற தெய்வம் கூரையைப் பிய்ச்சா வேட்டாருமேன்னு வாசல் வழியா வந்திருக்கு. 'நீ காப்பி ரெடி பண்ணு. நான் அவரை ரிசீவ் பண்றேன். (செகரட்டரி வருகிறார்.) வாங்க சார்... வாங்க... வாங்க...

செகரட்டரி: இத பாருப்பா... நான் உங்க வீட்டுக்கு வரலே, ஸ்கூட்டர் கரெக்டா உன் வீட்டுக்கு நேரா வந்து நின்னுத் தொலைச்சுடுத்து. அவ்வளவுதான்... அப்புறம்... எல்லாம் சௌக்கியந்தானே வீட்டுல?

— கோவை அனுராதா





கோபால்: இருக்கேன் சார். சார், தயவு பண்ணி என் நாடகத்துக்கு ஒரு டேட் குடுங்க சார். 'ஓடாதே நில்.'

செகரட்டரி: அட போப்பா... உன் நாடகமெல்லாம் உப்பு சப்பில்லாமே எழுதியிருக்கே.

கோபால்: இப்ப நல்ல மசாலாவா பண்ணியிருக்கேன் சார்.

செகரட்டரி: சரி... என் ஸ்கூட்டரைக் கொஞ்சம் ஒர்க்ஷாப் வரைக்கும் தள்ளிட்டு வர்றீங்களா?

காட்சி 2

பாத்திரங்கள்: (கோபால்... கங்கா...மகன்.. விஜி...)

கங்கா: அன்னிக்கே எவ்வளவோ படிச்சுப் படிச்சு சொன்னேன். பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயம் பண்ணிட்டோம். இந்த டிராமாவை ஆரம்பிக்காதீங்கன்னு. கேட்டீங்களா? கல்யாண செலவுக்குக் கஷ்டப் படும் போது ஆயிரக்கணக்கா ரிகர்சலுக்கே செலவழிச்சுட்டு முழிக்கறீங்களே?

கோபால்: எல்லாம் உன்னால வந்ததுதான். நீ கொஞ்சம் நடிக்கத் தெரிஞ்ச பொண்டாட்டியா வந்திருந்தா உன்னையே ஜோடியாப் போட்டிருப்பேன். நடிகைக்கு நான் கொடுத்த காச இருந்திருந்தா பத்துக் கல்யாணம் பண்ணியிருக்கலாம்.

கங்கா: அது ஒண்ணுதான் கொறைச்சல். எங்கப்பா ஒண்ணும் என்னை ஒரு கூத்தாடியாப் பெக்கலே.

கோபால்: இத பாரு கங்கா, என்னைப் பத்தி எது வேணுன்னாலும் சொல்லு... என் நாடகத்தைப் பத்தி ஏதாவது பேசினே எனக்குக் கெட்ட கோபம் வரும்.

விஜி: என்னப்பா இது... கல்யாணப் பத்திரிகை அடிக்கப் பிரஸ்ஸுக்குப் போகணும்னு சொன்னீங்க. இங்க சண்டை போட்டுக்கிட்டு நிக்கறீங்களே?

கோபால்: ம்... அவங்கவங்க அவசரம் அவங்களுக்கு.

கங்கா: விஜி சொல்றதுல என்ன தப்பு? கல்யாணத்துக்கு இருபது நாள் தான் இருக்கு. பத்திரிகை வந்தாத்தானே எல்லாருக்கும் கொடுக்கலாம். உங்க நாடக டிக்கட்டா அப்படியா விக்காம இருக்கறதுக்கு?

கோபால்: அதைச் சொல்லாட்டா உனக்குத் தூக்கமே வராதே?

கங்கா: இத பாருங்க பொண்ணு பார்க்க வந்த அன்னிக்கு எல்லாத்துக்கும் மண்டையை ஆட்டிட்டு இருந்தீங்க. கல்லு நெக்லஸ் இன்னும் பண்ணலே. ஞாபகம் வச்சிக்குங்க. அது இல்லாமே கல்யாணம் நின்னு போயிடப் போகுது. அந்த மாமியார்க்காரி முழியைப் பார்த்தா ரொம்பக் கறாரா இருக்கு.

கோபால்: கவலையே படாதே கங்கா. என்னோட மூணாவது நாடகத்துக்கு வந்திருந்தாரே நகைக்கடை நாயுடு.

கங்கா: யாரு? நான் கவனிக்கவே இல்லையே?

மகன்: அட ஏம்மா? அந்த நாடகத்துக்கு வந்திருந்ததே அவர் ஒருத்தர் தானே?

கோபால்: டேய்... கிண்டலா... போடா வேலையைப் பார்த்துக்கிட்டு. இத பாரு கங்கா, அன்னிக்கே அவரு மேக்கப் ரூமுக்கு வந்து கையைப் புடிச்சு என் கிட்டே என்ன சொன்னார் தெரியுமா? கோபால் நீங்க ஒரு குணச்சித்திரமேதை. உங்க வீட்டு விசேஷம் எதுவா இருந்தாலும் என் கடைக்கு வாங்க. என்ன வேணுன்னாலும் எடுத்துக்குங்க. நான் உங்க சலைக்கு அடிமைன்னார்.

கங்கா: அப்படீன்னு அவரையே போய்ப் பார்த்து ஒரு நெக்லஸ் வாங்கிக்கிட்டு வாங்களேன். பணத்தை மெள்ள கொடுத்துடலாம்.

கோபால்: போகாம இருப்பேனா? என் கெட்ட காலம் நாயுடு திருப்பதி போயிருக்காரு. வர்றதுக்கு இன்னும் பத்து நாள் ஆகுமாம். கல்யாணத்துக்குள்ள எப்படியும் வந்துடுவாரு. நெக்லஸைப் பத்திக் கவலையே படாதே.

(சார்... போஸ்ட்.)

கோபால்: கங்கா, சம்பந்தி தபால் போட்டிருக்காரு. ஸ்பெஷல் பஸ்ஸுல வர்றாங்களாம். ஊர்கோடில இருந்தே நாதஸ்வரத்தோட ரிசீவ் பண்ணணுமாம்.

கங்கா: என்னங்க? எனக்குத் தலையைச் சுத்துதுங்க. இவ்வளவு சண்டிப்பா இருக்கறவங்க நாளைக்குக் கல் நெக்லஸ் இல்லேன்னு கல்யாணத்தையே நிறுத்திடுவாங்களே?





அதிக சுவையானது
அதிக முழுமையானது



**நீங்கள் பாசத்துடன்
ஊட்டும் ஒவ்வொரு கவளமும்
உங்கள் பாப்பாவின்
வளர்ச்சிக்குச் சிறந்ததாகும்.**

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. இதைக் கலப்பது எளிது. பாப்பாவுக்கு ஊட்டுவதும் எளிது.

பாப்பாவின் வளர்ச்சிக்கு இன்றியமையாத புரதம் நிரம்பியது. மிக ஆரோக்கியமான இரத்தத்திற்குக் கூடுதல் இரும்புச்சத்து கொண்டது. உறுதியான பற்களையும் எலும்புகளையும் பெற சரியான விகிதத்தில் கால்ஷியமும் ஃபாஸ்ஃபரஸும் அடங்கியது. பாப்பாவின் மென்மையான ஜீரண சக்திக்கென முன்கூட்டிப் பக்குவம் செய்தது.

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. அதிக முழுமையான திட உணவு.

உடல் நலத்தின் உறைவிடம்—**க்ளாக்ஸோ**

இலவசம்! குழந்தையின் முதலாண்டுப் புத்தகம்: உங்களது பிரதியைப்பெற தபால் மற்றும் இதர செலவிற்கு ரூ. 1/— தபால்தலை உள் வைத்து எழுதுவீர் இம்முகவரிக்கு—தபால் பெட்டி எண் 19119, (FCM-21) பம்பாய் 400 025.

CLARION/B/GX/4/203 TAM


சுவை, மணம் நிறைந்த காபி எது?
ஜீவனுள்ள காபி எது?
நவீன முறையில் தயாராகும் காபி எது?
தமிழ் நாட்டின் தலை சிறந்த காபி எது?
என்ற விவரங்களை கம்ப்யூட்டர்லே
அலசச் சொன்னேனே, என்ன பதில் கிடைச்சது?
பதில் இதுதான் சார்!
நரசூஸ் காபி...
ஜீவனுள்ள ஒரே காபி!
நரசூஸ் காபி
தெர்மலோ முறை காபி!
ADWAVE NCC 2597
நரசூஸ் காபி கம்பெனி சேலம் 636 007. கிளைகள்: தமிழ்நாடெங்கும்.



கோபால்: கவலையை விடு... திருப்பதி போன நாயுடு வந்தார்னு ப்ராப்ளம் தீர்ந்துடும்.

கங்கா: எப்படியோ அந்த ஏழு மலையான் தான் என் பொண்ணு கல்யாணத்தை நடத்தி வைக்கணும்.

காட்சி 3

பாத்திரங்கள்: (கோபால், கங்கா, மகன், விஜி, சம்பந்தி, டாக்டர்.)

கங்கா: என்னங்க இது... அங்க மாப்பிள்ளை அழைப்புக்கு எல்லாம் உங்களைத் தேடறாங்க. நீங்க வெளியே வந்து கையைப் பிசைஞ்சுட்டு நிக்கறீங்க?

கோபால்: என்ன கங்கா பண்ணுவேன்? நாயுடு வந்துட்டாரான்னு பாக்க ஆள் அனுப்பிச்சேன். இன்னும் வரலைன்னு தகவல் வந்திடுச்சு. ம்... எல்லாம் என் போதாத காலம்.

கங்கா: ஏங்க, உங்க டிராமா பிரண்ட்ஸ் யாருகிட்டயாவது உதவி கேட்டுப்பாருங்களேன்.

கோபால்: ஒரு ரூபாய் டிக்கட் கொண்டு போனாலே தலை கால் தெரியாமல் ஓடறான். இவ்வளவு பெரிய தொகையை யார் தருவாங்க?

விஜி: (அழுகிறாள்.) அம்மா... அம்மா.)

கங்கா: ஐயையோ, என்னடி விஜி? ஏன் அழுறே? இங்க வாடி எல்லாரும் வேடிக்கை பாக்கப் போறாங்க.

விஜி: அம்மா, நான் டிபன் சாப்பிட்டுக் கைகழுவப் போனேன். அந்தப் பக்கந்தானே பிள்ளை வீட்டுக்காரங்க தங்கியிருக்கிற ரூம் இருக்கு. அங்க பச்சைப் பட்டுப் புடவை கட்டிக்கிட்டு ஒரு அம்மா நின்னுக்கிட்டுப் பெரிசா சத்தம் போட்டுப் பேசிக்கிட்டு இருந்தாங்கம்மா. நான் வந்ததைக் கூடக் கவனிக்கலை.

கங்கா: அதுதான் விஜி உன்னோட அத்தை. என்ன சொன்னா?

விஜி: சாப்பாடெல்லாம் முடிஞ்ச பிறகு சீரெல்லாம் பார்க்க வர்றாங்களாம். ஏதாவது ஒண்ணு கொறைஞ்சாலும் கண்டிப்பாய்த் தாலி கட்டக் கூடாதுன்னு பேசிக்கிட்டு இருக்காங்கம்மா.

கங்கா: உன்னை லவ் பண்ணின அந்த மன்மதன் சும்மாதான் இருந்தானா?

விஜி: அவரு லவ் பண்ணினதே பெரிசு. ரொம்ப பயந்த சுபாவம் வேறே. பெரியவங்க என்ன சொன்னாலும் தலையை ஆட்டிடறாரு. கல் நெஞ்சம் இல்லாம இந்தக் கல்யாணம் நடக்கும்னு எனக்கு நம்பிக்கையே இல்லேம்மா.

கங்கா: என்னங்க... என்னங்க எனக்குத் தலையைச் சுத்தறதுங்க. வாந்தி வர்ற மாதிரி இருக்குதுங்க.

கோபால்: ஐயையோ... கங்கா... கங்கா... உனக்கு என்ன ஆச்சு? என்ன இது? என்ன வாயெல்லாம் இப்படி இழுத்துக் கிட்டுப் போகுது? கங்கா... என்னம்மா உனக்கு ஆச்சு? என்ன ஆச்சு?

விஜி: அப்பா... அம்மாவைக் கொஞ்சம் பிடிச்சுக்குங்கப்பா.

சம்பந்தி: என்ன சம்பந்தி? உன் ஒய்ஃபுக்கு என்ன ஆச்சு?

கோபால்: என்ன ஆச்சோ தெரியலைங்க... பத்து நாளாவே கல்யாண அலைச்சல். ஒருத்தியாகவே பாடுபட்டிருக்கா.

சம்பந்தி: சரி, சரி... கொஞ்சம் ஹெல்ப் பண்ணுங்க. உள்ளே கொண்டு போயிப் படுக்க வைக்கலாம்.

விஜி: அப்பா... டாக்டருக்குப் போன் பண்ணுங்கப்பா.

சம்பந்தி: வேண்டாம்மா. என் தம்பிப் பையனே ஒரு டாக்டர்தான். அவனும் இந்தக் கல்யாணத்துக்கு என்னோட வந்திருக்கான். அவனையே ட்ரீட்மெண்ட் குடுக்கச் சொல்றேன்.

மகன்: டாக்டர்... எங்கம்மாவுக்கு எப்படி இருக்கு டாக்டர்? ஒண்ணும் ஆபத்து இல்லையே?

டாக்டர்: இன்னும் 48 மணி நேரத்துக்கு ஒண்ணும் சொல்ல முடியாது. முழியே நெலைச்சு நிக்க மாட்டேங்குது. கைகால் எதுலயும் சொரணையே இல்லே. நான் ஒரு மருந்து எழுதித் தரேன். வாங்கிக் கொடுங்க. காலம்பற வரைக்கும் பாத்துட்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கிட்டுப் போகலாம்.

கோபால்: டாக்டர் எப்படியாவது என் ஒய்ஃப் உயிரைக் காப்பாத்திடுங்க. அவள் இல்லாட்டி இந்தக் குடும்பமே இல்லே டாக்டர். குடும்பமே இல்லே.

கங்கா: என்னங்க... இங்க வாங்க. என்னைப் பத்திக் கவலைப் படாதீங்க... எத்தனை செலவழிச்சு இந்தக் கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணியிருக்கீங்க. என் பொண்ணு கழுத்துல தாலி ஏர்ற வரைக்கும் நான் நல்லா இருந்தா அதுவே போதுங்க.

காட்சி 4

பாத்திரங்கள்: (கோபால், கங்கா, மகன் மூர்த்தி, மகள் விஜி, சம்பந்தி, செண்பகம்)

சம்பந்தி: இது உனக்கே நல்லா இருக்கா செண்பகம்? அந்தம்மா முடியாம இருக்

கும்போது நாமதான் கொஞ்சம் விட்டுக் கொடுக்கணும்.

செண்பகம்: ஆமா, உடம்பு இன்னிக்கு இப்படி இருக்கும். நாளைக்கு நல்லா ஆயிடும். அதுக்காக செய்ய வேண்டியசீர் வரிசைகளை சரியா எடுக்க வேண்டாங்களா?

சம்பந்தி: வழக்கம் சரிதான். அதுதான் அவரு நாளைக்குக் காலம்பற கண்டிப்பாய் நெக்லஸ் போடறேன்னு சொல்றாரே. அப்புறம் இப்படியே பேசிக்கிட்டுப்போனா அதுக்கு ஒரு முடிவே இல்லாம போயிடும். சீரைப் பத்திப் பேசறதை விட கல்யாணத்தை எவ்வளவு சீக்கிரம் முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் முடிக்கணும். ஏற்கெனவே அந்த அம்மாவுக்குக்கொஞ்சம் ப்ளட் ப்ரஷர் இருக்கும் போலஇருக்கு.

செண்பகம்: ஏன் சம்பந்தி எதுக்கெடுத்தாலும், நாயுடு நாயுடுங்கறீங்களே, அவரை நம்பியா இந்தக் கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணினீங்க?

கோபால்: அந்த ஏழுமலையானை நம்பித் தாம்மா இருக்கேன். அவன் என்னை ஒரு நாளும் கைவிட மாட்டான்.

சம்பந்தி: சம்பந்தி, நீங்க ஒண்ணும் கவலைப் பட வேண்டாங்க. ஆக வேண்டிய காரியத்தைக் கவனிங்க. காலம்பற நெக்லஸ் இல்லாவிட்டாலும் கல்யாணம் நடக்கும். முதலில் அந்த அம்மா நல்லபடியா இருக்கட்டும். வசதிப் படும்போது செஞ்சுப் போடுங்க போதும்.

(மேளம் ஒலிக்கிறது. முகூர்த்தம் முடிகிறது.)

காட்சி 5

கங்கா: என்னங்க பொண்ணு மாப்பிள்ளை கோஷ்டியை அனுப்பிக் கொடுக்க ஸ்டேஷனுக்குப் போனீங்களே. நம்ம பையன் வந்துட்டானா?

கோபால்: வந்துடுவாம்மா. கங்கா நீ கவலையே படாதே. அதுதான் கல்யாணம் நல்லபடியா முடிஞ்சுடுத்தே. எப்படியோ சேர்லயாவது உக்காந்து உன் பொண்ணோட கல்யாணத்தைப் பார்க்க முடிஞ்சுதே.

மகன்: என்னப்பா அம்மாவுக்கு உடம்பு எப்படி இருக்கு?

கங்கா: வாடா மூர்த்தி.. விஜி ஸ்டேஷன்ல அழுதாளா?

மகன்: அழாம இருப்பாளாம்மா. உன்னைத் தான் ஜாக்கிரதையாப் பார்த்துக்கச் சொன்னா. அவளுக்கு உன்னை இந்தநிலைமையில விட்டுட்டுப் போக மனசே இல்லே. மாப்பிள்ளைதான் சமாதானப் படுத்தினாரு.

கோபால்: கங்கா, ஏற்கெனவே கல்யாணத்துக்கு நெறைய செலவாயிடுச்சு. இன்னும் உனக்கு மருந்து மாத்திரை செலவு எவ்வளவு ஆகுமோ தெரியலை. கங்கா நான் செலவைப் பத்திக் கூடக் கவலைப் படலே. நீ பழைய மாதிரி எழுந்து வீட்டுல நடந்தா, அதுவே போதும்.

கங்கா: நீங்க ஏங்க வீணுக் கவலைப்படறீங்க? நான் இப்பவே நடக்கறேன். போறுமா?

கோபால்: கங்கா... எழுந்திருக்காதே. டாக்டர் உன்னை பெட்டை விட்டு இறங்கக் கூடாதுன்னு சொல்லியிருக்காரும்மா.

கங்கா: பாவம் டாக்டர்... வியாதி இருந்தா என்னன்னு கண்டுபிடிப்பாரு. இல்லாத வியாதியை அவரு என்னன்னு சொல்லுவாரு? அவரே இத்தனை நேரம் மண்டை கொழும்பித்தான் போயிருப்பாரு.

கோபால்: இல்லாத வியாதியா? கங்கா உனக்கென்ன ஆச்சு? மூளை வேற குழம்பிக் கிழம்பிப் போயிடுத்தா?

கங்கா: ஏங்க? நீங்க ஒரு டிராமாடைரக்டர். நடிகர்னு சொல்றீங்க. யாரு நடிக்கறாங்க, யாரு உண்மையாய்க் கஷ்டப்படறாங்கன்னு உங்களுக்கே கண்டுபிடிக்க முடியலையே.?

கோபால்: என்னது? நீ நடிச்சயா?

கங்கா: ஆமா. நெக்லஸ் இல்லாம கல்யாணம் நின்னு போகும் போல இருந்தது. நாயுடுவும் திருப்பதியில இருந்துத் திரும்பற வழியைக் காணும். சம்பந்தி வீட்டுக் காரங்களை இசை திருப்ப இப்படி ஒரு வியாதி வந்த மாதிரி நடிச்சேங்க. அவங்களோட அனுதாபம் என் பக்கம் திரும்பிடிச்சு. நெக்லஸைப் பத்திப் பேச்சே எடுக்காம கல்யாணமும் முடிஞ்சிருச்சு.

கோபால்: அடிப்பாவி. அப்போ பொய்யைச் சொல்லியாக் கல்யாணத்தை முடிச்சே?

கங்கா: பொய்யா, நல்ல காரியம் நடக்கப் பொய்யைச் சொன்னா பாவம் இல்லேன்னு பெரியவங்களே சொல்லியிருக்காங்க. பெண்ணைப் பெத்தவங்களைக் கசக்கிப் பிழியற ஒரு கோஷ்டி கிட்டே இப்படி நடிச்சது தப்பே இல்லீங்க.

கோபால்: என்ன இருந்தாலும் நீ குணச்சித்திர கோபாலோட பொண்டாட்டியாச்சே?

மகன்: அம்மா நம்ம விஜி கல்யாணத்துக்கு இப்படிக் கஷ்டப்பட்டதுனால என் கல்யாணத்துல ஒரு டிமாண்ட் இல்லாமப் பொண்ணு வீட்டுக் காரங்களை நாம நடத்தணும். ஏம்மா...

கங்கா: போயி வேலையப் பாருடா... யார் கிட்டே என்ன வாங்கணும்னு எனக்குத் தெரியும்.

மகன்: அப்பா...

கோபால்: அவர்கள் அப்படித்தான்டா. நடிகைக்கு நடிகை பொறந்திருப்பா. கவலையை விடு.

இலவசமாகப் பெறுவீர்

உடனடி சக்திதரும்

க்ளூகோன்-டி® யுடன்



கவர்ச்சியான ஸ்டேயின்லெஸ் ஸ்டீல் ஸ்பூன்

உடனடி சக்தி தரும் உங்கள் தினசரி பானத்தைக் கலக்க அருமையான வழி. 400 கிராம் க்ளூகோன்-டி பாக்கெட்டுடன் பிரகாசமான ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஸ்பூனை இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

விட்டமின்-டியுடன் கால்ஷியம் மற்றும் பாஸ்பரஸ்ஸினைக் கொண்ட க்ளூகோன்-டி புத்துணர்ச்சி தருவது, குளிர்ச்சியானது; சக்தி தருவது. பால், தேநீர், காபி, தண்ணீர் மற்றும் ஐஸ்ஸுடன் கலக்கியோ அல்லது அப்படியேயோ அருந்தலாம். க்ளூகோன்-டி யுடன் கிடைக்கும் இலவச ஸ்பூனைக் கொண்டு கலக்கிக் குடிக்கலாம்.



வரம்புக்குட்பட்ட இருப்பு: குறிப்பிட்ட விற்பனைத் தலங்களில் மட்டுமே கிடைக்கும்.

GLL-9686

உடனடி சக்தி பெற—க்ளூகோன்-டி®

ஒரு • கோடிக்குப் • போனேம்

''உங்க பத்திரிகையில யோசனை கள்ளாம் ரொம்ப நல்லா இருக்கு. ஒரு தடவை புளிச்ச தோசை மாவிலே பால் ஊத்தினு புளிப்புப் போயிடும். தோசையும் மெத்துன்னு வரும்னு படிச்சேன். போன வாரம் அதுப்படி செஞ்சேன், பாருங்க, ரொம்ப நல்லா இருந்தது...''

என்று ஒரு இல்லத்தலைவியின் ஆர்வத்தோடு பேசிய அந்தப் பெண்மணியை முதலில் சாதாரண மாகத்தான் நினைத்து விட்டேன். அவருடன் பேசப் பேச பெரிய வாமன அவதாரமே எடுத்து விட்டார் தன் சாதனைகளின் மூலம்.

ஒரு தமிழ்ப் பெண்மணி வெளி மாநிலத்தில் போய் அங்கேயே கலந்து ஒரு கிராமத்திற்கே ஆதர்சமாக விளங்கு கிறார் என்றால் ஆச்சரியமாக இல்லையா? ஆனால் திருமதி பத்மா ஸ்ரீநிவாஸனின் அடக்கத்தைப் பார்க்கும் போது இவர் இன்னும் சாதிப்பார் என்றுதான் தோன்றுகிறது.

''நாங்க ரொம்ப வருஷமா இங்கேயே இருக்கறதாலே பெங்களூரே சொந்த ஊர் மாதிரிதான் ஆயிட்டுது. இங்கு இருக்கிற தமிழ்ப் பெண்கள் ளாம் சேர்ந்து ஒரு லேடீஸ் கிளப் ஆரம்பிக்கணும்னு ஆரம்பிச்சோம். இது 1961 கதை. அப்புறமா தமிழர் மட்டும்னு பிரிக்கறது தப்புன்னு 'தட்சிண பாரத மகிளா சங்கம்'னு பேரை மாத்திக்கிட்டோம். பல கன்னடப் பெண்களும் சேர ஆரம்பிச்சாங்க. இப்போ பாதிக்குப் பாதி இருவரும் கலந்திருக்கிறோம்.

முதலில் பக்திப்பாடல், பஜனை, டெய்லரிங் என ஆரம்பித்தவர்கள் சமூக சேவை பக்கம் திரும்பினோம்..''

அது சிறிய அளவிலே இருந்தாலும் மிகச் சிறப்பான வகையிலே அமைந்து விட்டது. பெங்களூரிலிருந்து 25 கி. மீ. தூரத்திலுள்ள காடுகோடி என்ற கிராமத்தைத் தத்து எடுத்துக் கொண்டுள்ளார்கள்.

அங்கு வயல்காட்டில் வேலை பார்க்கும் பெண்கள் மரத்தடியில் தூளி கட்ட வேண்டாம்; பாலுக்கு அழும் குழந்தைகளுக்கு, கஞ்சிக்கு அழும் சிறுமிக்கு எனக் கவலைப்பட வேண்டாம்.

இந்த தட்சிண பாரத மஹிளா சங்கம் நடத்தும் 'கிரெச்'சில் விட்டு விடலாம்.

''அந்தக் குழந்தைகள் காலையில் வந்தவுடன் குளிப்பாட்டி யூனிபார்ம் போட்டு ஒழுங்கு படுத்துகிறோம். சத்துள்ள



பால், சாப்பாடு எல்லாமே இலவசம். இரண்டு நர்சரி வகுப்புக்களும் நடத்துகிறோம். பெரிய பெண்களுக்கு டெய்லரிங் கற்றுக் கொடுக்கிறோம்...''

கொடுத்து வைத்த கிராமம்தான். கொழுகொழுவென்று அங்கேயே இருக்கும் பசுக்களின் பால் இந்தக் குழந்தைகளுக்குத்தான். இவர்களா வயற்காட்டில் வேலை செய்யும் பெண்களின் குழந்தைகள் என்று ஆச்சர்யமாகத்தான் இருக்கிறது!

மேலும் கிராமத்தின் வயது வந்த பெண்களுக்குத் தையல், தறிநெய்தல், பால் பண்ணை, தோட்டம் பராமரித்தல் எனப் பலவற்றையும் கற்றுக் கொடுக்கிறார்கள்.

இவர்கள் Country Women's Association of the World (ACWW) என்ற அகில உலகப் பெண்கள் ஸ்தாபனத்தின் அங்கீகாரம் பெற்றவர்கள். அதனால் வெளிநாட்டுப் பெண்கள் இங்கு வருவதும், இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் அங்கு செல்வதும் பல நாட்டு விஷயங்களைத் தெரிந்து கொள்ளத்தான். அகில உலக ரீதியில் மன்ற உறுப்பினர்களுக்கு நடந்த கட்டுரைப் போட்டிகளில் திருமதி பத்மா சீனிவாசன் உட்பட பலரும் பரிசுகள் வாங்கியிருக்கிறார்கள்.

சங்கத் தலைவியான திருமதி பத்மா இப்படி உறுப்பினர்களின் சேவைமனப்பான்மையைப் பல வழிகளிலும் பயன்படுத்திக் கொள்கிறார். காடுகோடிக்கு உறுப்பினர்கள் வந்து போவதால் குடும்பத் தலைவிகளுக்கு மாறுதலுக்கு மாறுதல், சேவைக்கு சேவையும் ஆயிற்று.


இவையும் தவிர பார்வையற்ற பெண்களுக்கு தறி நெய்தல், சேர் பின்னுதல் போன்றவற்றைக் கற்றுத் தருகிறார்கள். ஆர்வமுள்ள பெண்களுக்கு ஜூஸ், ஜாம் செய்தல் போன்றவற்றைக் கற்றுத் தருகிறார்கள்

''இந்த இருபத்தி நான்கு வருட சங்க வாழ்வில் எங்களால் மறக்க முடியாதவர்கள் டி. வி. எஸ். குடும்பத்தார்தான். எப்பொழுது உதவி என்று போனாலும் தயங்காமல் அள்ளிக் கொடுத்தவர் திரு. ராஜம்தான். டி. வி. எஸ். ஐயங்காரின் பேத்தி திருமதி சரளா கிருஷ்ணன் இன்றைக்கும் எங்களில் ஒரு மெம்பராக இருந்து கொண்டு பல்வேறு விதங்களில் உதவி செய்து வருகிறார்...''

சமூக சேவையை எத்தனை வழியாகச் செய்ய முடியுமோ, அத்தனை வழிகளிலும் செய்யும் திருமதி பத்மா சீனிவாசனை திருப்பதி தேவஸ்தானமே தங்க மெடல் கொடுத்துப் பாராட்டியிருக்கிறது. வேறென்ன வேண்டும்?

—டி. எம். ஆர்.









சமீபத்தில் ஸ்ரீமதி. கௌசல்யா ஸ்ரீ. கிருஷ்ணசாமி இவர்களின் புதல்வியான சந்தியாவின் நடன அரங்கேற்றம் நடைபெற்றது. நாட்டியத்திற்குத் தேவையான நல்ல முக பாவம், லய சுத்தம், அங்க சுத்தம் இவைகள் மூன்றும் ஒருங்கே சந்தியாவிடம் அமைந்துள்ளது ஒரு வரப் பிரசாதம் என்று கூறலாம்.



கோவை டி. பி. எஃப் டெக்ஸ் டைல்ஸ் செல்வராஜன் அவர்களின் புதல்வி செல்வி பிரியதர்சினியின் நடன அரங்கேற்றம் சமீபத்தில் நடந்தது. திரு. கோவிந்தராஜுலு, திருமதி சந்திரகாந்தி கோவிந்தராஜுலு இருவரும் செல்வி பிரியதர்சினியைவாழ்த்தி நல்லாசிகளை வழங்கினர்கள்.



வீணையும் பயின் பிரியாவுக்குச் சிறு வயதிலிருந்தே பரத நாட்டியத்தில் அளவற்ற ஈடுபாடு. அவரது நாட்டிய அரங்கேற்றம் சமீபத்தில் விமரிசையாக நடைபெற்றது. நடன அரங்கேற்றத்துக்கு முன் இசையரசி ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் ஆசியைப் பெற்ருள் பிரியா. இவரது தந்தை திரு. வி. நாராயணசுவாமி மெட்ராஸ் போர்ட்டிரஸ்டில் அதிகாரி.

ஆடினர்!

பாடினார்!

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின் பொன் விழாவைக் கடந்த 6—ம் தேதியிலிருந்து 9—ம் தேதி வரை இந்து தர்மமன்றத்தார் விழாவாகக் கொண்டாடினார்கள். அவ்விழாவில் திருமதி ஜானகி சுப்ரமணியத்தின் ஆதிசங்கரரின் ''கோவிந்தம் பரமானந்தம்'' ரெகார்டை' திரு. எம்.ஏ.எம்.ராமசாமி செட்டியார் வெளியிட்டார். ஆதி சங்கரரின் பாடல்களை ஒவ்வொரு சங்கர ஜெயந்திக்கும் வெளியிடும் வழக்கத்தைத் திருமதி ஜானகி கொண்டிருக்கிறார்.



ஓடும் குதிரைகள்!

* ''இது கலையார்வமுள்ள பெண்மணி வசிக்கும் வீடு'' என்று அந்த வீட்டைப் பார்த்தாலே சொல்லி விடலாம்! வெளித் தோற்றத்திலேயே அழகுபட பெங்களூர் .. ஜெயநகரில் அமைந்துள்ளது திருமதி சகுந்தலா பாலுவின் வீடு. வீட்டின் முகப்பில் அழகிய பெயிண்டிங். சிறிய தோட்டமானாலும் நேர்த்தியான தோட்டம்!

'பதிக்' பெயிண்டிங்கில் தேர்ந்த கலைஞராக விளங்கும் இவர் பல புத்தகங்களை எழுதியிருக்கிறார். பல ஆங்கிலப் பத்திரிகைகளுக்கும் கலை நுணுக்கம் மிக்க கட்டுரைகளை எழுதி வருகிறார்.

இவருடைய வீட்டின் மாடியில் ஒரு கலைப் பொக்கிஷமே இருக்கிறது எனலாம். விளக்கு வெளிச்சத்தின் பின்னணியில் வண்ணம் தீட்டப்பட்ட குதிரைகள் உயிர் பெறுகின்றன. கிராமியப் பெண்மணி மூக்குத்தி மின்ன வம்பு பேசுகிறாள். என்ன நுணுக்கமான பார்வை என வியக்கிறோம். திருமதி சகுந்தலா பாலு அவ்வப்போது ஓவியக் கண்காட்சிகளையும் நடத்தி வருகிறாராம்.

—டி. எம். ஆர்.



திருமதி சகுந்தலா

இம்மாத

இல்லத்தரசி



தேர்ந்தெடுத்தவர்கள்:—

ஐஸ்வர்யா லேடீஸ் கிளப்,
நாதமுனி தெரு,
சென்னை-17.



ஃப்ளாஸ்க்

முதல் பரிசு:

தர்பூஜா பலூதா மில்க்ஷேக்

தேவையான பொருட்கள்:

தர்பூஜா (உள்ளே சிவப்பாக இருக்கும்

இரண்டாம் பரிசு: **வட்டக் கிண்ணம்**

ஸ்வீட் ஹார்ட் பானம்

தேவையான பொருட்கள்:

சர்க்கரை வள்ளிக்கிழங்கு — 400 கிராம்,
முற்றிய தேங்காய்த் துருவல் — 2 கப்,
சர்க்கரை — இரண்டரை கப்,
தேன் — 1 டேபிள் ஸ்பூன்,
கமலா ஆரஞ்சு — 3 (ஜூஸ் செய்யவும்.)
ஆரஞ்சு கலர் — சில துளிகள்.
ஆரஞ்சு எஸென்ஸ் — சில துளிகள்.

செய்முறை:

சர்க்கரை வள்ளிக் கிழங்கைத் தோல்சீவி துண்டங்களாக நறுக்கி, தண்ணீர் தெளித்து அரைக்க வேண்டும். பிறகு பால் பிழிந்து, சல்லடையில் வடி கட்டவும். (சுமார் 4 தம்ளர் பால் கிடைக்கும்.) தேங்காய்த்துருவலில், கொதிக்கும் நீர்விட்டு, பால் பிழியவும். இவ்விரு வகை பால்களையும் கலந்து, சர்க்கரை சேர்த்து அடுப்பில் 10 நிமிடங்கள்

தேங்காய் — பெரிதாக ஒரு மூடி,
ந. வெல்லம் (அல்லது) பனைவெல்லம் கால் கிலோ.
ஏலக்காய், சுக்கு — தேவையானவை.

செய்முறை:

முதல் நாள் இரவே ஊற வைத்த பருத்திக் கொட்டையைக் கல்நீக்கி, ஆட்டுரலிலோ, மிக்ஸியிலோ அரைத்து கெட்டியாகப் பால் எடுக்கவும். பச்சரிசியைத் தனியே அரைத்து எடுக்கவும். தேங்காயைத் துருவி வைத்துக் கொள்ளவும். (வேண்டுமானால் அரிசியுடனும் ஆட்டிக் கொள்ளலாம்.)

அடுப்பில் கெட்டியான பாத்திரத்தை ஏற்றிச் சுமார் 1 லிட்டர் அளவு தண்ணீர் விட்டுக் கொதிக்க விடவும். இந்நிலையில் பச்சரிசி மாவுடன் பருத்திப் பாலைக் கலந்து கொதிநீரில் விட்டு 2 நிமி. கிளறிக்கொண்டே இருக்கவும். மாவு வெந்தவுடன் பொடித்து வைத்துள்ள வெல்லத்தைக் கரையவிட்டு இறக்கும் சமயத்தில் ஏலம் சுக்கு சேர்க்கவும்.

மணமான இந்தப் பானம் உடலுக்கு மிகவும் நல்லது. செலவும் குறைவு.

—மா.

தண்ணீர் பூசணி) ஒரு கிலோ
பால் — ஒரு லிட்டர்.
சர்க்கரை — பொடி செய்தது 200 கிராம்.
முந்திரிப் பருப்பு — 25 கிராம்.
ஏலக்காய் — ஆறு.
பலூதா தயாரிக்க — கார்ன் ப்ளவர் அல்லது அரோரூட் பவுடர் 100 கிராம்.
தண்ணீர் 2 டம்ளர்.

செய்முறை:

கார்ன் ப்ளவர் அல்லது அரோரூட் பவுடரில் தண்ணீர் விட்டுக் கலந்து அடுப்பில் வைத்துக் கிளறவும். வெந்து கலர் மாறியதும் சூடாக ஓமப்பொடி நாழிகையில் போட்டு ஐஸ் தண்ணீரில் சேமியா போல் பிழிந்து கொள்ளவும். அப்படியே அரை மணி நேரம் வைத்திருந்தால் பலூதா ரெடி.

ஒரு லிட்டர் பாலை முக்கால் அளவிற்கு வற்ற வைத்துக் கொண்டு அதில் பொடி செய்த சர்க்கரையையும், ஏலக்காய்த் தூளையும் போட்டுக் கலக்கிக் குளிர வைக்கவும். தர்பூஜா பழத்தை கொட்டை நீக்கி காரட் துருவலில் துருவி பாலில் கலக்கவும். பரிமாறும் சமயம் மேலாக பலூதாவைப் போட்டுப் பொடி செய்த முந்திரி துண்டுகளையும் தூவிப் பரிமாறவும்.

—ஜெயா வெங்கட்ராயன், சென்னை-54.



தேன், மற்றும் வடிகட்டிய ஆரஞ்சு ஜூஸை விட்டுக் கலந்து, எஸென்ஸ், கலரும் சேர்க்கவும். குளிர வைத்து அருந்தலாம்.

—திருமதி ஆனந்தி பாலகிருஷ்ணன்.
பெங்களூர் 560 010.



மூன்றாம் பரிசு: தட்டு

பருத்திப் பால்

தேவையான பொருட்கள்:

பருத்திக் கொட்டை — 100 கிராம்.
பச்சரிசி — 50 கிராம்.




ஆறுதல் பரிசு: கெட்டில்

ஜல ஜீரா

தேவையான பொருட்கள்

(அளவு 10 டம்ளர் தயாரிக்க)
தண்ணீர் — 10 டம்ளர்.
புளி — எலுமிச்சம்பழ அளவு.
உப்பு — 2 ஸ்பூன்.
இந்து உப்பு — 1 டீஸ்பூன்.



கெப்பு மிளகாய் — 5,
சர்க்கரை — 3 டீஸ்பூன்.
புதினா — அரை கட்டு.
ஜீரா — 2 டீஸ்பூன்.


செய்முறை:

எலுமிச்சம் பழ அளவு புளி எடுத்து ஊற வைத்து ரசம் உண்டாக்கிக் கொள்ளவும். பிறகு 10 டம்ளர் தண்ணீர் விடவும். உப்பு, இந்து உப்பு பொடித்துப் போடவும். சீனியைப் போட்டு கரையவிடவும். மிளகாய் புதினா, ஜீரா சற்று வறுத்து மிக்ஸியில் உலர் பொடியாக இடித்துப் போடவும். கலக்கி விருந்தினர்களுக்குக் கொடுக்கவும். லஞ்ச், டின்னர் முதலியவற்றிற்கு அழைத்தால் முதலில் இந்தப் பானத்தைக் கொடுப்பது வழக்கம். இதையே சற்று திக்காகச் செய்து கொதிக்க வைத்து பானிபூரிக்கு அளிப்பது வழக்கம்.

—டி. ஸ்ரீலதா, பம்பாய்—36.

அனைத்துக் கல்லூரி மாணவ, மாணவியர் கவிதைப் போட்டி

அனைத்துக் கல்லூரி மாணவர் கவிதைப் போட்டியில் பரிசு பெற்ற சென்னை எத்திராஜ் கல்லூரி மாணவி சுமதியும், ஆண்டாள் பிரியதர்சினியும்கூழற் கேடயம் பரிசு பெறுகின்றனர். பரிசு வழங்குபவர்: தமிழக மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் திருமதி. லலிதா காமேஸ்வரன்.





ஆறுதல் பரிசு கெட்டில்

பா(ல்)ம் ப்ரூட் டிரிங்க்

தேவையான பொருட்கள்:


நுங்கு — 10,
ஏலக்காய் — 4,
சர்க்கரை — 150 கிராம்.
பால் — அரை லிட்டர்,
ஐஸ் — 100 கிராம்.

செய்முறை:

நுங்கைத் தோல் நீக்கிப் பொடிப்பொடியாக நறுக்கிக் கொள்ளவும். சர்க்கரை, பால், ஏலக்காய்த் தூள் ஆகியவற்றை ஒன்றாய்க் கலந்து பாத்திரத்தில் ஊற்றி அதில் நுங்கையும் போடவும். சர்க்கரை கரையும்படி நன்றாகக் கலக்கவும். பின்பு ஐஸ்கட்டியை சேர்த்து 5 நிமிடம் கழித்துப் பருக வேண்டும்.

—வி. சித்ராராணி, கோவை.

என் சமையல் சாம்ராஜ்யத்தில் தங்கத்திற்கு மதிப்பில்லை செம்பிற்கோ ஏக மதிப்பு.



செம்பின் திறத்திற்கு ஜெயின் ஒன்றே சாட்சி!

- 60% FUEL SAVING
- EVEN HEATING ENSURES NON-STICKY FOOD
- EASY TO CLEAN and SHINE

Only Jain

காலை நேரம் அவசரங்களுக்கு உரிய நேரம். ஆம், குறித்த நேரத்தில் அலுவலகம் செல்லும் எனக்கு என் கணவர், மற்றும் என் குழந்தைகளின் ஆரோக்கியம் மிக மிக முக்கியம். அவர்களின் தேவைகளை நிறைவு செய்து உணவு படைத்து செல்வதில் இருக்கும் திருப்தியே அலாதி. பரபரப்பான காலை நேரத்தில் விரைவாக சமைப்பது என்பது கடினமான காரியம் தான். இதற்கு ஈடு கொடுப்பது செம்பு அடிப்பாகமுடைய ஜெயின் ஸ்டெயின் லெஸ் ஸ்டீல் பாத்திரங்களே!

எரிபொருள் — நேரம் மிச்சம்

எரி பொருளை 60%க்கும் மேலாக மிச்சப் படுத்தி சூட்டினை சீராகப் பரப்பி, நல்ல ருசியான உணவை தீய்ந்துபோய் ஒட்டிக் கொள்ளாமல், மணம் குறைவின்றி அளிக்கிறது ஜெயின். சமையல் அறையே கதி என்று என்னை ஆக்கி விடாமல், சீக்கிரமே சமையலை முடித்து பல உபயோகமுள்ள மற்ற காரியங்களில் என்னை பங்கு கொள்ள வைக்கிறது ஜெயின்!

இட்லி குக்கர், ஹண்டி, கோதாவரி குண்டு, சாஸ்பேன், ஃப்ரைபேன், வாணலி, டோப், பருப்பு சட்டி, உருளி இப்படி பலப்பல.

என்னைப்போல் உள்ள ஒவ்வொரு இல்லத்தரசிக்கும் ஏற்றதொரு வரப்பிரசாதம் ஜெயின் ஒன்றே!


Jain

செம்பு அடிப்பாகமுடைய ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள்.

250க்கும் மேற்பட்ட வீட்டுச் சமையலறைச் சாதனங்கள்.

ஜெயின் ஸ்டெயின்லெஸ்.
46, ரகுநாயகலு தெரு,
பார்க் டவுன்
சென்னை-600 003.
போன்: 31545

VC-JS-84



15 வருடங்களாக நம்பிக்கைக்கு உகந்தது ஜெயின்!

★ எல்லா எவர்சில்வர் பாத்திரக் கடைகளிலும் கிடைக்கும்.

சொல்ல விரும்புகிறோம்

● தன் குடும்ப விவகாரங்களையும், திரையுலகில் ஏற்பட்ட அனுபவங்களையும் ஒளிவு மறைவு இல்லாமல் கூறிய ராஜகலோசனின் பேட்டி மனதைத் தொட்டது.
வி. ஜெயவேலு, அத்திமலைப்பட்டு.

● 'வழிகாட்டும் பெண்மணிகள்' கட்டுரை சரளமாகச் சென்று கொண்டிருக்கிறது. மகாத்மாவுக்கும் குறைகளிருக்கும் என்பதனை அழகாகவே காட்டியுள்ளார். கஸ்தூரி பாவின் பொறுமை இந்தியப் பெண்மணிகளுக்கு ஒரு சிறப்பு உதாரணம்.
இ. கேசவன், புதுதில்லி—19.

● கடன் வாங்குவது தவறு — அறுவரின் பேட்டி வாழ்க்கையில் ஒவ்வொருவரும் அவசியம் கடைப்பிடிக்க வேண்டிய பயனுள்ள கட்டுரையாகும்.
சண்முகத்தாய் செல்லையா, சாத்தூர்.

● ''ஆடிப் பட்டம் தேடி விதை'' என்பதற்கு அடையாளமாய் 'வீட்டிலுள்ள தோட்டத்தை எப்படிச் செப்பனிடுவது?'' என்று நாங்கள் சிந்திக்கும் வேளையில் — ''வீட்டில் ஒரு தோட்டம்'' என்ற பயனுள்ள கட்டுரையைத் தந்து எம்மை வியப்பில் ஆழ்த்தி விட்டீர்கள்!
நாகை. பொன்னி, நாகப்பட்டினம்—1

● தனக்குக் கிட்டாத வாழ்க்கை இவளுக்கு கிடைப்பதா? என்று எண்ணுகிற 'முதுகன்னிகளிடம்' சிக்கித் தவிக்கும் 'இளந்தளிர்'களின் பரிதாப நிலையை படித்த போது 'சில பெண்களிடம் ஏனிந்த ராட்சஸத்தனம்?'' என்று கேட்காமல் இருக்க முடியவில்லை.
''பெண் எப்போதும் பெண்ணாகத்தான் இருக்க வேண்டும். பேயாக மாறக்கூடாது'' என்பதை அப்படிப்பட்ட பெண்கள் உணர்வார்களா?
—திருமதி. லீலா, இரணியல்.

● ''வைக்கோல் பகக்கள்'' மிகவும் அற்புதமாக இருந்தது. நெஞ்சை நெகிழ வைத்து விட்டது. இன்று நாட்டிலேயே பல ஆண்கள் வைக்கோல்பகக்களாகத்தான் இருக்கிறார்கள். இந்தக் கதையைப் படித்த பிறகாவது மாட்டுப் பெண்களும் மனம்மாறி ஆண்கள் வைக்கோல் பசுவாக மாறுவதைத் தடுக்க வேண்டும்.
என். வெங்கட்ராமன், சென்னை—28.

● திராட்சை சீசனுக்குப் பொருத்தமாக ('அழகுக்குக் கொஞ்சம் திராட்சை!') திராட்சை பற்றிய சூடான சுவையான தகவல்கள் மிகப் பயனுள்ளதாக இருந்தது.
ச. புகழேந்தி, திருவையாறு.

● 'ஆபரேஷன் என்றாலே அரண்டு விடுகிறார்கள்' மருத்துவக் கட்டுரையானது, 'அப்பெண்டிசைடிஸ்' பற்றியும், தைராய்டு பற்றியும் விரிவான விளக்கங்களைக் கொண்டிருந்தது.
இரா. பாஸ்கரன், இலத்தூர்.



மிருணாளினிக்கு குர்ஜாரி பரிசு

வாழ்க்கையில் உன்னத சேவை செய்வோருக்குப் பரிசுகளும் பாராட்டுகளும் வந்து குவிவதில் அதிசயமில்லை. அஹமதாபாத்தில் ஐந்தாவது வருடாந்திர விஸ்வ குர்ஜாரி பரிசு நடன வித்தகி மிருணாளினி சாராபாய்க்குக் கிடைத்துள்ளது!

ஒரு கலைப் பாட்டுடன் அமைந்த பேழை, 5001 ரூபாய் பணமுடிப்பு, வாழ்த்து மடல் ஆகியவற்றை அக்டோபரில் தாகூர் ஹாலில் ஒரு விமரிசையான வைபவத்தில் வழங்கவிருக்கிறார்கள். சர்வதேசப் பெருமையை நாட்டியக்கலை நர்த்தகி கொணர்ந்து சேர்த்ததற்காக இந்தப் பரிசு என்று அறிவித்திருக்கிறார் 'விஸ்வகுர்ஜாரி' நிறுவனத்தின் தலைவர் விநோத்சந்திரஷா.

—பி. எஸ். எம்.

வயதானவர்களுக்கு மட்டும் (அல்ல)



சலிப்பு, தனிமை, பயனற்ற — உபயோகமற்ற நிலைமை, மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டியதன் அவசியம், போன்ற உணர்வுகள் வயதானவர்களை மிகவும் பாதிக்கிறது.

அதனால் அமைதியாக, திருப்தியுடன், அனுபவிக்க வேண்டிய காலத்தை, பெரும்பான்மையோர் சுயநலத்தில், உற்சாகமில்லாமல், குறை சொல்லிக் கொண்டு விரோத மனப்பான்மையை வளர்த்துக் கொண்டு காலந் தள்ளுகின்றனர்.

இந்த மாதிரியான எதிர்த்தாக்கு நியதிக்கு மாறான செய்கையல்ல.

குழந்தைகள் வளர்ந்து அவரவர் வழிச் சென்ற பின், முழுநேர வேலையிலிருந்து ஓய்வு பெற்று, உடலும் சிறிது தளர்ந்து போனால், எவருக்குமே 'நான் எதற்கும் பிரயோசனமில்லை;' 'யாருக்கும் தேவையில்லை', என்ற உணர்வு தான் தோன்றும். இது போன்ற காரணங்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ளும்படியானது தான் என்றாலும், இதன் விளைவு விரும்பத் தகாதது. தவிர்க்கப்பட வேண்டியது.

இந்த மனக்கிளர்ச்சி, வாழ்க்கையின் பொற்காலமான, நம் பிற்காலத்தைப் பாதிக்க நாம் இடம் கொடுக்கக் கூடாது.

இதற்காக நாம் செய்ய வேண்டிய வைத்தியம் மிகவும் சுலபமானது. எப்பொழுதும் சுறுசுறுப்பாக ஏதேனும் வேலையில், அக்கறையுடன் நம்மை ஈடுபடுத்திக் கொள்வதுதான்.

நிரப்ப முடியாத ஒழிவு நேரம் மனத்தத்துவ சாஸ்திரப்படி, மிகவும் ஆபத்தானது. இளைஞர்கள் அந்த நேரத்தில் மற்றவர்களுக்குத் தொல்லை கொடுக்கின்றனர். வயதானவர்கள் தங்களையே வருத்திக் கொள்கின்றனர்.

நம் முழுத்திறமையையும் உபயோகப்படுத்த இதுவே சிறந்த தருணம். ஆத்ம சோதனைக்கு இது நேரமில்லை.

உடலால் சுறுசுறுப்பாக இருக்கவேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக, நம் பெண்கள் (ஒரு சிலரைத் தவிர) விளையாட்டில் ஈடுபடுவதில்லை. மேலை நாடுகளில் வயதானவர்களும் டென்னிஸ், Golf போன்ற விளையாட்டுக்களில் ஈடுபடுகிறார்கள். நம்மவர்கள் அப்படிச் செய்யா விட்டாலும் காலையும், மாலையும் வெளியில் உலாவப் போகலாம். வேலையில்லாமல் போகப் பிடிக்கா விட்டால் காய்கறி, சாமான்கள் வாங்க நடந்து போகலாம். கோவிலுக்குப் போகலாம்.

தோட்டம் உள்ளவர்கள் தோட்டத்தைப் பராமரிக்கலாம். வீட்டு வாசலில் தானே பெருக்கி, நீர் தெளித்து கோலம் போடலாம். 'எனக்கு இனிமேல் என்ன வேண்டும்' என்று சொல்லாமல், எப்பொழுதும் சுத்தமாக, கச்சிதமாக அலங்காரம் செய்து கொள்ளலாம். (எனக்குத் தெரிந்த ஒரு 80 வயதுக் கிழவி ஒருவர், பக்கத்துக் கடைக்குப் போவதானாலும், தலையை வாரி



முடிந்து கொண்டு, மாற்றுப் புடவை உடுத்திக் கொண்டு தான் போவார்.)

சுருக்கமாக முன்பு எதற்கெல்லாம் நேரமில்லாமல் இருந்ததோ அதையெல்லாம் இப்பொழுது செய்யலாம்.

தைப்பது, ஸ்வெட்டர் போடுவது, கைவேலைகள் செய்வது, கைகளை மட்டுமின்றி மனதையும் சுறுசுறுப்பாக வைத்திருக்கும். இதுவரை கைவேலை தெரியா விட்டாலும் புதிதாகக் கற்றுக் கொள்ளலாம். பிறந்த நாள், கல்யாணம், கிரகப் பிரவேசம், என்று ஏதாவது விசேஷத்திற்கு அழைப்பு வந்தால், பரிசுப் பொருள்களை நாமே தயாரிக்கலாம். யாரையாவது பார்க்கப்போனாலும் அதற்குத் தகுந்த மாதிரி பட்சணம், வடாம், ஊறுகாய், லேகியம் என்று ஏதாவது செய்து கொண்டு போகலாம். (இந்தக் காலத்து மனிதர்களுக்கே அந்தக் காலத்துச் சாமான்களில் பிரியம் அதிகம்.)

மனதை வெளி விஷயங்களில் செலுத்தவேண்டும்

புஸ்தகங்கள் படிப்பது என்பது மிகவும் நல்ல பொழுது போக்கு. எந்த மாதிரியான ரசனை உள்ளவர்களுக்கும், எந்த மொழியிலும், இப்பொழுது புஸ்தகங்கள் கிடைக்கின்றன. பக்கத்தில் இருக்கும் நூல் நிலையத்தில் உறுப்பினராய்ச் சேரலாம்.

என் சிநேகிதி ஒருவர் எல்லோரிடமும் ஜாதகம் வாங்கிப் பரிவர்த்தனை செய்கிறார். தன் முயற்சியால் இரண்டு ஜாதகங்கள் ஒன்றுபட்டுக் கல்யாணம் நடந்தால் மிகவும் சந்தோஷமடைகிறார்.

என் அத்தைக்கு ஓவியம் வரைவதில் திடீரென்று ஆசை பிறந்தது. வெளியில் போய் ஓவிய வகுப்பில் சேர தெம்பில்லை. கணவரைத் தனியாக விட்டுப் போகும் நிலையிலும் இல்லை. என்ன செய்தார்? அஞ்சல் மூலமாகக் கற்றுக் கொள்கிறார். ''இந்த வயதில் இவள் 'டிராயிங்' படித்து...'' என்று சொன்னவர்கள், இப்பொழுது அவர் வரையும் படங்களில் சிலவற்றை இலவசமாகக் கேட்க ஆரம்பித்து விட்டார்கள்.

என் அம்மா 65 வயதில் கன்னடம் கற்றுக் கொள்கிறார். பெங்களூரில் எல்லா அறிவிப்புப் பலகைகளும் கன்னடத்திலேயே இருக்கும். டி.வி.யில் தமிழ் 'ஒளியும், ஒலியும்' ஒளிபரப்பும்பொழுது கூட என்ன படம் என்பது கன்னடத்தில் எழுதியிருக்கும் இதையெல்லாம் படிக்க முடியவில்லையே என்ற ஆதங்கத்தில் ஆரம்பித்ததுதான். இப்பொழுது நாலாம் வகுப்புப் புத்தகம் படிப்பது வரை முன்னேறியிருக்கிறார்.

இப்படிப் புதிதாக ஏதாவது கற்றுக் கொள்ள வேண்டுமென்ற ஆவல் நம்மை இளமையாக நினைக்கச் செய்யும். இளமையான எண்ணம், மனதுக்கு உற்சாகம் ஊட்டி, உடலுக்குத் தெம்பை அளிக்கும்.

தனிமை என்பது நமக்குச் சோர்வை அளிக்க விடாமல் அந்த நேரத்தை உபயோகமாகச் செலவிடப் பழகிக் கொண்டு விட்டால் வாழ்க்கை பிரச்சினையாகவே இருக்காது.



வீட்டில் உள்ள இளையவர்கள் எல்லோரும் அவரவர் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு ஒரு பாரமாக இல்லாமல், அவர்களைக் குற்ற உணர்வுக்கு ஆளாக்காமல் நம் வாழ்வை நாம் அமைத்துக் கொள்ள வேண்டும். குடும்பத்தில் மற்றவர்களின் வாழ்க்கையில் அனாவசியமாகத் தலையிடாமல், முடிந்த மட்டும் உதவி செய்ய வேண்டும்.

டின் ஸ்விஃப்ட் என்பவர் முதுமையில் மனத்திருப்தியுடன் இருக்க சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார். நாமும் அவர் சொல்லும் வழியைப் பின்பற்றலாம்.

1. அதிகம் பேசாதீர்கள், அதுவும் தன்னைப் பற்றிப் பேசாதீர்கள்.

2. ஆணித்தரமாக உங்கள் அபிப்பிராயத்தை வெளியிடாதீர்கள்.

3. இளையவர்களிடம் மிகவும் கண்டிப்பாக நடந்து கொள்ளாமல் காலத்தை அனுசரித்து, அவர்கள் வழியில் செல்ல அனுமதியுங்கள்.


4. இன்றைய நடைமுறையில், பழக்க வழக்கங்களில், ஆடை அணிகலன்களில் குற்றம் காணாதீர்கள்.

5. கோபம், வெறுப்பு, சந்தேகம் போன்ற குணங்களுக்கு அடிமையாகாதீர்கள்.

6. உங்களை நாடி வரும் இளையவர்களிடம் அல்லாமல் மற்ற சின்ன வயதினரிடம் ஒட்டிக் கொள்ள ஆசைப்படாதீர்கள்.

–ஜெயா. வி. ராமன்.

நட்சத்திர வாழ்க்கை



“ஒரு பெண் எத்தனை கோடி சம்பாதிப் பவளாக இருந்தாலும், எத்தனை பெரிய அதிகாரியாக இருந்தாலும் அவளுடைய வாழ்க்கை வெற்றியடைய வேண்டுமானால் தான் பெண் என்பதை மறந்து விடக் கூடாது. ஒரு பெண் பெண்ணாகத்தான் இருக்க வேண்டும். அப்போது தான் அவ ளுடைய வாழ்க்கை வெற்றிகரமானதாக இருக்கும்...''

பிரபலமான பெண்களின் இல்லற வாழ் வெல்லாம் தோல்வியடைகிறதே என்று கேட்டதற்கு திருமதி சரோஜாதேவியின் பதில் இதுதான்!

வாழ்க்கையைப் பற்றி மிகத் தெளிவான கண் ணோட்டத்தை உடை யவராக இருக்கிறார் இந்தப் பெண் மணி. பத்தாண்டு களுக்கு முன் தமிழ்த் திரையுல கின் முடிசூடா ராணி யாக விளங்கிய இவர், இன்றைக்கும் அதன் பெரு மிதங்களை மறக்கவில்லை.

''என்னுடை வாழ்க்கை பரி பூரண திருப்தியுடன் இருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் என்னுடை தாயார் ருத்ரம்மாதான்...''

என்று ஆரம்பித்த போது, ''எப்படி நீங்கள் இந்த பீல்டுக்கு வர வேண்டுமென நினைத்தீர்கள்...?'' என இடைமறித்தேன். ஆதியோடந்தமாக தெரிந்து கொள்வதில் தானே ஆனந்தம்?

''நான் பிறந்து வளர்ந்தது எல்லாமே பெங்களூர்தான். இங்கு கான்வென்டில் படிக்கும் போது அங்கே இருக்கும் கிறிஸ் துவக் கன்னிமார்களே எனக்கு ஆதர்சம். 'நானும் அவர்களைப் போலவே 'நன்'னாக வேண்டும் என்றுதான் நினைத்துக் கொண் டிருந்தேன்.

வீட்டில் யாராவது சண்டை போட்டால் கூட 'இப்படியெல்லாம் செய்தால் நான் சிஸ்டராப் போயிடுவேன்' என்று சொல்லு வேன். வீட்ல அதை யாருமே பெரிசா எடுத்துக்கலே. ஏதோ விளையாட்டுக்குச்சொல் கிறாள் என்று தான் நினைத்துக் கொண்டிருந் தார்கள்.

அப்போது ஒரு பாட்டுக் கச்சேரி நடக்கது எங்கள் வீட்டருகில். நான் பாடுவதற்குப் போனேன். என்னுடைய வாய்சையும் டெஸ்ட் செய்தார்கள். ஆனால் அப்போது அங்கிருந்த ஹொன்னப்ப பாகவதர் 'இந்தப் பெண்ணிற்கு நல்ல முகவெட்டு இருக்கிறதே' என்றார்.

'மேக்—அப்' டெஸ்ட் நடந்தது. 'என் னுடை திரைப்படத்தில் நீதான் கதாநாயகி' என்றார். எனக்கு ஒரே குழப்பம். என்னுடை வாழ்க்கை லட்சியம் சிஸ்டராக வேண்டும் என்பது. ஆனால் இங்கே வருவதோ சினிமா சான்ஸ். ஒரே குழப்பம்.

எனக்கு அப்போது வயது பன்னிரண்டு தான். எந்த வழியில் போவது என்று தெரியவில்லை. ஆண்டவன் விட்ட வழி என்று கடைசியில் சினிமாவில் நடிக்க முடிவு செய்தேன். பள்ளியில் கூட சொல்லவில்லை. எங்கப்பாவிற்கு மாற்றலாகி விட டது என்று சொல்லி நிறுத்தி விட்டேன். பிறகு பத்திரிகைகளில் எல் லாம் என் படத்தைப் பார்த்துவிட்டு சிஸ்டர்ஸ் எல்லாம் ரொம்ப வருத்தப் பட்டார்களாம்.

கன்னட பீல்டில் நான் பிரபலமாகிவிட் டேன். என் முதல் படம் 'காளிதாஸ்' ரிலீஸானது. கச்சதேவயானியில் பிரபல மானேன்.

ஒரு நாள் தூக்கத்தில் ஒரு கனவு வந்தது. முருகன் கையில் வேலோடு வருவது போல. காலையில் எழுந்ததும் ஒன்றும் புரியவில்லை. அம்மாவிடம் சொன்னேன். .'எல்லாம் நல்லதுக்குத்தான்' என்றார் அம்மா. மூற் பகல் வேளை. வீட்டில் கதவு தட்டப் பட்டது. திறந்தால் பிரபல டைரக்டர் கே. சுப்பிரமண்யம் நின்று கொண்டிருந் தார்.

தன்னுடை தமிழ்ப் படத்துல நடிக்கச் சென்னைக்கு அழைத்துப் போக வந்திருந் தார்.

தமிழ் திரையுலகின் முன்னோடிகளில் ஒருவ ரான அவர் என்னைத் தேடி வந்தது நான் செய்த பாக்கியம். நானும் மெட்ராசுக்கு பயணப்பட்டேன்.

ஷூட்டிங்கின் போது ஒருநாள் – என் னுடை போர்ஷன் முடிந்தவுடன் திரும்பவும் டைரக்டர் கூப்பிடுவதற்காக உட்கார்ந்திருந் தேன். அப்போது சகமூசா என்று சத்தம்





திரும்பிப் பார்த்தால்...

மஞ்சுளா ரமேஷ்



என்னவென்று திரும்பிப்பார்த்தால் கண்ணைப் பறிக்கும் வண்ணத்தோடு ஒருவர் கூட்டத்தின் நடுவிலே வந்துகொண்டிருந்தார். செட்டில் இருந்தவர்கள் எல்லாம் மிகுந்த மரியாதையோடு ஆனால் மிகவும் அன்போடு வணக்கம் சொன்னார்கள். எனக்கு யாரென்று தெரியவில்லை.

''அவர்தான் எம். ஜி. ஆர்.!''

என்றார் என் பக்கத்திலிருந்த ஒருவர். அவர் தமிழ்த்திரையுலகின் எப்படிப்பட்ட சக்தி என்பதெல்லாம் அப்போது எனக்குத் தெரியாது. ''அப்படியா!'' என்று தலையாட்டி விட்டுத் திரும்பிக் கொண்டேன். எம். ஜி. ஆர். என்னைக் கடந்து செல்லும்போது ''இவர்தான் இந்தப் படத்தின் கதாநாயகி'' என்று அறிமுகப்படுத்தினார்கள். நான் பேசாமல் விழிப்பதைப் பார்த்துவிட்டு, ''நமஸ்காரா!'' என்றார் எம்.ஜி.ஆர்.

அதுதான் அவருடைய குணம். அன்றைக்கு அவரை வியப்புடன் பார்த்த நான் இன்று வரை வியந்து கொண்டு தான் இருக்கிறேன். அவரிடம் அனைவரையும் வசீகரிக்கும் குணம் இருக்கிறது. அவர் எங்கு சென்றாலும் அவருடைய அன்பிற்குக் கட்டுப்பட்டு மக்கள் சூழ்ந்து கொள்கிறார்கள்.

அந்த நிகழ்ச்சியோடு நான் அவரை மறந்து விட்டேன். ஆனால் அவர் மறக்கவில்லை. கே. சுப்ரமண்யத்தால் அறிமுகப்

படுத்தப்பட்டவள் திறமையுள்ளவளாகஇருப்பாள் என்று எண்ணம் போலும்! அவருடைய சொந்தப் படமான நாடோடி மன்னனில் கதாநாயகி ரோலுக்கு அழைப்பு வந்தது.

எம். ஜி. ஆர். கதாநாயகியாக ஒப்பந்தம் செய்திருக்கிறார் என்றவுடன் மளமளவென்று தமிழ்ப்படங்கள் குவிய ஆரம்பித்தன. 57—லிருந்து எத்தனை படங்கள்!

ஒய்வு ஒழிவில்லாமல் நடித்தேன். மூன்று ஷிஃப்டுகளில் எல்லாம் நடித்திருக்கிறேன். எத்தனையோ சாதனைகள்! கல்யாணப் பரிசைப் பார்த்து விட்டுத் தங்களுடைய குழந்தைகளுக்கு வசந்தி என்று பெயர் வைத்தார்கள். பாலும் பழமும் 'சாந்தி' பெயர் நிறைய தட்டுப்பட ஆரம்பித்தது.

ஏ. வி. எம். மில் எம். ஜி. ஆருக்கு ஒன்றும் எனக்கொன்றும் என இரண்டு மேக்—அப் ரூம்களைக் கட்டிக்கொடுத்தார்கள். அன்றைக்கு ஃபீல்டில் அதிகப் பணம் வாங்கிய நடிகை நான்தான். இதை அனைவருமே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்...''

ஆகப் பத்து வருடங்கள் தமிழ்த் திரையுலகில் மட்டுமல்ல தெலுங்கு; கன்னடப் படங்களிலும் நம்பர் ஒன் நடிகையாக விளங்கியிருக்கிறார். உடல் கட்டும் குலையவில்லை. முக அழகும் குன்றவில்லை. இதோ இன்றைக்கும் கூட அதே அழகுடன் இருக்கும் இவர் எப்படித் திடீரென்று சினிமாவை விட்டு விலகினார்?

''இல்லை. நான் சினிமாவை விட்டு முழுவதும் விலகவில்லை. கொஞ்சம் ஒதுங்கிக் கொண்டேன். அதற்குக் காரணம் அம்மா செய்து வைத்த திருமணம்.

என்னைப் பேட்டி காண வந்த ஒரு பத்திரிகை நிருபர் கூடக் கேட்டார், இப்போது சில நடிகைகள் தற்கொலை செய்து கொள்கிறார்களே, அதற்குக் காரணம் என்னவென்று? அவர்களுடைய பெற்றோர்கள்தான் காரணம் என்றேன்.

தன்னுடைய மகள் நடிகையானவுடன் முதலில் பணம், கால்ஷீட், ஷூட்டிங் எனப் பெற்றோர்கள் கூடவே வருகிறார்கள். பணம் பெருகச் சேர்ந்தவுடன் வீடு, நகை, ஏதாவது தொழில் என்ப பணத்தை எப்படிப் பாதுகாப்பது என்பதில் போய்விடுகிறது கவனம். அந்தப் பெண் தனியாக ஷூட்டிங் போக ஆரம்பிக்கிறாள். அவளுக்கு என்ன பதினாறு, பதினேழு வயது தான் இருக்கும். என்ன தெரிந்து கொள்ள முடியும் வாழ்க்கையைப் பற்றி?

வெளியுலகில் இறங்கி விட்டால் எல்லோருடனும் சகஜமாகப் பழகித்தான் ஆக வேண்டும். இந்தப் பழக்கம் எங்கோ காதலாக முடிகிறது. அது கல்யாண ஸ்டேஜுக்கு வரும்போதுதான் அம்மா, அப்பா விழித்துக் கொண்டு ஓடி வருகிறார்கள். பெற்றோர்கள் ஒரு பக்கம், காதலன் ஒரு பக்கம். அந்தச் சிறு பெண் என்னதான் செய்வாள்?

நம்முடைய சமூகத்தைப் பற்றியோ, கேட்கவே வேண்டாம். சாதாரணமாக ஒரு பெண் கொஞ்சம் பல்லைக் காட்டிவிட்டாலே எல்லாமே போச்சு என்பார்கள். இன்னும் நடிகையாக இருந்து விட்டால்கேட்கவே வேண்டாம்.' அவள் உட்கார்ந்தாலும் குற்றம், எழுந்தாலும் குற்றம். ஒருவனைக் காதலித்து விட்டால் ஊரெல்லாம் தெரிந்து விடும். கைவிடவும் முடியாது. ரகசியத் திருமணமா? கேட்கவே வேண்டாம். இத்தனை ரகளைகளுக்கும் நடுவில் அவளுக்குத் தெரிந்த ஒரே வழி சாவுதான்.

அதனால் தான் சொல்கிறேன். என் அம்மா தெய்வம் போல எனக்கு. என்னை ஒரு நிமிடம் பிரிய மாட்டார்கள் அவர்கள். மேக்–அப் ரூமில் கூட ஒரு ஆள் இல்லாமல்







இது மிக நீளமான நேப்கின்.



இது மிக அகலமான நேப்கின்.



இது மிக தடிப்பான நேப்கின்.

புதிய

கேர்ஃப்ரீ* எக்ஸ்ட்ரா லார்ஜ்

சில பெண்களுக்கு இது தேவை.

கூடுதலான பெரிய சைஸிலே தரமுள்ள நேப்கினின் முழுமையான சுகமும், பாதுகாப்பும் தேவைப்படும் பெண்களுக்கு—இதோ! புதிய கேர்:.ப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ். ஆம் உங்களுக்காகவே.

நீளத்தினையும், அகலத்தினையும், தடிப்புத்தன்மையினையும் கூடுதலாகவே பெற்றிருக்கும் இந்த நேப்கினின் நூலிழைகள் உறிஞ்சும் திறன் அதிகமாகப் பெற்று மிகுந்த நம்பிக்கையைத் தருகிறது.

ஒன்டர்ராப் உறைகள் ஈரத்தை உள் அடுக்கிற்குள் செலுத்துவதால் ஈரம் சீராக உறிஞ்சப்பட்டு உலர்வினையும் சுகத்தினையும் உங்களுக்குத் தருகிறது. நாப்கினின் இந்த சிறப்பான டாப்-நுனிகள் சரியாகப் பொருத்த உதவுவதோடு கச்சிதமாகவும் இருக்கிறது.

அத்துடன் ஈரம் கசியாத "சீல்-பிளாஸ்டி ஷீல்டு" நேப்கினின் அடிபபகுதியினையும், இரண்டு பக்கப்பகுதியினையும் சூழ்ந்து கொண்டு, கசிவோ, கறையோ மற்ற விபரீதங்களோ ஏற்படாமல் பாதுகாக்கிறது.

புதிய கேர்:.ப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ்—முழுமையான சுகம், முழுமையான பாதுகாப்பு, கூடுதலான பெரிய சைஸில்




முழுமையான சுகம், முழுமையான பாதுகாப்பு கூடுதலான பெரிய சைஸில்.

Johnson & Johnson

தமிழ்நாட்டில் மட்டுமே கிடைக்கும்.

*Trademark © J & J 1984

OBM/2188 TAM





நான் தனியாக இருந்தது இல்லை. பல மணி நேரங்கள் ஸ்டுடியோவில் ஷூட்டிங் நடக்கும். அம்மா வெளியே ஒரு பெஞ்சில் படுத்துக் கொண்டிருப்பார்கள்.

''ஏம்மா, இப்படிக் கஷ்டப்படுகிறீர்கள்? உங்கள் மகள் ஷூட்டிங் முடிந்தவுடன் வந்து விடுவாள்'' என்று யாராவது சொன்னால் கூடக் கேட்க மாட்டார்.

''ம்ஹூம். அவள் ஒரு குழந்தை. அவளுக்கு என்ன தெரியும்? யாராவது ஏதாவது சொல்லி மனத்தைக் கலைத்து விட்டால்...?'' என்பார்.

ரொம்ப அவசியமாக இருந்து வேறுவேலையாகப் போக வேண்டுமானால் கூடத் தங்கையைக் கூட வைத்து விட்டுத்தான் போவார். நான் 'டாப் ஹீரோயினா'க இருந்த நேரம். ''நான் கண்ணை மூடுவதற்குள் ஒருவனிடம் இவளை ஒப்படைத்து விட வேண்டும். நான் போய் விட்டால் இவள் பணத்துக்காகவே இவளை ஏமாற்றி விடுவார்கள்'' என்று தீர்மானித்து விட்டார்.

ஹர்ஷா அப்போது தான் ஜெர்மனியில் இஞ்சினியரிங் பயிற்சியை முடித்து விட்டு வந்தார். என்னைக் கேட்காமலேயே எல்லாவற்றையும் அம்மா பேசி முடித்து விட்டார்கள். ''பொண்ணைக் கேட்டீர்களா? என்று இவர் கேட்ட போது கூட, 'அவளை என்ன கேட்பது? அவளுக்கு என்ன தெரியும்? நான் சொன்னால் சரியென்பாள்'' என்றார் அம்மா.

நானும் அப்படித்தான் இருந்தேன். அம்மா சொல்வது தப்பாகவே இருக்காது என்பது என் எண்ணம். இவர் என்னை நேரில் பார்த்த போது ஒன்றே ஒன்றுதான் கேட்டார்.

''நீயோ ரொம்பப் பணக்காரி. நான் சாதாரண இஞ்சினியர். என்னோட வாழ்க்கையோட உனக்கு ஒத்துப் போக முடியுமா?'' என்றார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. பேசாமல் தலையாட்டினேன். ஆனால் திருமணத்திற்குப் பிறகு இவர் எவ்வளவு உயர்ந்தவர் என்பதைப் புரிந்து கொண்டேன். என் விருப்பம் போல் சினிமாவில் நடிக்கலாம் என்றுதான் சொன்னார். ஆனால் நான்தான் எனக்குகந்த நல்ல ரோல்கள் வரும்போது மட்டும் நடிக்கிறேன். அப்படிப்பட்ட ரோல்கள் இன்றைக்கும் எனக்குக் கன்னடத்தில் கிடைக்கின்றன.

இப்பொழுதும் கூட நான் ஜாக்கிரதையாகத்தான் இருக்கிறேன். ஒரு குறிப்பிட்ட அளவு வீடு, மனை, வாழ்க்கை என இருந்தாலும் இதை கௌரவமாக காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற ஜாக்கிரதை இருக்கிறது. அதே போல என் திரையுலகம் எனக்குத் தந்த கௌரவத்தையும் நான் மறக்கவில்லை.

நான் ஒரு நடிகை என்று சொல்லிக் கொள்ளப் பெருமைப்படுகிறேன். ஏனென்றால் இன்றைக்கு அனைவரும் அறிய எனக்குக் கிடைத்துள்ள புகழ், செல்வாக்கு, பணம் எல்லாம் திரையுலகம் தந்தது தான். அந்த நன்றியை நான் என்றைக்குமே மறக்க மாட்டேன்...''

என்று கூறுகிறார் திருமதி சரோஜாதேவி.

இன்றைக்குக் கன்னடத் திரையுலகின் கௌரவம் மிக்க நடிகை. சென்சார்போர்டிலும், பல்வேறு திரையுலகக் கமிட்டிகளில் அகில இந்திய ரீதியிலும் மெம்பராக இருக்கிறார். அமைதியான வீடு; அன்பான கணவர். அற்புதமான வாழ்க்கை. அவர் கூறியது போல 'பெண்ணாக — முழுமைபெற்ற பெண்மணியாக — வாழுகிறார். இதைத்தவிர வேறென்ன வேண்டும் ஒரு பெண்ணிற்கு?

குடி / வடி தண்ணீர்!

1981—லிருந்து 1990 — இடைப்பட்ட இந்தப் பத்தாண்டுக் காலத்தை "இண்டர் நேஷனல் வாட்டர் சப்ளை அண்ட் சேனிடேஷன் டிகேட்" (Inter National Water Supply and Sanitation Decade) என்று ஐக்கிய நாட்டு ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது. உலக சுகாதார ஸ்தாபனம் (W.H.O.) சுகாதாரம் இல்லாத, சுத்தமான நீர் கிடைக்காமல் அவதிப்படும் மூன்று நபர்களில் ஒரு நபர் இந்தியாவைச் சேர்ந்தவர் என்று கணக்கிட்டிருக்கிறது. இந்தியாவில் சுமார் 80 சதவீதம் மக்களுக்கு, சுத்தமான குடி தண்ணீர் என்பது பலிக்காத கனவாகும்.

பருவமழை ஆரம்பமாவதற்குள்ளாகவே, நீர் மூலமாகப் பரவும் நோய்கள் பரவி, நமது மக்களைப் பிடிக்குள்ளாக்குகின்றன. மேற்கு வங்காளத்தில் ஒரு மாதத்தில் மட்டும் (மே, 1984) சுமார் 1400 நபர்கள் வயிற்றுப் போக்கினாலும், குஜராத்தில் சுமார் 300 நபர்கள் மஞ்சள் காமாலையினாலும் பீடிக்கப்பட்டு இறந்தனர் என்ற செய்தியை செய்தித்தாள்களில் படித்திருப்பீர்கள். இந்த நோய்கள் இயற்கையாக வருவதில்லை. அசுத்தமான சுற்றுப்புறச் சூழ்நிலை, நோய் உண்டாக்கும் பாக்டீரியாவினால் நீர் அசுத்தமாவது ஆகியவைகளே, இந்த நோய்களுக்குக் காரணம்.

மனிதனால் உண்டாக்கப்படும் அசுத்தங்கள் தாம் நீரை நச்சுத்தன்மையடையச் செய்கின்றன. இயற்கையான ரசாயன அசுத்தப் பொருள்கள் நீரை அவ்வளவாகப் பாதிப்பதில்லை. மனித இனத்தின் மலத்தினால் நீர் மிக அதிக அளவு பாதிக்கப்படுகிறது.

கிராமங்களில் குளங்களில், குளிப்பது, துணி துவைப்பது; பாத்திரங்கள் கழுவுவது போன்றவற்றைச் செய்கிறார்கள். இவைகள் மூலமாக அகற்றப்படும் அழுக்கு, நீர்நிலைகளின் அடியில் படிந்து நீரை அசுத்தமாக்குகிறது. டவுன்கள், நகரங்களில் நீர் சேகரிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு, குழாய்களில் விடப்பட்டாலும், உபயோகிப்பவர்களை அடையும் போது அந்நீர் சுத்தமாக இருப்பதில்லை. குடிநீரைக் கொண்டு செல்லும் குழாய்களும், சாக்கடை நீரைக் கொண்டு செல்லும் குழாய்களும் பூமிக்கடியில் ஒன்றுக்கொன்று மிக அருகில் அமைக்கப்படுகின்றன. சாக்கடை நீரும், குடிநீரும் கலந்து விடுகிறது. மழைக்காலத்தின் நீர் மேலும் அசுத்தமாகிறது.

வீட்டில் நீரைச் சுத்தமாக்குவது எப்படி?

பக்கெட்டில் அல்லது அகலமான பாத்திரத்தில் நீரை வைத்துக் கையில் படிக்காரக் கட்டியை எடுத்துக் கொண்டு, கையை நீரில் விட்டு, இரண்டு அல்லது மூன்று தடவைகள் துழாவுவது போல் செய்ய வேண்டும். நீரிலுள்ள அழுக்கு, நோய்க் கிருமிகள் ஆகியவை குழம்பு போல் கலந்து நீரின் அடியில் சென்று தங்கிவிடும். அப்போது நீர் நல்ல தெளிவாகி, சுத்தமாகி





விடும். பழங்கள், காய்கறிகளை உபயோகிக்கு முன்னர், கழுவ உபயோகிக்கும் நீரில், பொட்டாசியம் பர்மாங்கனேட் (இது வயலட் நிறத்திலிருக்கும்.) கலந்து, கழுவ வேண்டும்.

தற்காலத்தில் நீர் வடிக்கப்படப் பயன்படும் பில்டர்களை இருவிதமாகப் பிரிக்கலாம். 1. குறிப்பிட்ட அசுத்தத்தை நீக்குபவை. 2. நோய்க்கிருமிகளையும் அசுத்தத்தையும் நீக்குபவை. இரண்டாவதாகக் கூறப்பட்ட பில்டர்களை பாக்டீரியாலஜிகல் பில்டர்கள். (அதாவது பாக்டீரியா என்னும் கிருமிகளை அகற்றக் கூடிய தன்மையையுடையவை) என்று அழைக்கப்படுகின்றன. நுண்ணிய துவாரங்களுடைய, குழாய்கள் வாயில் பொருத்தக்கூடிய நீர் பில்டர்களும், தற்போது விற்பனைக்கு வந்துள்ளன.

பாக்டீரியாலஜிகல் பில்டர்களில் பல விதங்கள் உள்ளன. ஆனால் வீட்டு உபயோகத்திற்கென்று தயாரிக்கப்படும் பாக்டீரியாலஜிகல் பில்டர்களை அடிப்படையில் இரண்டுவிதமாகப் பிரிக்கலாம். 1. கேண்டில் பில்டர்கள், 2. மெம்ப்ரேன் பில்டர்கள். இவ்விரண்டு வித பில்டர்களும், நீரை வடிக்கட்டுகையில், நுண்ணிய கிருமிகளைத் தடுத்து நிறுத்துகின்றன.

கேண்டில் பில்டர்களை — மணல்போன்றிருக்கும் துகள்களால் அல்லது பாலிஷ் செய்யப்படாத களிமண் ஆகியவைகளைக் கொண்டு தயாரிக்கிறார்கள். இவை, அழுக்கையும், நுண்ணிய கிருமிகளையும் துவாரங்களில் நிறுத்திக் கொண்டு, சுத்தப்படுத்திய நீரை மாத்திரம் அனுமதிக்கின்றன. இதிலுள்ள துவாரங்கள் அடைப்பட்டு விட்டால் நீர் இறங்கும் வேகம் குறையும். ஆகவே, அடிக்கடி கேண்டில்களைச் சுத்தப்படுத்த வேண்டும்.

பில்டரிலுள்ள கேண்டில் இரண்டு சென்டி மீட்டர் அளவுக்கு அகலத்தில் குறைந்துவிடுமானால், கேண்டிலை மாற்ற வேண்டும். எத்தனை நாட்கள் கேண்டிலைப் பயன்படுத்த முடியும்? சுமார் 14 நாட்களுக்குப் பிறகு பில்டரைச் சுத்தப்படுத்த வேண்டும். பக்கெட்டில் நீர் வைத்துக் கொண்டு, கேண்டில்களை பக்கெட் நீருக்குள் அமிழ்த்திச் சுத்தப்படுத்தக் கூடாது. குழாயைத் திறந்து அதிலிருந்து நீர் கொட்டும் போது (Running Water) சுத்தம் செய்ய வேண்டும். குழாய் வசதி இல்லையென்றால் ஒருவர் செம்பிலிருந்து நீரை ஊற்ற, மற்றொருவர், அதை (கேண்டிலை) சுத்தப்படுத்த வேண்டும். மிகவும் மிருதுவான பிரஷ்ஷினால், கேண்டிலுடைய நிறம் (அதாவது கேண்டிலுடைய ஒரிஜினல் நிறம்) வரும் வரையில் மெதுவாகத் தேய்த்து அலச வேண்டும். பில்டர்களை வைத்திருக்கும் பாத்திரங்களையும் நன்றாகச் சுத்தம் செய்ய வேண்டும்.

மூன்று மாதங்களுக்கு ஒருமுறை, கேண்டில்களை 15 நிமிடத்திலிருந்து 20 நிமிடம் வரை, நீர்ல் நனைத்து வைத்திருந்து விட்டுப் பிறகு கொதிக்கும் நீரில் அமிழ்த்தி, இந்த நீர் நன்றாக ஆறியபிறகு, கேண்டில்களை வெளியே எடுக்க வேண்டும். இவ்வாறு செய்யும்போது, பில்டர்களின் துவாரத்தில் சிக்கிக் கொண்டிருக்கும் நுண்ணிய கிருமிகள் அழிக்கப்படுகின்றன. இம்முறையில் கேண்டில்களைச் சுத்தப்படுத்தி வைத்துக்கொண்டால், சுமார் மூன்று வருடங்கள் வரை ஒரு கேண்டிலைப் பயன்படுத்தலாம்.

மேலே விவரிக்கப்பட்ட பலவிதமான பில்டர்களிலுள்ள பெருங்குறை என்னவென்றால், இவைகள் நீரிலுள்ள அழுக்கு, பாக்டீரியா போன்றவைகளை நீக்க முடியுமே தவிர, வடிக்கட்ட முடியாத, கண்ணுக்குப் புலப்படாத வைரஸ் எனும் மிக நுண்ணிய கிருமிகளை அறவே, ஒழிக்கவோ, நீக்கவோ முடியாது. இந்த வைரஸ் கிருமிகளை, நீரை நன்றாகக் கொதிக்க வைப்பதன் மூலமாகத்தான் அழிக்க முடியும்.


இல்லத்தரசிகளின் மற்றொரு பிரச்சினை குளோரின். நீரைச் சுத்தப்படுத்தும் போது குடிநீரில் மிக அதிகமான குளோரினைக் கலந்து விடுகிறார்கள். நோய்க் கிருமிகளைக் கொல்வதற்கு குளோரின் அவசியம். ஆனால் அளவுக்கு அதிகமான குளோரின் அதிகப் பிரச்சினைகளை உண்டாக்கும். அதிகமான குளோரின் கலந்த நீருக்கும் புற்றுநோய்க்கும் மிக நெருங்கிய தொடர்பு உள்ளதாக அறியப்பட்டிருக்கிறது. இயற்கையாக, நீரிலுள்ள சில கூட்டுப் பொருள்களோடு குளோரின் சேரும் போது ஆரோக்கியத்திற்கு ஊறு விளைவிக்கும் சில பொருள்கள் (உதாரணமாக குளோரோபார்ம்) உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த குளோரோபார்ம் புற்றுநோயை உண்டாக்குகிறது என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

சூடான் தேசத்தில், களிமண்ணைப் போட்டு நீரைச் சுத்தப்படுத்துகிறார்கள். ஆற்றின் அடிப்பாகத்திலிருந்து எடுக்கப்பட்ட களிமண்ணாக இருக்க வேண்டும். முதலில் கெட்டியாக பேஸ்ட் போலிருக்கும் களிமண்ணைத் திரவம் போல் ஆகும் வரை நன்றாகக் கலக்க வேண்டும். பிறகு இதைச் சுத்தப்படுத்த வேண்டிய நீரில் ஊற்ற வேண்டும். இம்முறையில் நீர் சுத்தமாக வெகு நேரம் ஆகுமென்றாலும் நீர் நன்கு சுத்தமாகிறது. நிலத்திலிருந்து வெட்டி எடுக்கப்படும் பாறை, பாம்புப் புற்றிலுள்ள மண் ஆகியவையும் நீரைச் சுத்தப்படுத்தப் பயன்படுகின்றன.

லேட்டஸ்ட் நியூஸ்—

நீரைச் சுத்தமாக்க இப்போது மாத்திரைகளும் கூட விற்பனைக்கு வந்திருக்கின்றன.

-ராஜி.



சின்னஞ்சிறு காயத்தில்கூட அழுக்குப் புகுந்துவிடும்
இதனால் காயம் பெரிதாகும், கஷ்டம் உருவாகும்.

உடனடியாக பாண்ட்-எய்ட் உபயோகியுங்கள்



உலகில் உள்ள தாய்மார்கள் நம்புவது பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள்—அது, காயங்களில் அழுக்குப் புகாமலும், தொற்றிலிருந்தும் காயங்களைப் பாதுகாக்கிறது.

ஆகவேதான் பாண்ட்-எய்ட் முழுப் பாதுகாப்பானதாகும். பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்கில் உள்ள நிரூபணமான ஆன்டிசெப்டிக், காயத்தை ஆற்றுவதற்கு உதவுகிறது. அதிலுள்ள நுண்துளைகள் காயங்களை விரைந்தாற்றிட உதவுகின்றன. ஒட்டிக்கொள்ளாத வசதிமிக்க ஒப்பற்ற அடுக்கு.

காயங்களின் வெவ்வேறு வடிவம் மற்றும் அளவுகளுக்கு ஏற்ப வருகின்றன பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள். பெரிய புண்கள், சிறிய வெட்டுக் காயங்கள், கட்டுப்போட முடியாத இடங்கள், கொப்புளம் மற்றும் சிராய்ப்புகளுக்கு எப்போதும் உங்கள் கைவசமிருக்கட்டும் பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள்.

கைவசம் வைத்திருங்கள் பாண்ட்-எய்ட்
ஏனென்றால், காயங்கள் எங்கும் எந்நேரமும் ஏற்படலாம்.

OBM/2514/TM

Johnson & Johnson



சரியாத கோபுரங்கள்!

கோதா பார்த்தசாரதி

குறுநாவல்

1

'டங்'கென்று மணியை ஒலித்தார் கண்டக்டர்.

இளங்காலைக் காற்றில் அயர்ந்து விட்ட நான் அலறியடித்துக் கொண்டு எழுந்திருக்கிறேன். அசட்டுச் சிரிப்புடன் 'சாரி, கொஞ்சம் கண்ணசந்துட்டேன்—' என்று மன்னிப்புக் கேட்கிறேன்.

'பரவாயில்லை' என்று பொருள்பட, தலையை அசைத்த கண்டக்டர் ஒரு புன்னகையுடன் விடை கொடுத்தார். சின்ன பிரீப் கேசை கையில் எடுத்துக் கொண்டு இறங்கினேன்.

'வண்டி — வண்டி வேணுங்களா, சாமீ?'

வண்டிக்காரன் ஒருவன் நெருங்கி வந்தான்.

..........கிராமத்தின் பெயரைச்சொல்லி ''ரொம்ப தூரம் இருக்கோ' என்று விசாரித்துக் கொண்டே ஏறினேன்.

இதோ ஊர் வந்து விட்டது. தர்மு இங்கு வாழ்க்கைப் பட்டிருக்கிறாள் என்று தெரியுமே ஒழிய வேறொரு விவரமும் தெரியாது.

என்ன பெரிய கிராமம்? மிஞ்சிப் போனால் இருபது வீடு இருக்கும். பெரிய பண்ணை—மிராசுதார் — வசதியான இடம் என்று அம்மா சொல்லியிருக்கிறாள். அதைச் சொல்லிக் கேட்டால் தெரியாதா?

கிராமத்துக்குள் நுழையும் போதே கோயில் பட்டாச்சாரியார் மாதிரி ஒரு கிழவர் கையில் பூக்குடலையுடன் போய்க் கொண்டிருந்தார்.

''இங்கே பெரிய பண்ணை வீடு எங்கே ருக்கு?'' என்றேன்.

அரைத்த மாவை 18 மணி நேரத்திற்கு மேல் புளிக்கவிட்ட பின் தயாரிக்கப்படும் இட்லி, தோசையில் அதிக அளவில் வைட்டமின் பி–யின் அங்கங்களான தியாமின், ரிபோபிளேவின் உண்டாகின்றன என்று பெங்களூரில் உள்ள விவசாயப் பல்கலைக் கழகம் நடத்திய ஆய்வு தெரிவிக்கிறது.

—எஸ். முகம்மது யூசுப்.

''ஆரு நீங்க? ஊருக்குப் புதுசோ?'' என்றார்.

''ஆமாம்—'' என்று தலையசைத்தேன்.

''அதான் — வீடுன்னு கேட்கிற —வீடா அது — மாளிகைன்னு — இதோ இப்படியே என் பின்னாலேவா. கோவிலுக்குப் பக்கத்திலே ஒரு ரோடு போகும். அதன் முடிவிலே தோப்பும் துரவுமா உள்ளே பங்களா—வாசல்லே பச்சை கேட் போட்டிருக்கும். கஜலக்ஷ்மி பொம்மை முகப்பிலே இருக்கும்—பத்ம விலாஸ்னு போட்டிருக்கும்.''

சொல்லிவிட்டுப் பூஜைக்கு நேரமாகி விட்ட உணர்வில், வயதையும் பொருட்படுத்தாமல் வேகமாக நடந்தார். அவர் சொன்னபடியே நடந்தேன். பச்சை கேட்டை தள்ளியதும் ஒரு மைலுக்குப் பிறகுதான் பங்களாவே தெரிந்தது.

தோட்டக்காரன் ஒருவன் செடிகளுக்குத் தண்ணீர்ப் பாய்ச்சிக் கொண்டிருந்தான்.

''ஆருங்க?'' என்று ஓடிவந்தான்.

''அய்யாவைப் பார்க்கணும்'' என்றதும் ஏற இறங்கப் பார்த்தான். ''கதவிலே மணிப் பொத்தான் இருக்கும், அடியுங்க''

அடித்தேன் — உள்ளே மணி ஒலிப்பது கேட்டது. கதவு திறந்தது. திறந்தவள் ஒரு பெண். அதே நேரத்தில் ரேழியில் இருந்த ஒரு அறைக்கதவு திறக்கப்பட்டு ஒரு வாலிபன் — தலையை நீட்டினான்.

''யாராம்?'' என்று அவன் அந்தப் பெண்ணைக் கேட்க, அவள் என்னைப்பார்த்தாள். அவர்கள் வாயால் பேசிக் கொண்டதை விட, கண்களால் பேசியது அதிகம் என்று தோன்றியது.

''சார் இருக்காரா?'' மீண்டும் பொதுவாகக் கேட்டேன். 'ஓ' உள்ளே வாங்கோ!'' என்று அழைத்தாலும் அவள் அங்கேயே நின்றாள். மீண்டும் நயன பாஷை.

''ஆருடி' அங்கே மூதேவி! மணியடிச்சா நீ ஏண்டி ஓடறே? அந்தத் தடிராமன் எங்கே போயிட்டான்?'' ஏறக்குறைய சிங்கம் கர்ஜிப்பது போல் ஒரு உறுமல் உள்ளிருந்து வந்தது.

''இதோ வந்துட்டேன்னு — யாரோ உங்களைப் பார்க்கத்தான் வந்திருக்கா—'' என்று தன் நயன பாஷையை அவசரமாக முடித்துக் கொண்டு உள்ளே விரைந்தாள் அவள். அவனும் ஆமை ஓட்டுக்குள் நுழைவது போல் தலையை இழுத்துக் கொண்டான். கதவு மூடிக் கொண்டது.

நான் அந்தப் பெண்ணின் பின்னால் நடந்தேன். இவள் யார்? பெண்ணா இவள்? ஆண் பிள்ளைத்தனமான முகம், வாட்ட சாட்டமான உடல் — நீளநீளமாய் கைகளையும், கால்களையும் வீசி நடந்த போது பூமி அதிர்ந்தது. சமையல் காரியாக இருக்குமோ அப்படியானால் ரேழியில் நடந்த நாடகம்? உள்ளிருந்து கூப்பிட்ட குரலுக்குப் பதில் கொடுத்த போது கட்டின மனைவி மாதிரி அல்லவா இருந்தது?

அப்படியானால் என் தர்மு எங்கே? அவள் வீடில்லையா இது? — நான் விலாசம் மாறி வந்து விட்டேனா?

நடுக் கூடத்தில் உயரே இருந்து வெள்ளிச் சங்கிலியில் ஒரு ஊஞ்சல் தொங்கியது. அசல் பர்மா தேக்கு— தங்கப் பூண் போட்ட அந்த ஊஞ்சல் ஆடும் போது கொஞ்சம் முனகியது கூட சங்கீதமாக இசைத்தது.

அதில் கட்டுக்குடுமியும் பருத்த உடம்பும் பானை போல் தொந்தியும், உருளைக்கிழங்குக் குக் காலும், கையும் முளைத்தது போல் ஒரு குள்ளமான உருவம் ஆடிக் கொண்டிருந்தது. உளுந்துக்கு எண்ணை முழுக்காட்டியது போல் ஒரு கறுப்பு — செல்வச் செழிப்பின் மினுமினுப்பு — பக்கத்தில் பெரிய வெள்ளி கூஜா — வெள்ளி வெற்றிலைப் பெட்டி —

''யாரய்யா நீர்? பார்க்கணும்னு வந்துட்டு மோட்டு வளையைப் பார்த்துண்டு நின்னா எப்படி?'' மீண்டும் உறுமல்.

''ஒண்ணுமில்லே... நா... வந்து.... தருமு... தர்மாம்பா... ஸ்கூல் டீச்சர் பெண் — அவாத்தானே இது?''

ஒருவழியாக உளறிக் கொட்டினேன்.

'ஓ' நீர் அப்படி வாரீரா? ஆமாய்யா— சாக்ஷாத் அந்த தர்மாம்பாளோட புருஷந் தான் நான் — நீங்க அவா ஊரா ? பேஷ் — உட்காரும்!'' என்று ஒரு நாற்காலியைக் காட்ட உட்கார்ந்தேன்.

''நீர் அவளைப் பார்க்க வந்தீரா?என்னைப் பார்க்க வந்தீரா? அவளைத்தான்னு அவ இப்ப என்னோட இல்லே!''

அத்தனை பெரிய கூடம் தளத்துடன் இடிந்து என் தலையில் விழுந்து விட்ட மாதிரி உணர்ந்தேன்.

''தர்மு இல்லையா? அவளுக்கு — '' என்று இழுத்தேன்.

''அவளுக்கு ஒரு கேடும் இல்லே ஓய். நன்னு சௌக்யமா அமோகமா இருக்கா ஸ்வாமி — மெட்றாஸிலே பாட்டுக் கச்சேரி பண்றாளாமே — கேட்டதில்லேயோ?''

''அப்ப நான் வரேன்—'' எழுந்திருந்த என்னை ஒரு கையால் அமர்த்தினார். அதற்குக் கட்டுப்பட்டு மீண்டும் உட்கார்ந்தேன்.

''வந்துட்டு யாருன்னு சொல்லாமல் போனா எப்படி? உறவா... இல்லே... சிநேகமா?'' என்று கண்ணடித்தார். அருவருப்பாக இருந்தது. வேறு வழியில்லாமல் பொறுத்துக் கொண்டேன்.

''அவப்பாகிட்டே தான் நான் படிச்சேன். தர்மு பால்ய சிநேகம்...'' என்று மென்று விழுங்கினேன்.

''இருக்கட்டும், தப்பில்லே — என் கல்யாணத்துக்கு. அதான் ஓய் — உம்ம தர்மாம்பா கல்யாணத்துக்கு நீர் வந்திருந்தீரா?''

''இல்லே — அப்ப நா பம்பாயிலே இருந்தேன்.'' 'இந்தக் கண்றாவியை தருமுவுடன் சேர்த்து அப்போதே பார்க்காமல் இருந்தது என் பாக்கியம்தான்.

மென்மையே உருவான என் தர்முவுக்கு இதிகாச காலத்து இடும்பன் போன்ற இவர் கணவரா? வயசில் அவளுக்கு அப்பாவாக இருக்கலாம். என் தர்முவின் அழகுக்கும், படிப்புக்கும், பாடினால் இன்னிப் பூரா கேட்டுண்டிருக்கலாம். ஸ்லோகம் சொன்னா அம்பாளே நேரில் பிரசன்னமாகி விடுவாள்— தேனில் முக்கி எடுத்தது போன்ற சாரீரம்.

''எங்கே இருக்கீர்?'' — மீண்டும் அந்த உறுமல் என்னைப் பூமிக்கு அழைத்துவந்தது.

''பம்பாயிலே இருக்கேன் — வேலையா வந்தேன் — அப்படியே...''

''கல்யாணம் ஆயிடுத்தா?''

''இன்னும் இல்லே!''

''நல்லவேளை — பம்பாயிலே இருக்கேங்கறீர் — அங்கே இருக்கிற நாகரீகப் பெண்களைப் பார்த்து ஏமாந்துடாதேயும் — ஒண்ணுக்கும் உதவாது! நா கிராமத்துப் பெண்ணுன்னுதான் உங்க தருமுவைப் பண்ணிண்டேன். என்ன லாபம்? ம்— ஆள் அழகு — ஊது காமாலேங்கிற மாதிரி அழகைப்பார்த்து ஏமாந்துட்டேன் — என் தலையெழுத்து.

பொம்மனாட்டின்னா வீடு, வாசல், புருஷன் எல்லாத்துக்கும் ஈடு கொடுக்க வேணுமா? ஒண்ணுக்கும் லாயக்கில்லே. பெண்டாட்டியா அவளைக் கட்டிண்டு ஒரு சுகமும் இல்லே. ஏதோ பண்ணிண்டாச்சு. பெண் பாவம் வேண்டாம். வீட்டோட இருக்கட்டும்னு பார்த்தா, பேய் பிடிச்ச பெண்ணை என் தலையிலே கட்டி அவப்பன் ஏமாத்திட்டான்.

திமர்னு சிரிப்பு — திமர்னு அழுகை — திமர்னு மயக்கம் — எனக்கு சொந்தப் பண்ணை. ஊரெல்லாம் என் நிலம்தான். பண்ணையாள், மாட்டுக்காரான்னு வீடு ஜே ஜே!ன்னு இருக்கும். செத்தாளே, மூத்தவ— பம்பரமாச் சுத்துவா — வேளைக்கு முப்பது ஆள் காரனுக்கு வடிச்சு நிமிர்த்துவா — வீட்டு வேலே — வெள்ளாமை எதுக்கும் அஞ்ச மாட்டா. அவ கொடுத்து வைச்ச மகராசி — போயிட்டா — இந்த மூதேவி வந்து சேர்ந்தது — ஒரு பிள்ளையைப் பெத்துக் கொடுக்கத் துப்பில்லே...''

வைடமின் பானம்

8 பொதினா இலைகள் 1 கிளாஸ் தண்ணீர் 1 எலுமிச்சையின் ரஸம். 2 டீஸ்பூன் தேன்.

கொதிக்கும் தண்ணீரைப் பொதினா இலை மேல் ஊற்றுங்கள் 5 நிமிடம் மூடி வைத்து ஊற வைக்கவும். இதை வடிகட்டி எலுமிச்சை ரஸம், தேன், சேர்க்கவும். சுவையான பானம். ஜலதோஷத்திற்கு முக்கியமான மருந்து இது. மென்மையான சருமம் தரும்.

—தனலட்சுமி.

''டாக்டரிட்ட காட்டினீங்களா?'' என்னையும் அறியாமல் கேட்டு வைத்தேன்.

''காட்டினேனே — மெட்ராஸ் அழச்சிண்டு போய் பிரைவேட் நர்சிங் ஹோமிலே வைச்சு வைத்தியம் பார்த்தேன். ஹிஸ்டீரியான்னான். எனக்கு வெள்ளாமையை விட்டுட்டு அவளோட உட்கார்ந்திருக்க முடியுமோ?'' மூச்சு விடக் கொஞ்சம் நிறுத்தினார்.

''இப்ப எங்க இருக்கா, குணமாகவே இல்லையா?'' பரிதாபமாகக் கேட்டேன்.

''வியாதியா இருந்தாத்தானே, ஸ்வாமி குணமாக? உடம்பு பூரா திமிரு. தேவலேன்னு அப்பன்காரன் அழைச்சிண்டு வந்தான். கூடவே அந்த டாக்டரும் வந்தான். இப்ப இருக்காளே, அவளை இன்னொரு கல்யாணம் பண்ணிண்டுட்டேனும். அதுக்காக

இங்கே இருக்கவே மாட்டேன்னு, அந்த டாக்டரோடவே புறப்பட்டுப் போயிட்டா. வருஷக்கணக்கிலே உடம்பு சரியில்லேன்னு ஆசுபத்திரியிலே போய்ப் படுத்துண்டுட்டா, வீட்டிலே பொம்மனாட்டி இல்லாம நா இவ எப்ப வருவான்னு காத்துண்டிருக்க முடியுமா? இவளைப் போல இன்னும் நாலு பெண்டாட்டியை வெச்சு ரட்சிக்க எனக்கு சக்தி இருக்கு. ஐவேஜு இருக்கு. இவளுக்கு வேண்டியது வயிறு வாடாமல் சோறும், மானம் போகாம துணியும் தானே?''

அவ்வளவுதானா? ஒரு இளம் பெண்ணுக்கு வேண்டியதெல்லாம் இவ்வளவுதானா?

ஒரு பெருமூச்சு விட்டபடி ''அப்ப நா வரேன்'' என்று மறுபடி எழுந்து கொண்டேன்.

''காபி சாப்பிட்டுட்டுப் போங்கோ'' அந்தப் பெண் கையில் காபியுடன் நின்றாள்.

''ஆ... மா... ம்... காபி... காபி சாப்பிடுங்கோ'' என்று உளறினார் அவர் — பார்வை மனைவியை எரித்தது.

காபியை ஊஞ்சலில் வைத்தபோது அவள் கைகளைப் பார்த்தேன். மெலிந்து நீண்டு கொஞ்சம் கூட மென்மையே இல்லாத துடுப்புப் போன்ற கைகள். ஆனால் அதில் நிறையப் பொன் வளையல்கள். ஒட்டைச் சிவிங்கி போன்ற கழுத்து — ஏகப்பட்ட தங்க சங்கிலிகள். காதிலும், மூக்கிலும் மின்னும் வைரங்கள்.

''பெண்ணே! உன் இந்த வாழ்க்கையில் நீ உண்மையிலேயே சந்தோஷமாக இருக்கிறாயா?'' என்று மனசுக்குள் எண்ணிக் கொண்டேன்.

''ஏண்டி ஒரு காபி போட இவ்வளவு நேரமா?'' அதட்டினார்.

''எடையன் வந்து கூப்பிட்டான் — புதுப் பாலிலேயே கலந்துடலாமேன்னு—'' பயந்து கொண்டே சொன்னாள் — பயமா அது? பயப்படுவது போல் நடிப்பு — 'சரிதான் போடா' என்பது போல் அந்தக் கண்ணில் தெரியும் ஏளனம் — எது நிஜம்?

''மாட்டுக்காரனோட சல்லாபம் பண்ணிண்டிருந்தியாக்கும். அதான் கூப்பிட கூப்பிடக் காதில் விழவில்லை...''

''ஐயோ! இவர் என்ன இவ்வளவு 'சீப்' ஆக கத்திட்டு இருக்கிறார்? அதுவும் மூன்றாம் மனிதர் முன்...?''

சங்கடத்துடன் அவள் முகத்தைப் பார்த்தேன். ஆனால் அவளுக்கு அது உறைத்ததாகத் தெரியவில்லை. ஏதோ 'காபிக்கு சர்க்கரை போட்டாயா?' என்று அவர்விசாரிப்பது போல் எங்கேயோ பார்த்துக் கொண்டு கைகளால் தலைப்பின்னலைவிஷமம் பண்ணிக் கொண்டு நின்றாள்.

''இங்கே நின்னுண்டு என்ன சதிர் ஆடறே — காபி கொடுத்தாச்சோல்லியோ? உள்ளே போய் அடுப்புக் காரியத்தைக் கவனி' என்று எரிந்து விழுந்ததும் கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல் என்னைப் பார்த்துச் சிரித்தபடி உள்ளே போனாள்.

'ஹோ'வென்ற இரைச்சலுடன் நர்சரிக் குழந்தைகள் மாதிரி ஆறாக்கிலிருந்து படி வரை வரிசையாக ஏழெட்டுக் குழந்தைகள், உள்ளிருந்து ஓடிவந்தன. 'அத்திம்பேர் — அத்திம்பேர்! அத்தனையும் இங்கிரே!' என்று அவர் கையைப் பிடித்து ஒன்று இழுக்க மேல் வேஷ்டியைப் பிடித்து ஒன்று இழுக்க — ஒரே அமளி.

''சீ — போங்கடா — சனியங்களா —குட்டிப் பிசாசுகளா — ஏய் — யாருடீ உள்ளே! இதுகளை இழுத்துண்டு போ—'' என்று கத்தினார். உள்ளேயிருந்து அவள் வந்தாள். அவள் கண்களில் சோகம்.

''எல்லாம் அவ கூடப் பிறந்தவா — பெரிய குடும்பம் — ஊரோட, தனி வீடு பார்த்துக் கொண்டு வெச்சிருக்கேன் —சாப்பாட்டுக்கு நெல்லு அளந்து விடறேன். துணிமணி வாங்கித் தரேன். முதல்இரண்டு கல்யாணத்துலே தான் குழந்தை குட்டி ஒண்ணும் இல்லே. இந்த மாதிரி குடும்பத்துலே



பண்ணிட்டாலாவது பிறக்குமா பாப்போம்னுதான். ஊரார் குழந்தையை ஊட்டி வளர்த்தால் தன் குழந்தை தானே வளரும் பாரேன்.''

ஏதோ பெரிய ஹாஸ்யத்தைச் சொல்லி விட்டது போல் கெக்கெக் என்று தானே சிரித்துக் கொண்டார் — ரேழிக் கதவு திறக்க அந்த வாலிபன் வெளிப்பட்டான்.

''இதுவும் அவ மாமாதான் — வேலை ஒண்ணுமில்லாம ஊரைச் சுத்திண்டிருந்தான் — காரியஸ்தனு கணக்கு வழக்கைப் பார்த்துண்டிருன்னு அழைச்சிட்டு வந்தேன்—'' சுயபுராணம் ஓய்வதாக இல்லை.


தெரு வாசலில் இறங்கி நடந்தேன் — செருப்பை மறந்து விட்டது நினைவுவர, மீண்டும் திரும்பினேன். ரேழிக் கதவு அடைத்திருந்தது. உள்ளே அவர் மனைவியிடம் கத்துவது கேட்டது.

''கண்டவனுக்கெல்லாம் என்னடி காபி? எவனாவது வந்தாப் போதுமே? சுத்தி சுத்தி வருவியே?''

'பெண்ணே! இந்தக் கிராதகனை நீ எப்படிச் சகித்துக் கொண்டிருக்கிறாய்?''

குழந்தைகள் கோஷ்டியாகச் சாப்பிட்டு விட்டுக் கொல்லைப்புறம் தட்டு அலம்ப ஓடுவது கண்ணில் பட்டது.

'புரிந்து விட்டது, பெண்ணே! நீ எதற்காக யாருக்காக இவனை சகித்துக் கொண்டிருக்



கிருய் என்று புரிந்து விட்டது. இன்னும் உன் போன்ற பெண்களால் தான் உலகம் வாழ்கிறது — நீ வாழ்க!'

சத்தம் இல்லாமல் நழுவினேன்.

2

மீண்டும் பஸ் பிடித்து எங்கள் கிராமத்தை அடைந்த போது உச்சிப் பொழுதாகி விட்டது. இந்தப் பக்கம் வந்து எத்தனை நாளாயிற்று? ஊரில் யார் இருப்பார்களோ அல்லது எத்தனை பேர் என்னைப் போல் வெளியூருக்குப் பறந்திருப்பார்களோ?

கிருஷ்ணமூர்த்தி சார் — தருமுவின் அப்பா — அங்கு இருப்பாரோ? தர்முவைத் தவிர உறவினர்கள் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

> மிதி பாகற்காயின் (சிறிய அளவில் குண்டு குண்டாக இருக்கும்). இலைகளைப் பறித்துச் சுத்தமான அம்மியில் ஐந்தாறு கெட்டி மிளகுடன் நைசாக அரைத்து, ஒரு சுத்தமான, மிருதுவான வெள்ளைத் துணியில் வைத்து, மாலைக் கண்களைச் சுற்றி வட்டமாக பற்றுப் போட்டால் மாலைக் கண் நோய் மறையுமாம். இதை சித்த வைத்தியம் கூறுகிறது.
>
> —திருமதி தேவனாதன்.

பெண் செய்த தலைகுனிவான காரியத்துக்குப் பின் மனுஷன் உயிரோடு இருக்காரோ? இல்லையோ? அதுவே சந்தேகம் தான்.

.வண்டிச் சட்டத்தில் சாட்டையை உரசிக் கொடுக்கும் சப்தம். சன்னாசி ஒருவன்தான் மாட்டை அடிக்காமல் இப்படிச் சத்தப் படுத்தியே விரட்டுபவன். திரும்பி பார்த்தேன். சன்னாசியேதான்.

ஓ! இதோ என் இளம் பருவத் தோழன். அந்தக் காலத்தின் ஒரு பிரதிநிதி. என் தந்தையின் வயதொத்தவன் என்றாலும் வயது எங்கள் தோழமைக்குத் தடையாக இருந்ததில்லை.

''சன்னாசி — நல்லாயிருக்கியா?'' வண்டி நின்றது.

''யாரு தெரியல்லியே? கண்ணு வரவர மறைக்குதுங்க. இந்த மாடுங்கதான் பழகின வழியே என்னை ஓட்டிக்கிட்டுப் போவுது''— கொஞ்சம் நிதானித்தவன் குரலை இனம் கண்டு, ''கோடி வீட்டு அம்பியா? வா தம்பி! வடக்கே வேலைன்னு போனாலும் போனே? இந்த ஊரையும் மனுஷாளையும் அடியோடு மறந்திட்டியே.''

''வாத்தியாரய்யா இங்கே தான் இருக்காரா?''

''ஆமா தம்பி. வேறே போக்கிடம்? வயசாச்சு — கண்ணும் தெரியல்லை. காதும் கேட்கல்லை. வீட்டோடு விழுந்து கிடக்காரு—ம்— அவர் தலையெழுத்து அப்படி — ஒரே பொண்ணு. தாயில்லைன்னு தாங்கி வளர்த்தாரு — அது பண்ணின கோலம் தான் அவரை இப்படியாக்கிடிச்சு.''

''தர்மு அப்பாவை வந்து பார்க்கிறதேயில்லையா, சன்னாசி?''

''இம்மா நேரம் அவரோட அழுது மன்னாடிட்டுத்தான் போவுது — நாந்தான் திருவொய்யாத்திலே கொண்டு விட்டுட்டு வந்தேன்—''

''என்ன — தர்மு இங்கே இப்ப வந்திருக்காளா?'' என் உடலும் உள்ளமும் பறந்தன.

''ஆமா சாமீ அது பிறேகிதி பாலா ஊடு இருக்கில்லே, பாலாசாமி அக்ரகாரத்திலே— அதான் தம்பி, நம்ம டாக்டர் ஊடு —அங்கே தான் தங்கியிருக்கு. கூட அந்த டாக்டரும் வந்திருக்காரு.''

''ஓ— தர்மு அவ்வளவுக்குத் துணிந்துவிட்டாளா? கட்டிய புருஷனுடன் வாழ மாட்டேன் என்று பரபுருஷனுடன் ஓடியதும் அல்லாமல், அவனையும் கூட்டிக் கொண்டு இங்கே அப்பாவைப் பார்க்க வந்தாளா?'

''சமாதிலே கச்சேரி பண்ணப் போவுதாமில்ல — அதுக்குத்தான் வந்திருக்காம். கனி முத்திப் போச்சு சாமீ''

''தருமு உன்கிட்ட ஏதாவது பேசினளா, சன்னாசி?'' என்றேன்.

''பேசாம? ஏதும் போதே அப்பாவைப் பத்தி ஏதேதோ கேட்டிச்சு — கூட அந்த டாக்குட்டரும் இருந்தாரா? எனக்குப் பேசவே பிடிக்கல்லை. வீட்லே நல்ல சண்டை போலிருக்கு — அழுதுக்கிட்டே வந்துஏறிச்சு. அய்யர் நல்லா டோஸ் விட்டிருப்பார்ன்னு நெனச்சேன். இருந்தாலும் பாவமா இருந்தது. கூட வந்த ஆள் தான் — ''அழாதேம்மா''ன்னு சமாதானம்பண்றாரு — அவரைப் பார்த்தாலும் நல்ல மனுசனாத்தான் தெரியுது — நா படிக்காத மூடம் — எனக்கு என்ன தெரியும்?'' என்று சொல்லிவிட்டு மாடுகளை விரட்டியபடி போய் விட்டான்.

'சன்னாசி! தர்முவின் புருஷனை ஒருமுறை கண்ணால் பார்த்திருந்தால், அவனுடன் ஒரு பத்து நிமிஷம் பழகியிருந்தால் அவன்மேல் குற்றம் சொல்ல மாட்டாய்! ஏன் —நானே ஒரு சணம் அவளைத் தவறாக நினைக்கவில்லையா?'

கல்யாணத்துக்கு முன் அவனைப் பார்த்து இரண்டாம்தாரம் வேண்டாமென்றபோது, அப்பாவின் சார்பில் எவ்வளவு வாதாடினள்? அவ்வளவு ஸ்திர புத்தியுடன் தெரிந்தே



ஹேலோ வழங்குது
கூந்தல் எழில்—
கூந்தல் பெற்றிடும்
மென்மை சுகம்.
அதன் மணமோ
அபூர்வப் புதுமையே,
ஹேலோ உணர்வே
உன்னதமே.

வியப்பூட்டும் புதிய ஹேலோ வரிசை

ஹேலோ எக்
ஷாம்ப்பூ—
புரத
ஊட்டத்திற்கானது.

புதிய ஹேலோ
க்ரீன் ஆப்பிள்
ஷாம்ப்பூ—
வியப்பூட்டும்
புத்துணர்வு மணம்
அளிக்கிறது.

புதிய ஹேலோ
ஹெர்பல்
ஷாம்ப்பூ—
மூலிகைகளின்
இயற்கை நலன்கள்
உள்ளது.

ஹேலோ உணர்வே உன்னதமே!

GKGE.883.29.TM

கல்யாணம் செய்து கொண்டவள் இப்போது ஏன் இப்படிச் செய்தாள்?

யோசித்தபடியே கால்கள் என்னை தர்மு வீட்டருகே நிறுத்தியிருந்தன.

''சார் — சார்'' என்று குரல் கொடுத்தேன்.

கம்பிக் கதவு மூடியிருக்க, கூடத்து விசிப் பலகையில் கந்தல் கம்பளியில் ஒரு உருவம் சுருண்டு கிடந்தது. சாரா அது?

''யாரது? கதவு திறந்துதானிருக்கு— உள்ளே வாங்கோ...''

திறந்து கொண்டு போனேன். கிருஷ்ண மூர்த்தி அதற்குள் கஷ்டப்பட்டு எழுந்து உட்கார்ந்திருந்தார். அவர் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினேன்.

''யாரு? கண்ணும் போச்சு — காதும் போச்சு'' — யாரென்று சொன்னேன்.

''ஹரியா? சௌக்யமா அம்பி? அம்மா எப்படி இருக்கா? வேலையெல்லாம் எப்படி இருக்கு? கல்யாணமாயிடுத்தா?'' என்றெல்லாம் விசாரித்தார்.

''அம்மா என்னோடதான் இருக்கா — உங்க ஆசீர்வாதத்துலே நன்னாயிருக்கேன் சார்! கல்யாணம் இனிமேத்தான் ஆகணும். எங்க குத்தகைக்காரன் காலமாயிட்டான்— நான் வடக்கே இருந்துண்டு நெலத்தை வெச்சிண்டு என்ன லாபம்? அங்கேயே ஒரு பிளாட் வாங்கிடலாம்னு உத்தேசம் — நெலத்தை குத்தகைக்காரன் மகனே ஒரு விலை போட்டு எடுத்துக்கறானும் — வீட்டையும் குடி இருப்பவரே வாங்கிக்கறதாச் சொன்னார் — அதான் ரெண்டையும் முடிச்சிட்டு போகலாம்னு வந்தேன்'' என்றேன்.

சார் ஒரு பெருமூச்சு விட்டார்.

''ம்— வீடா அது? எப்படியாப்பட்ட வீடு? சங்கீத தேவதையேன்னா வாசம் பண்ணித்து? அந்தாத்துலே காலடி வைக்காத வித்துவான் அந்த நாள்ள யாருண்டு? அந்தாத்துப்புழுதியை மிதிச்சாலேபோதும்னு ஓடி வருவானே — ம்— அதுக்கெல்லாம் ஆசைப்பட்டுத்தானே நானும் உங்க அப்பாவை அந்தப் பாவிக்குப் பாட்டுச் சொல்லி கொடுக்கச் சொன்னேன்?''

கிருஷ்ணமூர்த்தி சாரின் வார்த்தைகள் மீண்டும் என்னைப் பழைய நினைவுகளுக்கு இழுத்துச் சென்றது.

'மூத்தண்ணா' என்றால் தான் அப்பாவை எல்லோருக்கும் தெரியும். அந்த நாளைய சங்கீத வித்வான்களில் சீனியர். தவமிருந்து அவர் பெற்ற பிள்ளையான எனக்கு சங்கீதத்தில் ஈடுபாடு இருந்தாலும், கற்றுக்கொள்ள ஆசையில்லை.

அப்பாவுக்கு மனசுக்குள் நான் அவர் வாரிசாக மாறவில்லை என்ற ஆதங்கம் இருந்தும் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. அந்த நேரத்தில் தான் மாயவரம் பக்கமிருந்து கிருஷ்ணமூர்த்தி தர்முவுடன் இந்த ஊருக்குக் குடி வந்தார்.

திருவையாறு ஹைஸ்கூலில் டீச்சர். தர்முவுக்குப் பாட்டு சொல்லித் தரும்படி அப்பாவிடம் வேண்டிக் கொண்டார். அப்பா புகழேணியின் உச்சியில் இருந்த நேரம்.

நான் சங்கீதத்துக்குச் சத்துரு இல்லை. அப்பா தர்முவுக்கு சொல்லிக் கொடுப்பதை கேட்டுக் கொண்டிருப்பேன். தர்மு பாடும் போது ரசிப்பேன். ஏனோ எனக்குக் கற்றுக் கொள்ளத் தோன்றவில்லை.

ஒரு சாதாரண ஜலதோஷம், தொண்டை கட்டுப் போல்தான் அது ஆரம்பித்தது. அப்பா படுக்கையில் விழுந்தார். கொஞ்ச நாளைக்கு அம்மாவின் கைவைத்தியம். அதில் தொண்டை. மசிவதாக இல்லை. பிறகு உள்ளூர் டாக்டர் — டவுன் டாக்டர்— சகவித்வான்கள் இன்னும் உறவினர்கள் வற்புறுத்தலின் பேரில் அம்மா அப்பாவை மெட்ராசுக்கு அழைத்துப் போனாள்.

'இட்டிலிக்கு உளுந்து போதவில்லையா? இட்டிலி கெட்டியாக இருக்கிறதா? மாவில் ஒரு கரண்டி நெய், அல்லது நல்லெண்ணெயை ஊற்றி நன்கு கலந்து வாருங்கள் இட்டிலி மிருதுவாக இருக்கும்.

—வி. ஜெயலட்சுமி.

ஸ்கூல் இருந்ததாலும், பரீட்சை சமயமாதலாலும் நான் கிருஷ்ணமூர்த்தி சார் வீட்டிலேயே தங்கி விட்டேன் — இடையென்று அம்மா ஒரு நாள் திரும்பி வந்து விட்டாள் அப்பாவுடன் — அப்பா இன்னும் மெலிந்திருந்தார் — கைத்தாங்கலாகத்தான் அவரை நடத்தி வந்து — படுக்க வைத்தார்கள்.

அப்பாவுக்கு என்ன ஆயிற்று?

கூட வந்த வித்வான்களிடம், 'நான் சங்கீத தேவதையோட கைகோத்து நடந்தவன் — என் தொண்டு போறும்னு அவளுக்குத் தோணிட்டா என்னை அழைச்சுக் கட்டும். மரணத்தை எதிர் நோக்கிக் காத்துண்டிருக்கிறது கொடுமை — நீங்களாம்— என் விதிதான்கிறது உண்மையாயிருந்தா ஒரு துளி விஷம் வாங்கிக் கொடுங்கோ — என்னை நிம்மதியாச் சாக விடுங்கோ'' என்று எழுதிக் காண்பித்தார். அவர் கண்களில் கண்ணீர். அம்மா விக்கி விக்கியழுதாள். அப்பா அவள் கண்களைத் துடைத்தார். கூடவந்தவர்களாலும் கண்ணீரை அடக்க முடியவில்லை —

'கொஞ்ச நேரம் கழித்து கிருஷ்ணமூர்த்தி சார் வந்த போது நான் ரேழி அறையில்

மறைந்து கொண்டேன். சின்னப் பையன் பயப்படுவேன் என்பதால் அம்மா என்னிடம் உண்மையைச் சொல்லவில்லை. ஆனால் சாரிடம் எதையும் மறைக்க மாட்டாள்.

'அப்பாவுக்குத் தொண்டையில் கான்சர்!'

கான்சரின் பயங்கரம் புரியாத வயது என்றாலும், சீரியஸ் புரிந்தது. அப்பாவின் நாட்கள் எண்ணப்படுகின்றன.

சென்னையில் ஒரு சின்ன ஆபரேஷன் மூலம் கான்சர் என்று உறுதிப்படுத்திவிட்டார்கள். மேலும் ஒரு பெரிய ஆபரேஷன் செய்து குரல் வளையை அகற்றி விட்டு செயற்கைச் சாதனம் உபயோகித்தாலும் உயிருக்கோ, குரலுக்கோ உத்தரவாதம் இல்லை. பெரிய ஆபரேஷன் வேண்டாமென்று அப்பா பிடிவாதமாக மறுத்து விடவே அவர்கள் ஊர் திரும்ப வேண்டியதாயிற்று.

என் உள்ளம் பதைத்தது. அப்பாவுக்கா இந்த கதி? டிபன் வேண்டுமென்றால் கூட...

'உப்புமா கிண்டி வாயேண்டி — ஒய்யாரமான

பெண்ணே — உல்லாசமான பெண்ணே!' என்று சங்கீதத்திலேயே அம்மாவைக் கூப்பிடும் அப்பா—

அவருக்கா பேசக் கூட முடியாத நிலை?

ஆண்டவன் நல்ல வேளையாக அந்த நிலையில் அதிகநாள் அவரை வைத்திருக்கவில்லை. மரணதேவன் கருணையுடன் அவரை அழைத்துக் கொண்டு விட்டான்.

படிப்பு முடிந்து பட்டம் பெற்று வேலைக்காக அலைந்து பம்பாயில் ஒரு நல்லவேலையும் கிடைத்து விட்டது. வேலையை ஒப்புக் கொண்டு ஒரு வருஷத்துக்குப் பின் பத்து நாள் லீவில் அம்மாவையும் அழைத்துப் போகலாம்னு வந்தேன்.

உள்ளே நுழைந்ததுமே 'தர்முவுக்குக் கல்யாணம் நிச்சயமாகி விட்டது'' என்றாள் அம்மா.

தர்மு நன்றாக வளர்ந்து பெரியவளாகி விட்டாள். எஸ். எஸ். எல். ஸி.யுடன் நிறுத்திவிட்டு வீட்டிலேயே அப்பாவிடம் சமஸ்கிருதக் காவியங்களைப் படிக்கிறாள். தமிழ்க் காவியங்களும், ஆங்கில நூல்களையும் கூட விட்டு வைப்பதில்லை.

''அப்படியாம்மா? சந்தோஷம் — மாப்பிள்ளை யாரு?'' என்றேன்.

''பக்கத்து ஊர்தாண்டா—பெரிய பண்ணையாம் எட்டுக்கட்டு வீடு — ஏகப்பட்ட நிலம்— கல்லுக்கல்லா மூத்தா நகை—''

''இளையாளாம்மா?'' என்று அம்மா முடிப்பதற்குள் நான் அலறிவிட்டேன்.

''ஆமாண்டா — மூத்தாளாக் கொடுக்கப் பணத்துக்கு அவர் எங்கே போவார்? வரதட்சணை — சீர்செனத்தி கொள்ளையாக் கேட்கிறாளே — காலமெல்லாம் இந்த வாத்தியார் வேலையிலே அவராலே என்னத்தைச் சேர்த்து வைக்க முடியும்?''

விடிய விடிய இருபது வயசு இருக்குமா தர்முவுக்கு? என்னை விட சின்னவள். அவள் இதை ஒப்புக் கொண்டாளா?

இத்தனை நாளாக என் மனதில் தர்முவிடம் நான் வைத்திருந்தது காதலா — சகோதர பாசமா — இந்த வயதில் அதை எனக்கு இனம் பிரிக்கத் தெரியவில்லை. கண்டிப்பாக அதைக் காதல் என்று சொல்ல மாட்டேன். பக்தி என்று வேண்டுமானால் சொல்லலாம்.

''அம்பி — என்னடா — தூங்கிட்டியா?'' கிருஷ்ணமூர்த்தி சார் என்னை உலுக்கினார்— நான் சுயநினைவுக்கு வந்தேன்.

''ம்— ஒண்ணுமில்லே சார் — ஏதோ பழைய ஞாபகம் — தர்முவைப் பத்தியெல்லாம் கேள்விப்பட்டேன். இப்ப தர்மு இங்கே வந்தாளாமே? நான் கேட்டதெல்லாம் நிஜம்தானா சார்?''

''எல்லாம் நிஜம்தாண்டா அம்பி!'' என்று கண்ணீர் விட்டார்.

''ஒருவேளை இரண்டாந்தாரமா வயசானவருக்குக் கொடுத்தது பிடிக்கல்லியோ— சார்?'' என்று இழுத்தேன்.

''அவளைக் கேக்காம செய்வேனாடா அம்பி? அவளே மனப்பூர்வமா சம்மதிச்சுத்தாண்டா பண்ணினேண்டா. சிரிச்சுண்டே கழுத்தை அறுத்துட்டாடா பாவி!'' என்று புலம்பினார்.

''நடந்தது என்னன்னு விபரமா சொல்லுங்க சார்!''

''என்ன நடந்தது? ஊராரைப் போலக் குழந்தையும் குட்டியுமா இல்லாட்டாலும், வயிறு நிறையச் சாப்பிட்டுண்டு மனசு நிம்மதியா இருப்பான்னு நெனச்சேன். திமர்னு ஒருநா மாப்பிள்ளை வந்து ஆகாசத்துக்கும் பூமிக்குமா குதிச்சார்.

''பேய் பிடிச்ச பெண்ணைத் தலையிலே கட்டிட்டீரே''ன்னு கத்தினார். நடுங்கிப் போய் அவர் பின்னால் ஓடினேன். பேய்தான் பிடிச்சதோ, அந்த டாக்டர் சொன்னமாதிரி

சீயக்காய் அரைக்கும்பொழுது, வழக்கமாக, அதனுடன் சேர்க்கும் சாமான்களோடு 'பூந்திக் காய்' என்பதை (ஆயுர்வேத மருந்துக் கடையில் கிடைக்கும்.) உடைத்து அதன் தோலைக் கலந்து அரைத்தால் சீயக்காய் பவுடர் தலைக்குத் தேய்க்கும் பொழுது ஷாம்பூ போல் நன்கு நுரை வரும். தலைமயிர் பளபளப்பாகவும் மிருதுவாகவும் இருக்கும்

—ஜானகி


முகம் மலர்ந்து புன்னகை புரிந்திட மூன்று வழிகள்



சேவரிட் சேமியாவிலிருந்து தயாரிக்கப்பட்ட 'தயிர் சேமியா' அருந்தியதால் முகத்தில் அரும்பும் இளநகை.



சேவரிட் சேமியாவிலிருந்து தயாரிக்கப்பட்ட சுவையான உப்புமாவை சுவைத்தபின் ஏற்படும் பெருநகை.



சேவரிட் சேமியாவிலிருந்து தயாரிக்கப்பட்ட பாயசத்தின் சுவையை கண்டுணர்ந்தபின் ஏற்படும் கூட்டுச்சிரிப்பு.

புதிய
சேவரிட்
சேமியா
தித்திப்போ அல்லது காரமோ உங்களுக்கு விருப்பமான ஆகாரத்தை தயாரித்திட.

ஒரே வகையான உணவை தின்று தின்று சலித்துவிட்ட நீங்கள் புதிய சேவரிட் சேமியாவின் உதவியால் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துங்கள்.

சிறந்தது, சுவையானது, சமைக்கும் போது கட்டியாவது இல்லை, 5 நிமிடங்களில், விரைவாக, மிக எளிதாக தயாரிக்கலாம்.

பொன்னிற சேவரிட்

தித்திப்போ அல்லது காரமோ உங்களுக்கு எது விருப்பமோ அதனை பொன்னிற சேவரிட் கொண்டு தயார் செய்திடுங்கள். அவர்களது மலர்ந்த முகம் காட்டிவிடும் அதன் தெவிட்டாத சுவையை.

உப்புமா-சேவரிட் வழங்கும் சுவையான காலை உணவு. உங்கள் அன்புக்குரியவர் அலுவலகம் செல்லும்போது கொடுத்து அனுப்ப.

தயிர் சேமியா--பள்ளியிலிருந்து துள்ளிவரும் குழந்தைகளின் மாலைநேர பசியை ஆற்றிட சேவரிட் வழங்கும் 'தயிர் சேமியா' (செய்முறை கீழே தரப்பட்டுள்ளது).

பாயசம்—அறுசுவை உணவை உண்டபின், தேன்சுவை பாயசம் அருந்த வேண்டாமா? சேவரிட் சேமியாவிலிருந்து பாயசம் தயாரித்திடுங்கள். அதன் சுவையை அனுபவித்திடுங்கள்.

சேவரிட், சுகாதார முறையில், கைகள் படாமல், நவீன ஸ்விஸ் இயந்திரத்தினால் தயாரிக்கப் படுபவை. 200 கிராம் மற்றும் 400 கிராம் சீல் செய்யப் பட்ட பாக்கெட்டுகளில் வருகின்றன. இன்றே சுவைத்துப் பாருங்கள்.


தயாரிப்பாளர்கள்: யுனைடெட் இந்தியா மெக்கரோனி, திண்டுக்கல்-624 310 (தமிழ்நாடு)

செய்முறை:


தேவையான அளவு நீரை கொதிக்க வைத்து, சிறிதளவு உப்பை சேர்த்து சேவரிட் சேமியாவை அதிலே போட்டு வேக வையுங்கள். பிறகு கீழே இறக்கி, வேண்டிய அளவு தயிரோடு அதனை கலந்திடுங்கள். உங்கள் சுவைக்கு ஏற்ப வெங்காயம், கொத்தமல்லி, கறிவேப்பிலை, மிளகாய் இவற்றை அளவோடு அதிலே கலந்து கொண்டால், சுவையான 'தயிர் சேமியா' தயாராகிவிடும். உங்கள் நாவிலே நீர் ஊற்றெடுக்கும்.




சேவரிட் சேமியா ஆகாரம் பல்சுவை நிறைந்த பலகாரம்



வழங்குவோர்


யாவரும் விரும்புவது
அசோகா
சுகந்த பாக்கு
MASALA SUPARI
ASOKA
ASOKA NUTS
PLAIN
INTIMATE
5 Ps
10 Ps
AVAILABLE IN
200 GRAMS
100 GRAMS
50 GRAMS
20 GRAMS
Packs and also in minis.
No1506
ASOKA
Mfgrs:
ASOKA BETELNUT CO. (PVT) LTD.,
COIMBATORE - 641 018.
CHARI


5 வருடம் உத்திரவாதமுள்ள 'மெரி' சூப்பர் ஸ்பெஷல் தங்க கவரிங் நகைகளை 15 வருட ஆராய்ச்சியின் பலனாக இந்தியாவில் முதல் முறையாகத் தயாரித்து இந்தியா முழுவதும் அதிக அளவில் வி.பி.பி. மூலம் அனுப்பி வரும் ஸ்தாபனம். சகல விபரங்களுக்கும் இனாம் கேட்லாக் வாங்கிப் பார்க்கவும் இதில் உள்ள நம்பர்களைக் குறிப்பிட்டு எழுதினால் வி.பி.பி. மூலம் பொருட்கள் அனுப்பப்படும். (வி.பி.பி. சார்ஜ் தனி)
MERI GOLD COVERING WORKS. (Estd: 1963)
P.O. BOX 1405, 14, RANGANATHAN STREET
T. NAGAR MADRAS-600 017 INDIA

ஹிஸ்டீரியாவோ வீட்டைக் கலக்கிண்டிருந்தா அவ. மந்திரவாதிகள் வரதும், பேயோட்டறேன்னு அடிக்கிறதும், என்னாலேயே சகிக்கக்க முடியவில்லே.

''கல்யாணமாறதுக்கு முன்னாடி சத்தியமா நன்னாத்தான் இருந்தா. இப்பதான் ஏதோ ஆயிடுத்து — என்னோட அனுப்புங்கோ — காவேரிலே பத்துநா ஸ்னானம் பண்ணி தர்மாம்பா சன்னதியை பிரதட்சணம் பண்ணட்டும் – எதுவாயிருந்தாலும் சரியாயிடும்னேன்.'

மாட்டேன்னுட்டார் — அவளோ கவத்தை வெறிக்கறா — பல்லைக் கடிக்கிறா — தலையிலே மோதிண்டு அழறா — என்னையே அடையாளம் தெரிஞ்சுக்கல்லே. தலையெழுத்துப் படி நடக்கட்டும்னு வந்துட்டேன்.

அஞ்சாறு மாசம் கழிச்து ''பெண்ணை மெட்ராஸ் ஆஸ்பத்திரியில சேர்த்திருக்கேன். கூடப் போய்த் துணை இருக்கணும்''னு சொன்னார். — மெட்ராஸ் போனேன்

தர்மாம்பா புண்யத்திலே அந்தடாக்டரின் வைத்தியத்தில் கொஞ்சம் கொஞ்சமாபழைய நிலைமைக்குத் திரும்பினா. என்னைப் புரிஞ்சிண்டு பேசினா — ஆனா பழைய உடம்பைப் பத்தி ஏதாவது பேசினா அழுதா. டாக்டரும் பழைய பேச்சையே எடுக்கப்படாதுன்னார்.

நன்னாத் தேவலைன்னு டாக்டர் சொன்னதும் மாப்பிள்ளைக்கு லெட்டர் போட்டேன். அழைச்சிண்டு வந்து சேருங்கோ'ன்னுபணம் அனுப்பினார். அதை எடுத்துண்டுப்போய் அவகிட்ட காட்டினா சந்தோஷமாக்கிளம்ப வேண்டியதுதானே?

''நா ஊருக்கு வரமாட்டேன்''னுபழைய படி ஒரே அழுகை —

''இத்தனைப் பணத்தைக் கொட்டி அந்த மனுஷன் பாடுபட்டதெல்லாம் இவளை நான் என் வீட்டிலேயே வாழாவெட்டியா வெச்சுக்கவா''ன்னு கேட்டுட்டேன். ''நீங்களும் வந்தா நா போறேன்''கிறா இவ. 'ஆகட்டும்— நானும் வரேன்'னு டாக்டரும் கிளம்பிவிட்டான்.

எனக்கு அப்பவே 'கருக்'குனு பட்டுது— இருந்தாலும் இவ்வளவு கஷ்டப்பட்டுப் பெண்ணை ஒரு மனுஷியா மாத்தியிருக்காரே, மனசு நோகப் பேசப் படாதுன்னு இருந்தேன். எல்லாருமாப் போய் இறங்கினோம். இவ ஆஸ்பத்திரிக்குப் போயி வருஷத்துக்கு மேல ஆச்சு. மாப்பிள்ளை எத்தனை நாள் ஒண்டியாத் திண்டாடுவான்?

இன்னொரு கல்யாணம் பண்ணிண்டுட்டான்–யாரோ என்னைப் போல தரித்திரன், பாவம், மூணாந்தாரமாக் கொடுத்துவிட்டான். அவளைப் பார்த்தாளோ இல்லையோ, மறுபடியும் ஆவேசம் வந்துடுத்து. அவரை அடிச்சு, பிராண்டி, சிவசிவா — இப்ப நினைச்சாலும் உடம்பு நடுங்கறது. இந்த வீட்டிலே காலெடுத்து வைக்க மாட்டேன்னு அந்த டாக்டர் பின்னாடியே, வந்த வண்டியிலேயே

ஏறிண்டு போயிட்டா — தனா சிரிக்கப் போச்சு...

நான் எவ்வளவோ சொல்லேன் —'நடந்தது நடந்துப் போச்சு — ரெண்டு பேரும் அக்கா தங்கை மாதிரி, ஒத்துமையாக்குடித்தனம் பண்ணுங்கோ'ன்னேன். கேட்கல்லே. அப்பதான் நா தப்புப் பண்ணிட்டேன். ''உனக்கு இங்கே இருக்கப் பிடிக்காட்டா, என்னோடு வந்துடு'ன்னு கூப்பிட்டா வந்திருப்பாள். மகா பாவி நான்.''

''நீ இங்கே புருஷனோட அனுசரிச்சிண்டு இருந்தா இரு. இல்லேன்னா பிறந்த வீடுன்னு ஒண்ணு இருக்கறதையே மறந்துடு. என் பெண் செத்துட்டான்னு தலைமுழுகிடறேன்னேன். அப்படி செஞ்சா புருஷனை தவிர வேறே கதி இல்லேன்னு அவரோட

> உடம்பெல்லாம் வலியா? புளிய இலைகளைத் தண்ணீரில் போட்டுக் கொதிக்க வைக்க வேண்டும். அதை வெதுவெதுப்பாக ஆறவைத்து அதில் குளித்தால் உடம்பு வலி உடனே குணமாகி விடும். இன்றும் கிராமத்தில் இந்த வைத்தியத்தைத் தான் செய்து வருகிறார்கள்.
>
> —ஆர். எஸ். சுப்பிரமணியன்.

சேர்ந்து இருப்பான்னு நெனைச்சேன். துண்டை உதறித் தோளிலே போட்டுண்டு நாலெட்டு எடுத்து வைக்கல்லே. வந்தவண்டிலேயே அந்த டாக்டரோடு திரும்பிட்டா. இப்ப அவரோடேயே இருக்காளாம். இப்ப அவர்தான் அவளைப் பாட்டிலே மறுபடியும் இழுத்து விட்டு பிரபலப்படுத்தியிருக்காப்பலே இருக்கு.

இன்னிக்கு ஐயர்வாள் சமாதியிலே பாடப் போறாளாம். இங்கே வந்துட்டுப் போறா அந்த டாக்டரோட. இரண்டு பேரும் என்னோட தனியாப் பேசணும்னா! எனக்கு யாரோடயும் பேச இஷ்டமில்லே. என் முகத்திலேயே முழிக்க வேண்டாம்ன்னு இட்டு அனுப்பிட்டேன்.

தர்மாம்பான்னு அழகாப் பேர் வெச்சேண்டா, அம்பி! இப்படி ஸ்த்ரீ தர்மத்துக்கு எதிரா ஒரு காரியம் பண்ணிட்டு என் மூஞ்சியிலே விழிக்க அவளுக்கு வெட்கமா இல்லே?''

குலுங்கக் குலுங்க அழுத அவரைச் சமாதானப்படுத்தி விட்டு என் நெஞ்சில் இன்னும் கனத்தை ஏற்றிக் கொண்டுதிரும்பினேன்.

அன்று மாலை — திருவையாறை நோக்கி நடந்தேன். முதலில் சமாதியில் தருமுவின் கச்சேரியைக் கேட்க வேண்டும் — பிறகு அவளைத் தனிமையில் சந்தித்து உண்மையை கேட்டறிய வேண்டும்.

உள்ளே நுழையும் போதே 'நிதி சால சுகமா?' காதில் வந்து சுகமாக மோதியது. பிறகு ஒன்றன் பின் ஒன்றாகப் பல கீர்த்தனைகள் — எல்லாம் அப்பாவின் பிட்கைஷ. 'நனு பாலிம்ப நடசி ஒசிதிவோ' என்று மோகனத்தில் அவள் உருகியபோது, அப்பாவே நேரில் வந்து பாடுவது போல் இருந்தது.

மெய்ம்மறந்து கண்ணீர் சிந்தினேன். உண்மையிலேயே இது தெய்வாம்சம்தான்— தெய்வத்துக்கு அர்ப்பணமாக வேண்டிய சாரீரம்தான் — எங்கோ ஒரு குக்கிராமத்தில் அந்த உடல் கொழுத்த பண்ணையாரின் எட்டுக் கட்டு வீட்டின் ஒரு மூலையில் துருப்பிடித்துக் கிடக்க வேண்டியதல்லை.

> மழைக்காலம் வருகிறது. பழைய சாயம் போன குடைகளின் மீது, பூக்கள் ப்ரிண்ட் செய்யப்பட்ட பிளாஸ்டிக் அல்லது ரெக்ஸின் ஷீட்டுகளை வாங்கித்தைத்து விடுங்கள். வெளியே போக புதுக்குடை தயார்.
>
> -கிருத்திகா

படபடவென்று கைத்தட்டல் — கச்சேரி முடிந்து விட்டது. மேடையிலிருந்து இறங்கி வருகிறாள் தர்மு. முன்னைக் காட்டிலும் அழகு. தேஜஸ் கம்பீரம் எல்லாமே கூடியிருக்கிறது.

அவள் வெளியே வருமுன் அவளைப் பார்த்து விட வேண்டும் என்று வாசலுக்கே ஓடுகிறேன். அப்போது தான் அந்த டாக்டரைப் பார்த்தேன்.

ஐம்பதுக்குக் குறையாத வயது — லேசாக நரைத்த தலை — டாக்டர் என்பதால் உடலை நன்றாக வைத்திருந்தார். அவரைப் பார்த்தால் ஒரு மரியாதையான உணர்வு — கையெடுத்துக் கும்பிட வேண்டும் போலத் தான் தோன்றியது.

தர்மு என்னைப் பார்த்து விட்டாள்.

''அண்ணா — நீயா — நீ எங்கே இப்படி—?'' என்று ஓடிவந்து கையைப் பிடித்துக்கொண்டாள்.

''நா அடிக்கடி சொல்வேனே ஹரின்னு— என் குருநாதரோட பிள்ளை. எனக்குக் கூடப் பிறக்காத சகோதரன் — அண்ணா— இவர்தான் டாக்டர் செந்தில் — பேமஸ் சைக்கியாட்ரிஸ்ட் — இப்ப இவரோடு தான் நான் இருக்கேன்'' என்று இரண்டுபேரையும் பரஸ்பரம் அறிமுகம் செய்தாள். 'ஙைாட்டு மீட் யூ' என்று என் கைகளைப் பற்றிக் குலுக்கினார் டாக்டர்.

''ஒரு முக்கிய வேலையா ஊருக்கு வந்தேன். அப்படியே உன் கச்சேரியைக் கேட்கிற பாக்கியம் கிடைச்சது — எத்தனைநாள் ஆச்சு — உன் அமுதக் குரலைக் கேட்டு—?''

''தர்மு! உன்னோட கொஞ்சம் தனியாப் பேசணும். ஒரு பத்து நிமிஷம் ஸ்பேர் பண்ண முடியுமா?'' என்று தயங்கியபடி கேட்டேன்.

''நிறையப் பேசலாம் — முதல்லே என்னோட நா தங்கியிருக்கிற இடத்துக்கு வாங்கோ — எங்களோட சாப்பிடலாம். அப்புறம் ராத்திரி முழுக்கப் பேசலாம் — என்ன?'' என்று டாக்டரைப் பார்த்தாள்.

''ஓகே. — தருமு, முதல்லே நீ வண்டியிலே போய் உன் பிரண்டுகிட்ட இன்னொரு கெஸ்ட் வர்றார்ன்னு சொல்லி இலைபோடச் சொல்லு — நல்லா நிலாக்காயறது —நாங்க பேசிண்டே நடந்து வர்றோம்'' என்றார் டாக்டர்.

''சீக்கிரமா வந்துடுங்கோ!'' என்று வண்டியிலேறிக் கையை அசைத்தாள் தருமு.

''இப்படி ஆத்தங்கரைப்படியில் உட்கார்ந்து பேசுவோமா?'' இருவரும் சமாதியை அடுத்த படித்துறையிலேயே கொஞ்சம் தள்ளி உட்கார்ந்தோம். அடுத்த கச்சேரிக்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன. யாரோ மிருதங்கத்தை சுருதி சேர்ப்பதற்காக, டொக், டொக் என்று தட்டிக் கொண்டிருந்தார்கள் — தம்பூரா இழைகிறது — வயலின் கொஞ்சுகிறது.

''தர்முவின் இந்த நிலைக்குக் காரணம் என்னன்னு தெரிஞ்சுக்கத்தானே அவளைத் தனியா சந்திக்க விரும்பினீங்க?''

வெளிப்படையாகவே கேட்டு விட்டார் டாக்டர்.

''அவள் அவல வாழ்க்கையை அவளால் வாய் விட்டுச் சொல்ல முடியவில்லை— ஆமா, எல்லோரும் அவளைத் தப்பா நினைக்கிறு — வேறே யாருக்கும் சொல்லாமப் போனாலும் அவ அப்பாவுக்குத் தெரியணும்னு நெனைச்சேன். அவர் ஆஸ்பத்திரியில் இருந்த போதே சொல்லியிருக்கணும்.

தன் மேல் உயிரையே வைத்திருக்கிற அப்பாவுக்கு அவர் செய்து கொடுத்த கல்யாணத்தின் அவலம் தெரிந்தால் உடைந்து போவார் என்று அப்போது என்னைத் தடுத்து விட்டாள் தர்மு. அவ என் ஆதரவிலே இருக்காங்கிறதாலே என்னையும் அவளையும் சம்பந்தப்படுத்திப் பேசறது இந்த உலகம்.

ஒரு ஆணின் பாதுகாப்பு இல்லாம இங்கே ஒரு பெண் தனியா வாழ முடியும்னு தருமுவும் தனியா வாழ்ந்திருப்பா —அந்தப் பாதுகாப்பை அவப்பா கொடுக்க மறுத்துட்டுட்டதாலே, நான் அவ அப்பாவா – அவளுக்குத் துணையாயிருக்கேன் – தட்ஸ் ஆல்!''

''அவ்வளவுதானா?''

''என் பொசிஷனைச் சொன்னேன் – தர்முவின் நிலைமையை அவ்வளவு சுருக்கமாச் சொல்ல முடியாது – அது பெரிய கதை—''

பெருமூச்சுவிட்டபடி டாக்டர் தொடர்ந்தார்.

''மனசிலே எத்தனையோ எதிர்பார்ப்புகளுடன் அந்தச் சிறு பெண் தன் புது வீட்டுக்கு வந்தாள் – இரண்டாம் தாரமாச் சென்னு வருத்தப்படலை. அங்கே பணம் அந்தஸ்து, படாடோபம் எல்லாம் இருந்ததே தவிர, அன்பு, பண்பு, கலை ஆர்வம் எதுவுமே இல்லை.

போன முதல் நாளே ஸ்வாமிக்கு விளக்கேற்றி நாலு பாட்டுப் பாடலாம் என்று உட்கார்ந்திருக்கிறாள். தடதடவென்று உள்ளே நுழைந்த அவள் புருஷன், ''அந்தி விளக்கேத்தற சமயத்துலே, ... யா மாதிரி என்னடி பாட்டும் கூத்தும்? நாலு ஸ்லோகம் சொன்னாப் போறாதோ? மேடையேறிக் கச்சேரி பண்ணப் போறியா?'' என்று கூச்சல் போட்டிருக்கிறார்.

அன்றே அவள் மனதில் விரிசல் விழுந்து விட்டது. யூ. நோ, மிஸ்டர் ஹரி – தட் ஃபெல்லோ இஸ் என் இம்பொடண்ட்!''

எனக்குள் ஆயிரம் டைனமைட்கள் வெடித்துச் சிதறியது போன்ற அதிர்ச்சி – 'ரியலி...?'' என்று மேலே பேச முடியாமல் திணறினேன்.

''கேட்டதும் உங்களுக்கே இத்தனை அதிர்ச்சியாக இருக்கும் போது அந்தக் குழந்தை மனசு என்ன பாடுபட்டிருக்கும்? யாரிடம் சொல்ல முடியும்? பெற்ற தாய் இல்லை – தகப்பனோ நல்ல இடத்துலே பெண்ணைக் கொடுத்திருக்கோம்னு நிம்மதியா இருக்கார். இந்த அதிர்ச்சியைத் தாங்க மாட்டார். தலைவிதின்னு வெறுத்துப் போய்த் துறவி மாதிரி ஒதுங்கியிருந்திருக்கா —அதுக்கும் அந்தப் பாவி மனுஷன் அவளை நிம்மதியா விடவில்லை – ஹி இஸ் எ சாடிஸ்ட் – அவளை ரொம்பத் துன்புறுத்தியிருக்கிறான்.

ஆணுக்கு ஆண் கூட பேசிக்க முடியாத கொடுமைகளையெல்லாம் அனுபவிச்சுட்டா. நாளடைவில் அவர் அருகில் வந்தாலே அலறிக் கொண்டு ஓடும் அளவுக்குப்போய் விட்டிருக்கிறாள். வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்குப் புருஷன் வயசானவன்னு இந்தப் பெண் ஒத்துப் போகலைன்னு தான் தோணும். அப்படித்தான் எல்லாரும் நினைக்கணும்கிறதுதான் அவளோட எண்ணமும்.

வீட்டுக்கு வருகிறவர்களிடமெல்லாம், 'குழந்தைப் பிறக்கலை – மலட்டுப்பிணம்– ஒழிச்சிட்டு வேறே கல்யாணம் பண்ணிக்கணும்'' என்பானாம். எரிச்சல் பொறுக்காமல் ஒருநாள் 'டாக்டரிடம் போகலாம் வாங்கோ – யார் மலடுன்னு பார்த்துடலாம்'' என்று பதிலுக்குச் சுடச்சுடக் கேட்டு விட்டாள்.

தன் ஆண்மையைக் குறைவாக அவள் பேசிவிட்ட ஆத்திரத்தில் ஒரு அறைக்குள் தள்ளிப் பூட்டி வைத்தார் – பட்டினி போட்டார் – வேலைக்காரி, வருவோர் – போவோரிடமெல்லாம் பேய் பிடித்திருக்கிறது என்று கதை பரப்ப ஆரம்பித்தார்.



நான் ஆண்மையில்லாதவன் என்பது வெளி உலகத்துக்குத் தெரியக் கூடாது. அதற்காகவே அவன் இரண்டு — இப்போது மூன்றாவது கல்யாணமும் செய்து கொண்டிருக்கிறான் — முதல் மனைவி இவன் இம்சை பொறுக்க முடியாமல் தூக்கில் தொங்கிவிட்டாளாம் — பனை பலத்தைக் கொண்டு தீராத வயிற்றுவலி — தற்கொலை என்று சோடித்துக் காரியத்தை முடித்து விட்டான்.

அவன் வக்கிர சுபாவத்துக்கு மென்மை உள்ளம் கொண்ட தர்மூவால் ஈடுகொடுக்க முடியவில்லை — இவளும் முதல் மனைவியைப் பின்பற்றி விடுவாளோ என்ற பயத்தில் அடைத்துப் போட்டால் பயந்து போய்ப் பணிவுடன் இருப்பாள் என்று நினைத்திருக்கிறான்.

மாறாக தர்மூவின் மென்மையானமனதை இவனுடைய அடக்குமுறைகள் மிகவும் பாதித்து விட்டன. எனவே கதவை உடைப்பதும், வெளியே விடு என்று கத்துவதும், அழுவதும், சிரிப்பதும் மயக்கம் போட்டு விழுவதும் அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டன.

பேய் பிடித்து விட்டது என்று பூசாரியையும், மந்திரவாதியையும் அழைத்துவந்து பேய் ஓட்டும் சாக்கில் அவர்கள் வேறு அடித்து, உதைத்து இம்சித்திருக்கிறார்கள். மந்திரவாதி ஒருவன் அவளிடம் தவறாகவே நடக்க முயற்சித்த போது வெகுண்டு மண்டையை உடைத்து அனுப்பி இருக்கிறாள் இவள். பிறகு பூசாரி, மந்திரவாதியும் கூட வர மறுத்து விட்டார்கள்.

ஏராளமான பெண்கள் இன்று நரம்புத் தளர்ச்சியால் பாதிக்கப் பட்டுள்ளார்கள் என்று கூறப்படுகிறது. டாக்டர், மருந்து என்று இவர்கள் ஏராளமாகச் செலவழிக்கிறார்கள். மலிவான 'டானிக்' ஒன்று இருக்கிறது. முயன்று பார்க்கலாமே!

அரைக் கீரையைச் சுத்தம் செய்து பச்சைப் பருப்பைச் சேர்த்துக் கூட்டு வைத்து, கடசுடச் சாதத்தில் போட்டு நெய் விட்டுச் சாப்பிட்டு வாருங்கள். நரம்புகள் வலுப் பெறும்.

—ஆர். எஸ். சுப்ரமணியன்

அப்பா வந்த போது அடையாளமே தெரியாத அளவுக்கு அவள் வெறி முற்றி விட்டது. அவள் புத்தி உண்மையிலேயே பேதலித்து விட்டது. அவர்கிட்ட நெருங்கினாலே கையில் கிடைத்ததை எடுத்து அடிக்க ஆரம்பித்தாள்.

உண்மையிலேயே பைத்தியம் பிடித்து விட்டது என்று தெரிந்ததும் கையைக் கழுவிவிடத் தீர்மானித்தான். மெண்டல் ஹாஸ்பிடலுக்கு அழைத்து வந்தான்.

''டாக்டர் — பைத்தியம் முத்திப்போனா மருந்து கொடுத்துக் கொன்னுடுவாளாமே? இது முத்தின கேஸ் — இதையும் அப்படியே'' என்றான்.

அந்தச் சிறு பெண்ணின் நிலையைப்பார்க்க எங்கள் மனம் எரிந்தது — உதவிக்குக் கூட யாருமில்லாமல் — அநாதை போல் விட்டுப் போய் விட்டான். எனக்குத் தனியாக அந்தப் பெண் மேல் அக்கறை பிறந்தது. சிக்கலான கேஸ்களை சவாலாகவே எடுத்து குணப்படுத்தியவன் நான்.

பெரிய டாக்டரிடம் கேட்டேன். சந்தோஷத்துடன் அவளை என்னிடம் ஒப்படைத்தார். என் மனைவி இளம் வயதிலேயே என்னை விட்டுப் போய் விட்டாள். குழந்தைகளும் இல்லை. என் முழு மனதையும் வைத்தியத் தொழிலுக்கே அர்ப்பணித்துத் தனியாக நர்ஸிங்ஹோம் வைத்திருந்தேன்.

தர்மூ வந்தபின் வாழ்க்கையிலேயே ஒரு பிடிப்பு ஏற்பட்டது. என் நர்ஸிங்ஹோமில் வைத்து வைத்தியம் செய்தேன். நான் சொன்னதெல்லாம் உங்களாலே நம்ப முடியவில்லை, இல்லையா? இதை தருமூவே நல்ல நிலைமையில் நேரில் எங்கிட்ட சொல்லியிருந்தா நானும் கூட நம்பியிருக்க மாட்டேன்.

வெட்கத்தை விட்டு அவளும் என்னிடம் சொல்லியிருக்க மாட்டாள். இத்தனையும் அவள் வெளி மனதை மின் அதிர்ச்சியின் மூலம் ஆழ்ந்த உறக்கத்தில் அமிழ்த்தி உள் மனதிலிருந்து நான் வெளிப்படுத்திய உண்மைகள்.

அவள் மனம் ஒரு நிலைக்கு வந்ததும் அவள் அப்பாவைப் பற்றிக் கேட்டாள். குடும்பச் சூழ்நிலையில் கொஞ்ச நாள் இருந்து பார்த்தபின் பிறகு அனுப்பலாம் என்று எண்ணி அவள் புருஷனுக்கு எழுதி அப்பாவை வரவழைத்தேன். அவர் வந்த பிறகு இவள் மனநிலையில் இன்னும் முன்னேற்றம் ஏற்பட்டது. சந்தோஷமாகத்தான் இருந்தாள். அவர் என்னைத் தொந்தரவு செய்ய ஆரம்பித்தார் — ''ஊருக்கு எப்ப போகலாம்?'' என்று அடிக்கடி கேட்டார்.

அவள் நன்றாக மனம் தேறியதும் நானே அவளிடம் இந்தப் பேச்சை ஆரம்பித்தேன்.

''டாக்டர்! என்னை மன்னித்து விடுங்கள்— நான் செய்வது தவறு என்று நன்றாகத்தெரிகிறது. ஆனால் என்னை அடக்கிக் கொள்ள முடியவில்லை. அந்த நரகத்துக்கு என்னை

நீங்கள்...

தரமான பொருளைப் பெற அதிகமாக செலவு செய்கிறீர்களா?
அல்லது மட்டமான பொருளே போதும் என்று இருந்து விடுகிறீர்களா?

பிஜ் கொண்டு அதை மதிப்பிடுங்கள்

விலையிலே

பிஜ், சிறந்த முறையில் சிக்கனம் மற்றும் தரம் இரண்டையும் பிணைக்கிறது. உண்மையில், பிஜ் அளிக்கும் சிக்கனம் இருதரப்பட்டது. இதோ கண்டுகொள்வீர்—இதர நன்கறிந்த துலக்கும் பவுடர்களைவிட பிஜ் 25% குறைந்த விலை கொண்டது. அத்துடன், மட்டமான துலக்கும் பவுடர்களைவிடக் குறைந்த அளவே பிஜ் போதும் மாசற்ற பளபளப்பு வீசுவதற்கு.

செயல்திறனிலே

எவர்ஸில்வர் பாத்திரங்கள், கண்ணாடிப் பாண்டங்கள், வாஷ் பேஸின்கள், எவற்றிலிருந்தும் ஸுப்பர் பிஜ், கறைகள், கசடு, பிசுக்கு இவற்றை தீவிரச் செயல் புரிந்து நீக்கி விடுகிறது. விரைவில் நுரைவளம் பெருகும் திறனுள்ளதாகக்கான பாகங்களையும் சொரசொரப்பான பாகங்களையும் மேன்மையாகவும், எளிதாகவும் சுத்தம் செய்கிறது. பல-வித உபயோக பிஜ் இருக்கையிலே வெவ்வேறு துலக்கும் தேவைகளுக்கு விலை அதிகம் கொடுத்து வெவ்வேறு பவுடர்கள் வாங்குவானேன்? உயர்ந்த சேமிப்பு மற்றும் உயர்ந்த செயல்திறன்—இவை சரியான அளவில் இணைந்த பிஜ் வாங்குவீர்.



கோத்ரெஜ் தயாரிப்பு

விலையோ குறைவு, தரமோ உயர்வு

CASGS-163-183TM

மீண்டும் அனுப்பாதீர்கள்!'' என்று கெஞ்சினாள்.

''எனக்கு உன்னை அனுப்ப வேண்டுமென்று இல்லையம்மா — புருஷன் வீட்டில் பெண் வாழணும்னு நினைக்கிற உங்கப்பாவுக்கு என்ன சொல்வது? உண்மையைச் சொல்லி உன்னை அங்கே அனுப்பவேண்டாம் என்று சொல்லட்டுமா?''

''ஐயோ வேண்டாம்'' என்று பதறினாள்— ''ஏற்கெனவே என்னை இரண்டாந்தாரமாகக் கொடுத்து விட்டோமென்றக் குற்ற உணர்வு அவர் மனதை வருத்துகிறது. இதுவும் தெரிந்தால் — உயிரையே போக்கிக் கொள்வார்.''

''அப்படியானால் உன் புருஷனை வரவழைத்து உள்ளதைச் சொல்லி உன்னைத் துன்புறுத்தாமல் வைத்துக் கொள்ளும்படி எச்சரித்து அனுப்புகிறேன்'' — என்று அவள் புருஷனுக்குக் கடிதம் எழுதினேன் — அவர் வரவில்லை — அவள் அப்பாவை அழைத்து வரும்படி பணம் அனுப்பிவிட்டார். வயதானவருடன் இவளை அனுப்புவது தவறு. மேலும் அவள் புருஷன் நேரில் வராததால் இவளை ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மையில் இருக்கிறாரா என்றும் தெரியவில்லை.

''எனவே நானும் அவர்களுடன் கிளம்பினேன். தர்மு வழி முழுவதும் பயந்து கொண்டும், அழுது கொண்டும் வந்தாள்.

அங்கு நடந்ததைக் கேள்விப்பட்டிருப்பீர்கள் — தன்னை ஏமாற்றி இன்னொரு கல்யாணம் செய்து கொண்டதைவிட, மூன்றாவதாக இன்னொரு பெண்ணை ஏமாற்றியதுதான் தருமுவின் நெஞ்சை எரித்தது. புருஷனிடமோ தந்தையிடமோ எதுவுமே பேசவில்லை.

அப்பா கோபமாகப் பேசியதும் வந்த வண்டியிலேயே ஏறி மூர்ச்சித்து விட்டாள். அதனால் அவளைத் திரும்பி அழைத்துப் போவதைத் தவிர வேறு வழியில்லை. தர்முவின் சங்கீத ஞானத்தை, அவள் தன்னை மறந்து புத்தி பேதலித்த நிலையிலும் அவள் ஈடுபாட்டைக் கண்டேன்.

இப்படி அவளுக்குப் பிடித்த கலையில் அவள் மனதைத் திருப்பியதன் மூலம் சிதைந்த அவள் மனசு அமைதி பெற்றது. தந்தை தன்னைப் புரிந்து கொள்ளவில்லையே என்ற கவலைதான் அவளுக்கு — உலகத்தைப்பற்றி அவள் கவலைப்படவில்லை.

ஒரே பொய்யை, பலர் வாயால், பல முறை கேட்டால் மெய்யாகி விடும் என்பது போல், அவள் தந்தையின் ஸ்தானத்தில் இருந்து அவளைக் காத்து வரும் என்னையும், அவளையும் முடிச்சுப் போடுகிறது இந்த உலகம். — அவள் தந்தை கூட இதைப் புரிந்து கொள்ளவில்லை.

எப்படியாவது அவரிடம் விளக்கி விட வேண்டும் என்று தான் நினைத்தேன். முடியவில்லை. நீங்களாவது புரிந்து கொண்டால் சரி'' என்று முடித்தார்.

''டாக்டர் — நீங்கள் தெய்வம்!'' என்று ஒரு குரல் அருகிலிருந்து வந்தது. அருகில் யாரையும் காணவில்லை — ஒரு மாட்டுவண்டி தான் நின்று கொண்டிருந்தது. அதில் சாரதியின் ஸ்தானத்தில் சன்னாசி—

''சாமீ! வாத்தியாரய்யா வந்திருக்காருங்க—இப்படி வாங்க!'' என்று அழைத்தான். வண்டிக்குள் இருந்தது கிருஷ்ணமூர்த்தி சாரேதான்.

''சார், நீங்களா?'' என்று இருவரும் வியப்புடன் அவர் கையைப் பிடித்துக் கொண்டோம்.

''டாக்டர் — இந்தப் பாவியை மன்னிச்சிடுங்க — என் குழந்தைக்கு வாழ்வுகொடுத்த உங்களை நானும் எல்லாரும் மாதிரி நெனச்சுப் பேசினேனே — அம்பி — குழந்தை இன்னிக்குப் பாடறுன்னதும் ஆசையை

முகப்பரு தடுக்க

எனக்கு முகப்பரு அதிகமாக இருந்தது. எனக்குத் தெரிந்த ஒரு அம்மா குங்குமதி லேபம் என்ற ஆயுர்வேத மருந்தை சிபாரிசு செய்தார். அதன்படி அதை வாங்கி போட்டதில் ஒரு மாதத்தில் எல்லா பருவும் மறைந்து விட்டது.

- என். உமா

அடக்க முடியாம இருட்டுனுட்டும் சன்னாசி வண்டியிலே ஒளிஞ்சிண்டு வந்தேன்.

வெளியிலே வண்டியிலே படுத்துக்கிட்டே பாட்டைக் கேட்டேன். நெக்குருகிப் போனேன் — கிளம்பற சமயம் நீ வரதைப் பார்த்து சன்னாசி சொன்னான் — நீயும் வந்தா வண்டியிலே போயிடலாமேன்னு உன்னைக் கூப்பிடச் சொன்னேன்.''

''டாக்டரோட நீ பேசிண்டிருக்கேன்னதும், அப்படியே நிறுத்திட்டான் —''அம்பி என் தருமு எங்கே? டாக்டர்! என்னை இப்பவே தருமு கிட்ட அழைச்சிண்டுப் போங்கோ — அவ தப்புச் செய்யவில்லை — நான்தான் பாவி. அவகிட்ட மன்னிப்புக் கேட்சணும்.''

குலுங்கிக் குலுங்கி அழும் அவரை டாக்டர் சமாதானப்படுத்தினார்.

''ஹரி — வண்டியிலே ஏறுங்க — சார்— தருமு அவ பிரண்ட் வீட்டிலே தான் இருக்கா — நமக்கு நடுவே இருந்த மனவேற்றுமை மறைந்து விட்டதை செலிபரேட் பண்ண ஒரு பெரிய விருந்தே காத்திருக்கிறது — சன்னாசி உனக்கும் தான். வேகமாக வண்டியை விடு, பார்க்கலாம்!'' என்றார் உற்சாகமாக.



வீட்டுக்கு ஒரு தென்னை!

இன்று மார்க்கெட்டில் தேங்காயின் விலை கிலோக்கு மேல் ஏறிவிட்டது. சமையலில் தேங்காயைப் பார்ப்பதே அரிதாக உள்ளது. இந்தப் பிரச்சினையை எப்படிச் சமாளிப்பது என்று பொதுவாக எல்லாக் குடும்பப் பெண்களும் கேட்கிறார்கள். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஒரே வழி சொந்த-வீடு வைத்திருப்பவர்களும், வீட்டைச் சுற்றிக் காலியிடம் வைத்து இருப்பவர்களும் வீட்டுக்கு ஒரு தென்னங்கன்று வைத்தால் போதும். ஒவ்வொரு மரத்திலும் இருந்து குறைந்தது வருடத்திற்கு 80 முதல் 100 காய்களைப் பறிக்கலாம். மரத்திற்கு என்று தனியாக நாம் அதிகம் செலவு செய்ய வேண்டியதில்லை. கன்று நட்டு 5 ஆண்டுகள் கழித்த பின்பு மரத்திலிருந்து காய்களைப் பறிக்கலாம்.

விலை விபரமும் கிடைக்கும் இடமும்:

தமிழ்நாட்டில் 23 அரசினர் நாற்றுப் பண்ணையில் தமிழ்நாடு அரசு வேளாண்மை துறையினரால் தரமான நெட்டை ரகங்களும், வீரிய ஒட்டு ரகங்களும் கிடைக்கிறது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் தென்னை நாற்றங்கால் பண்ணையில் நெட்டை ரகம் ரூ. 5—க்கும், வீரிய ஒட்டு ரகம் ரூ. 10—க்கும் விற்கப்படுகிறது.

ரகங்கள்:

வீட்டைச் சுற்றி அழகாக இருக்க குட்டை ரகங்களை பொதுவாக எல்லா வீட்டிலும் வைக்கிறார்கள். இந்த ரகம் மூன்று ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கி 5 ஆண்டுகளில் நல்ல காய்ப்புக்கு வந்து விடுகிறது. இந்த காய்கள் மஞ்சள் நிறமாகக் காட்சியளிக்கும். இவை இளநீருக்குத்தான் தகுதியானவை. தேங்காய் அதிகம் பெற வேண்டும் என்றால் வீரிய ஒட்டு ரகம் அல்லது நெட்டை ரகத்தை வைக்கலாம். இந்த நெட்டை ரகங்கள் நட்டு 5 ஆண்டுகளிலிருந்து காய்ப்புக்கு வந்து விடுகிறது. மொத்தம் 80 முதல் தொண்ணூறு ஆண்டுகள் வரை இந்த ரகம் பலன் கொடுக்கும்.

"அன்னை பிள்ளையை
நம்ப மறுத்தாலும்
தென்னம் பிள்ளையை
நம்பலாம்."

எப்படி வைக்கவேண்டும்?

1. தென்னை நடுவதற்கு முன்பு 3 அடி ஆழமும், 3 அடி அகலமும், 3 அடி நீளம் இருக்குமாறு குழி வெட்டித் தயாராக வைக்க வேண்டும். குழியில் பசுந்தழைகள், தொழு உரம், ஆற்றுமணல், இவற்றைச்சமமாகக் கலந்து ஒரு அடி உயரம் என நிரப்ப வேண்டும்.

2. பருவ மழை துவங்கும் சமயத்திலும் அதாவது ஆடி சமயத்திலும் இல்லை எனில் மார்கழி, தை மாதத்திலும் குழிகளில் தென்னங்கன்றுகள் நடலாம்.

3. தென்னங்கன்றுகளை வாங்கும்பொழுது 9 மாதம் முதல் ஒரு வருடம் வரை வளர்ந்த கன்றுகளைப் பார்த்து வாங்கவேண்டும். கன்றுகளின் கழுத்து பாகம் பெரியதாக இருக்க வேண்டும். மேலும் நல்ல கன்றுகளின் மட்டைகளில் ஓலைகள் விரைவில் பிரிந்து வெளிவரும். நோய்ப் பூச்சிகளால் தாக்கப்படாமல் ஆரோக்கியமானதாக இருக்க வேண்டியது மிக முக்கியம்.

4. தென்னங்கன்று நடுவதற்கு முன்பு ஒரு தென்னை மரத்திற்கும் இன்னொரு தென்னை மரத்திற்கும் சரியான இடைவெளி இருக்க வேண்டும். அதிகம் தேங்காய் வேண்டும் என்ற ஆசையில் பலர் மிகவும் நெருக்கமாக நட்டு விடுகிறார்கள். இதனால் எலித் தொல்லை, அணில் தொல்லையும், எளிதாக நோய் பிடிக்கும் வாய்ப்பும் ஏற்படும். ஆகவே ஒரு மரத்திற்கும் மற்றொரு மரத்திற்கும் 25 அடிக்குக் குறையாமல் இடைவெளி இருக்க வேண்டும்.

5. தென்னங்கன்றுகளின் வேர்களை முதலில் நறுக்கி விட வேண்டும். பின் பி. எச். சி. 0.1 சதம் கரைசலை தயார் செய்து அதில் முக்கி எடுத்துக் குழிகளின் மத்தியில் தேங்காய் பாகம் அமருமாறு எரு. மணல் கலவையை நிக்கி நட்ட பின் கன்றைச் சுற்றிக் கெட்டியாக மிதித்து விட வேண்டும்.

6. தென்னங்கன்று நட்டு எட்டு மாதம் கழித்து உரம் வைக்கலாம். ஒன்று முதல் மூன்று வயது மரமாக இருந்தால் குழியினுள் மரத்தை விட்டு ஒன்றரை அடி தூரம் தள்ளி உரம் இடுவது நல்லது. 3 அல்லது 5 வயது உடைய மரங்களுக்கு 3 அடி தள்ளி உரமிடலாம். 5 வயதும் அதற்கு மேலும் உள்ள தென்னை மரத்திற்கு 5 அடி தூரம் தள்ளி உரமிடலாம். உரமிடும்போது 1 அடி அகலம் உள்ள அரை வட்ட வடிவத்தில் பள்ளம் வெட்டி அதில் 50 கிலோ பசுந்தழையையும் குறிப்பிட்ட இரசாயன உரத்தையும் இட்டு மண்ணால் மூடி நீர் பாய்ச்ச வேண்டும்.

7. 3—ம் நம்பர் கலப்பு உரம் தென்னைக்கு ஏற்ற உரமாகும். இது எல்லா உர கடைகளிலும் கிடைக்கிறது. ஒரு வயது முதல் இரண்டு வயது வரையுடைய மரங்களுக்கு ஒன்றரை கிலோ கலப்பு உரமும் 10 பசுந்தாள் உரமும் கலந்து இட வேண்டும். 3 வயதுடைய மரங்களுக்கு இரண்டரை முதல் 3 கிலோ கலப்பு உரங்களும், 20 கிலோ பசுந்தாளும் இட வேண்டும். நான்கும் அதற்கு மேல் உள்ள தென்னைக்கு 6 கிலோ கலப்பு உரமும் 50 கிலோ பசுந்தாள் உரமும்கலந்து இட வேண்டும். உரம் வைக்க ஒரு மரத்திற்கு ரூ. 10 தான் செலவு பிடிக்கும். மேற்சொன்ன அளவில் பாதி பாதியாக ஆறு மாதத்திற்கு ஒரு முறையும் வைக்கலாம்.

8. வீட்டிலிருந்து வெளியேறும் கழிவு நீரைக் கொண்டு தென்னைக்கு நீர் பாய்ச்சலாம். அல்லது கன்றுகள் நட்டு முதல் ஆண்டு ஒருநாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் ஊற்றலாம். இரண்டு மூன்று ஆண்டுகள் ஆன மரத்திற்கு இருமுறை தண்ணீர் ஊற்றிக் கொண்டு வரவேண்டும்.

9. மரத்தில் பூச்சிகளோ, நோய்களோ தென்பட்டால் அருகில் உள்ள வேளாண்மை அலுவலர்களை அழைத்து மருந்து அடித்து குணப்படுத்தி விடலாம்.

செலவு, கணக்கு விவரம்:

ஒரு வீட்டிற்கு குறைந்தது நான்கு அல்லது ஐந்து தென்னை மரங்கள் இருந்தால் போதும். வீட்டிற்குத் தேவையான காய்களை வருடம் முழுவதும் பெற்றுக் கொண்டே இருக்கலாம். வீட்டைச் சுற்றி இருக்கும் காலி இடங்களை வைத்து, எத்தனை மரம் வைப்பது என்று நீங்கள் தீர்மானம் செய்து கொள்ள வேண்டும். ஒரு மரம் வைத்துப் பராமரிக்க மொத்த செலவு ரூ. 50 தான் செலவு பிடிக்கும். இதிலிருந்து வருடத்திற்கு 80 முதல் 100 காய்களை பறித்துக் கொள்ளலாம். இதன் மதிப்பு ரூ. 180 ஆகும்.

பெரிய மரங்கள் வைத்து இருப்பவர்களுக்கு சில வேலைகள்:

1. மரத்தில் உள்ள காய்ந்த மட்டைகளும், சிறகுகளையும் வெட்டி சுத்தம் செய்ய வேண்டும். வீட்டு அருகில் எரு குழிகள் வைத்திருக்கக் கூடாது. அப்படிக் குழிகள் இருந்தால் பி. எச். சி. 10 சதவிகித தூளைக் கடையில் வாங்கித் தூவி விட வேண்டும். இதனால் தென்னையைத் தாக்கும் வண்டுகளை ஒழித்து விடலாம்.

2. நவம்பர் மாதத்தில் தென்னையைச் சுற்றி இருக்கும் வரப்புகளை நன்கு உயர்த்த வேண்டும். அதே சமயம் வரப்புகளை பலப்படுத்த முடியும். இப்படிச் செய்வதால் மண் அரிப்பும், வேர்கள் வெளியே தெரிவதும் தடுக்கப்படும். ஏனெனில் இம்மாதத்தில் நன்கு மழை பெய்ய வாய்ப்பு உண்டு.

முடிவாக:

இப்படித் தென்னங்கன்றுகளை உங்கள் குழந்தை வளர்ப்பது போல வளர்த்தால் அவை நூறு ஆண்டுகள் வரை உங்களதுவீட்டுக்குத் தேவையான காய்களைக் கொடுத்துக்கொண்டே இருக்கும். ''அன்னை பிள்ளையை நம்ப மறுத்தாலும் தென்னம் பிள்ளையை நம்பலாம்'' என்ற பழமொழி நிச்சயம் உண்மையே! ஆகவே, வீட்டுக்கு ஒரு தென்னங்கன்று வைக்க நீங்கள் உடனே ஆயத்தம் ஆகலாம் அல்லவா?

-என். மதுபாலன்.

எல்லைகளின் விளிம்பில்.

வாஸந்தி

12

மாலு ஒரு விநாடி திலீப் பானர்ஜியின் கண்களில் ஒளிர்ந்த தேஜஸ்ஸையும் அறிவின் தீட்சண்யத்தையும் பார்த்தான்.

"மனுஷனின் மனதில் முரண்பாடுகள் இருப்பதால் தான் சமுதாயத்தில் முரண்பாடுகள் இருக்கின்றன மாலு!" என்று ஒரு நாளைக்கு அவன் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.

கடைசியில் இவனும் முரண்பாடுகள் உள்ளவன்! இத்தனை அறிவும், புத்தி தீட்சண்யமும் கடைசியில் மக்கிப் போய் தன்னலமே பிரதானமான ஒரு சமூக மூலைக்குப் போகத்தானா? அந்த அச்சில் ஒரு துருப் பிடித்த ஆணியாக அமரத்தானா?

அவன் சட்டென்று சுய நினைவு வந்தவனாய் எழுந்தான். கூடப் பிறந்தவனையே ஒன்றும் சொல்ல முடியவில்லை. அதிகம் பரிச்சயமில்லாத இவனை என்ன சொல்ல முடியும்?

"நீங்கள் எழுதி முடியுங்கள்." என்று மெல்லச் சொல்லிவிட்டு அவன் ஒரு பத்திரிகையைப் பார்க்க ஆரம்பித்தான்.

மூன்று நான்கு பக்கத்துக்கு அவன் வெகு வேகமாக எழுதிக் கொண்டிருந்தது அவனுக்கு ஆச்சர்யமாக இருந்தது. அவன் எழுதி முடித்து நிமிர்ந்து அவனைப் பார்த்து சிரித்தான்.

"வெளியிலே போகலாமா? இதை போஸ்ட் செய்யணும்!"

"ஓ. கே." என்று அவன் எழுந்தான்.

லைப்ரரியை விட்டு வெளியே வந்ததும் அவன் ஒரு சின்னப் பெருமூச்சு விட்டான்.

"எதுக்கு இந்தப் பெருமூச்சு? அலுப்பா, சந்தோஷமா?"

"இரண்டுமில்லை. ஒரு சமாதானம். ஒரு ரிலீஃப். நேத்து அப்பாவுடைய கடிதத்தைப் பார்த்துத் தூக்கம் வரல்லே. இப்ப மனசிலிருக்கிறதை எழுதி முடிச்ச பிறகு அவரிடம் நேரிலே பேசிய திருப்தி ஏற்பட்டு விட்டது. நாம செய்யற காரியம் சரி என்று நிச்சயமாய் மனசுக்குப் படும் போது எந்தக் குற்ற உணர்வும் இல்லை!"

"சரியானது என்கிறது எது திலீப்?" என்றான் அவன். "அந்தந்த தருணத்து உணர்ச்சிகளுக்குத் தகுந்த மாதிரி மனசு என்ன செய்கிறதோ அதெல்லாம் சரியான முடிவாகத்தான் மனசு நினைக்கும்!"

மென்மையாய்ப் புன்னகைத்தபடி அவன், "நோ!" என்றான் அழுத்தமாக. "என் சிந்தனைக்கும் செயலுக்கும் முரண்பாடில்லாத முடிவானால் அது சரியான முடிவு."

அவன் சட்டென்று அவனை நிமிர்ந்து பார்த்தான். அவன் வார்த்தைகளின் தீர்மானம் கண்களில் தெரிந்தது.

"அதைத்தான் என் அப்பாவுக்கு விளக்கியிருக்கிறேன். என் சுபாவத்தை இன்றுவரை கவனித்திருக்கும் நீங்கள் என்னை எப்படி ஒரு தங்கக் கூட்டுக்குள் தள்ளப் பார்க்கலாம் என்று கேட்டிருக்கிறேன். பெண்ணின் அப்பாவுக்கு ரொம்ப ஸ்டெடி பிஸினெஸ்ஸாம், எக்கச்சக்கம் சொத்தாம். என்னையும் ஒரு பிஸினெஸ் பார்ட்னராக ஆக்கிக் கொள்வாராம். என் எதிர்காலத்தைப் பற்றி, நான் ஏதும் கவலைப்பட வேண்டியதில்லையாம். இத்தனை ஆசைக் காட்டுவதைக்கண்டாலே சந்தேகம் வருகிறது. பெண்ணுக்கு ஏதானும் கோளாறு இருக்க வேண்டும்!"

மாலு சிரித்தான்.

"ஒரு கோளாறும் இருக்காது. அவள் பணக்காரியாக இருப்பது அவள் குற்றமில்லை திலீப்!"

"கண்டிப்பாக இல்லை. ஆனால் நான் அந்த மாதிரி வாழ்க்கைக்கு ஏற்றவன் இல்லை மாலு! என்னால் அந்த வட்டத்துக்குள் சட்டுப்பட முடியாது. அந்த மாதிரி

மோர் வற்றல்

"வற்றல், வடாம் நிறைய செய்து வைத்துக் கொண்டால் நிறைய எண்ணெய் செலவாகி விடுகிறது" என்று முணுமுணுக்கும் சகோதரிகள் கவனத்துக்கு.. அரைமணி முன்பாக வற்றலை மோரில் ஊற வைத்து, எண்ணெயில் கடுகு, பருப்புகள், மிளகாய் தாளித்து, ஊறிய வற்றலைப் போட்டு நன்கு புரட்டவும். சிறிது நேரம் வேகவிட்டு,சூடாக பரிமாறலாம். நாமே தயாரித்த சுவையான நூடுல்ஸ்! அவசரத்துக்குக்கைகொடுக்கும். தொட்டுக் கொள்ள ஏதாவது ஒரு சட்னி அரைத்து விட்டால் போதும்.

ரமாமணி பார்த்தசாரதி.

பேனினல் தலைமுடி உதிரும்

நறுமணம் கமழும் கென்ஸ் தைலத்தை
உபயோகித்து ஈறையும், பேனையும்
அறவே ஒழியுங்கள். தலை முடியை
பாதுகாத்துக் கொள்ளுங்கள்.



கென்ஸ்

'சிறந்த பேன் நாசினி'

ஈறுகளையும் கொல்லும்
பென்சொகெயின் கலந்தது.



PHARM PRODUCTS

பார்ம் ப்ராடக்ட்ஸ்

தஞ்சாவூர்-613 007 தமிழ்நாடு

விற்பனை விவரங்களுக்கு எழுதவும்.

Chhaya/PP/415

பக்தி பத்திரிகைகள் இலவசம்

எமது ருசிகரமான இனிப்பு அல்லது கார பண்டங்களை மூன்று கிலோவுக்கு குறையாமல் வாங்குவோருக்கு கீழ்க்கண்ட பக்தி நூல்கள் அல்லது தெய்வீக பத்திரிகைகளில் ஒன்று (ஒரு வருட சந்தா) இனமாக வழங்கப்படும்.

தேவி மகாத்மியம், தேவி பாகவதம், ஸ்ரீ நிருஸம்ஹப்ரியா,
ஸ்ரீ காமகோடி பிரதீபம், தர்மசக்கரம்,
ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம், வைகறை, ஞானபூமி

இனிப்புகள்: பாதாம் அல்வா, தூத் அல்வா, சோன்பப்டி, குலாப்ஜாமூன், ரஸமலாய், சம்சம், மைசூர்பாகு, ஜாங்கிரி, மங்களூர் போளி, இனிப்பு சோமாஸ், சம்பாகள்ளி முதலியன.

காரம்: கைமுறுக்கு, தட்டை, தேன்குழல், சீடை, நவரத்ன மிக்ஸர், உருளைக்கிழங்கு சிப்ஸ், வெஜிடபிள் சோமாஸ் முதலியன.

திருமண வைபவங்களுக்கு பருப்புத் தேங்காய், சீர்முறுக்கு, திரட்டுப்பால், அதிரசம் ஆகியவற்றைத் தயாரித்துத் தருகிறோம்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு, சென்னை-600 020

போன்: 412557

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி, தேனாம்பேட்டை, சென்னை

கட்டுப்பாட்டுக்குள் என்றால் முழுமையாக வாழ முடியாது. இந்தக் காரணத்தால் என் மாதிரி அந்தப் பெண் சிந்திக்கவேண்டும் என்று எதிர்பார்க்க ஆரம்பிப்பேன். அல்லது ஒத்துப் போய் விடலாம் என்கிற கையாலாகாத சமாதானம் ஏற்பட்டு அவன் வட்டத்துக்குள் நுழைந்து விடுவேன். எப்படிப் பார்த்தாலும் நான் நானாக இருக்க முடியாது. சௌகர்யமான வாழ்க்கையை அமைத்துக் கொள்வது ரொம்பச் சுலபம் மாலு. ஆனால் சில லட்சியங்களோடு வாழ வேண்டுமானால் என் பார்ட்னர் எப்படிப்பட்டவள் என்பது ரொம்ப முக்கியம்! முன்பின் பழக்கமில்லாத ஒருத்தியை நான் நிச்சயம் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன்!''

அவள் நம்ப முடியாத ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள்.

ஓ, இவன் என்னுடைய பாஷை பேசுகிறான்! வார்த்தைக்கு வார்த்தை என் பாஷை! அவளுள் லேசாக ஒரு சிலிர்ப்பு ஓடிற்று.


''நான் உங்களைத் தப்பாய் நினைத்தேன் திலீப்!'' என்றாள் தன்னை சமாளித்துக் கொண்டு. ''உங்கள் அப்பாவின் ஆஃபரை ஒப்புக் கொண்டிருப்பீர்கள் என்று நினைத்தேன்.''

அவன் அவளைப் பார்த்துக் குறும்புடன் சிரித்தான்.

''ஆ, உங்களுக்கு என்னைத் தெரியாது. என்னை அதிகமாகத் தெரிந்து கொள்ள முயற்சி செய்யுங்களேன்!''

''ஐ திங்க் ஐ ஷுட்!''

தபால் பெட்டியில் கடிதத்தைப் போட்டு விட்டு அவரவர் வகுப்புக்குச் சென்றதும் காலையில் மனதில் இருந்த கனம் இப்பொழுது குறைந்திருப்பது தெரிந்தது. பாலுவுக்கும், திலீப்புக்கும் எத்தனை வித்தியாசம்!



இன்றைக்கு மாலை அம்மாவிடம் மெல்ல பாலுவின் விஷயத்தைச் சொல்ல வேண்டும் உன்னுடைய பழக்கவழக்கங்கள் எல்லாவற்றையுமே, உன் வாழ்க்கை அமைப்பையே பரிகாசம் செய்யும் கலாச்சாரத்தைச் சேர்ந்தவள் அவள் என்று சொல்லவேண்டும்.

''உங்களுக்கெல்லாம் பொறுமை:'' பித்தம் தலைக்கேறிப் போயிருக்கும் நிலையில் பாலு யார் வார்த்தைக்காவது செவி சாய்க்கப் போகிறான்?

அன்று மாலை வீடு போய்ச் சேரும்போது வாசல் வரை நெய்யும் ஏலமும் மணத்தது. 'ஓ லேட்டாகி விட்டது' என்று தனக்குள் அவள் சோர்வுடன் சொல்லிக் கொண்டாள். பாலு முந்திக் கொண்டு விட்டான் என்று புரிந்தது.

அவள் செருப்பை அவிழ்த்து விட்டு வழக்கம்போல் அம்மாவுக்கு உற்சாகக் குரல் கொடுக்காமல் உள்ளே சென்று புடவையை மாற்றி முகத்தைக் கழுவிக் கொண்டு வந்தாள்.

அம்மா முகமெல்லாம் பூரிப்பும், சந்தோஷமுமாக டிபனும், காப்பியும் கொண்டு வந்து நீட்டினாள். உப்புமா பக்கத்தில் இரண்டு தேங்காய் பர்பி வில்லைகள் உட்கார்ந்திருந்தன.

''என்ன இன்னிக்கு? தேங்காய் ஃப்ரீயா கிடைச்சுதா?''

> அடுத்த இதழில் -
>
> **சில பிரச்னைகள்;**
> **சில வார்த்தைகள்!**

அம்மா இவளது இடக்கை லட்சியம் பண்ணாமல், ''ஆமாம வெத்தலைப் பாக்கோட!'' என்றாள் வெகுளித்தனமாய்ச் சிரித்து.

''சொன்னா நீ கூட நம்ப மாட்டே. பாலுவுக்குக் கல்யாணம் நிச்சயமாயிடுத்து!''

மாலு தூக்கி வாரிப்போட்டு நிமிர்ந்தாள்.

''எனக்கே நம்ப முடியல்லே. கார்த்தாலே ஆபீஸ் போறதுக்கு முன்னாடி பாலு சொன்னான். யாரோ நாகநாதன்னு பெரிய 'ஐ. ஏ. எஸ். ஆபீஸர். அவருக்கு என்னை ரொம்பப் பிடிச்சுப் போச்சு. தன்னுடைய ஒரே பெண்ணை நம்மாத்து மாட்டுப் பெண்ணா...''

மெல்லிய எரிச்சலுடன் மாலு குறுக்கிட்டாள்.

''இவனைத் தன் மாப்பிள்ளையான்னு சொல்லு!''

''விதண்டாவாதம் பண்ணாதேடி. ரொம்ப பெரிய மனுஷா அவா. அந்த மனுஷனே நம்ம சம்பந்தத்தை வேண்டி வரும் போது நாம பிகு பண்ணிக்கக் கூடாதுன்னு அப்பாவும் நானும் நினைச்சோம். உனக்குப் பெண் பிடிச்சிருந்தா சரின்னார் அப்பா. மத்தியானம் இவர்ன்னு நாகநாதன் காரை எடுத்திண்டு வந்துட்டார். இப்ப நல்ல நேரமாயிருக்கு. பெண்ணை வந்து பாருங்கோன்னார். பெண் எப்படி இருக்காங்கறே. தங்கச் சிலைன்னு தங்கச் சிலை!''

மாலு பதிலே சொல்லாமல் உப்புமாவை சாப்பிட்டு முடித்து காப்பியைக் குடித்தாள்.

''எனக்கு ஒரே பொண்ணு. தாயில்லாப் பொண்ணு. அதனால நல்ல மனுஷாதான் எனக்கு முக்கியம். வேறு எதுவும் முக்கியமில்லேன்னு எத்தனை பவ்யமா மரியாதையோட அந்தநாகநாதன் பேசறார் என்கிறே? அப்பா மயங்கிப் போயிட்டார். இப்பநேரம் நன்னாயிருக்கு. தாம்பூலம் கூட மாத்திடலாம் ஒரு ஃபார்மாலிட்டிக்குன்னார். ஒரு மணி நேரத்திலே தாம்பூலம் மாத்தியாச்சு. எத்தனை மரியாதைத் தெரிஞ்சவர் என்கிறே! எனக்கொரு பட்டுப் புடவை, அப்பாவுக்கு ஒரு ஜரிகைக் கரை வேஷ்டி எல்லாம் வெச்சுக் கொடுத்தார்!''

மனதில் ஏற்பட்டுப் போன அதிர்ச்சியிலிருந்து மீளுவதற்கு மாலுவுக்கு சிரமமாக இருந்தது. அம்மா பெருமையுடன் கொண்டு வந்து நீட்டிய இரட்டைப்பேட்டையும், வேஷ்டியையும் பார்க்கையில் தன்னையே யாரோ அவமானப்படுத்தி விட்டாற்போல் அவளுக்குப் பகதீப் போயிற்று. கண்களில் படியப் பார்த்த நீரை உள்ளுக்கிழுத்துக் கொண்டு அவள் மௌனமாக அன்றைய பேப்பரை எடுத்து வைத்துக் கொண்டாள்.

''நா இத்தனை முக்கியமான சமாச்சாரம் சொல்லிண்டிருக்கேன். என்னடி மாலு, வாயை மூடிண்டிருக்கே?'' என்றாள் அம்மா கோபமும், ஏமாற்றமுமாக.

''கூடப் பிறந்தவனுக்குக் கல்யாணம்னு உனக்கு சந்தோஷமில்லையா?''

தன்னுள் பொங்கிய உணர்ச்சிகளை அவள் சிரமத்துடன் அடக்கிக் கொண்டாள்.

''கூடப் பிறந்தவனா? எல்லாக் காரியத்தையும் ஓசைப்படாமே புசுக்குன்னு முடிச்சுட்டு அடுத்தாத்துக்காரிகிட்ட சொல்றமாதிரி எங்கிட்ட நீ விஷயத்தை சொல்றே! நீன்னு என்னை வெளி ஆளாக்கிட்டே!''

''என்னமா இது!'' என்றாள் அம்மா புரியாத குழப்பத்துடன். ''அப்பாவும் நானும் முடிவு பண்ணப் போறதா?''

''என்ன அவசரம் அப்படி?''

அம்மா ஒரு விநாடி மௌனத்திற்குப் பிறகு சொன்னாள்.

''உனக்கு முடிச்சுட்டு அவனுக்குப்பண்ணணும்னுதான் எனக்கும் ஆசை. ஆனுபிராப்தப் படிதானே நடக்கும்?''

மாலுவுக்குக் குபீரென்று ஆத்திரம் வந்தது.

''இதுக்காக நா சொல்றேன்னு நினைக்கிறியா? ஏம்மா, என்னை எப்போ நீ புரிஞ்சுக்கப் போறே? நீயும் அப்பாவும் நாகநாதனுடைய அந்தஸ்தைப் பார்த்து மயங்கினேள். பாலு அந்தப் பெண்ணோட அழகைக்

கண்டு மயங்கிட்டான். இந்த வீட்டுக்கு அவ ஏத்தவளான்னு யோசிச்சேளா?''

''எல்லாம் நன்னாலே அட்ஜஸ்ட் ஆயிடும்!''

''ஆமாம், நீதான் அட்ஜஸ்ட் பண்ணிக்க வேண்டியிருக்கும்!''

அம்மா அபிமானத்தோடு சிரித்தாள்.

''பண்ணிண்டா போறது. உனக்கு நா இப்பப் பண்ணிக்கல்லியா? அந்தப் பொண்ணும் இந்தாத்துப் பொண்ணுதானே இனிமே!''

''இந்தாத்துலே அவ இருந்தாதானே? அவ இங்க வரமாட்டா, பாலு அங்கே போயிடுவான்.''

ஒரு விநாடி மெல்லிய கலவரம் அம்மாவின் கண்களில் தெரிந்தது.

மறுவிநாடி சமாளித்துக் கொண்டாள்.

''எங்கேயோ குழந்தைகள் நன்னு இருந்தா சரி. ஈசுவர சங்கல்பம் எல்லாம். இத்தனை நல்ல இடம் கிடைக்காது. அந்த சித்ராவை நீ ஒருதரம் பார்த்தேன்னு இத்தனை விதண்டாவாதம் பண்ண மாட்டே!''

''நா நன்னாலே பார்த்திருக்கேன். அவளுக்கு எதையும் மறைக்கிற வழக்கம் இல்லே!''

''அப்படீன்னு?''

''ஒண்ணுமில்லே, விடு!''

''அழகாயில்லேயா அவ?''

''அழகில்லேன்னு யார் சொன்னது?''

''பின்னே? எதுக்கு இப்படிக் குதர்க்கமா ஏதோ பேசிண்டே இருக்கே?''

''நா எதுவும் பேசல்லேம்மா!'' என்று அவள் மிதமிஞ்சிய சோர்வுடன் எழுந்தாள்.

''நீங்க மூணு பேரும் ஒரு பக்கம் இருக்கும் போது உங்க மயக்கத்திலேர்ந்து உங்களையெல்லாம் உலுக்கி எழுப்ப எனக்கும் சக்தியில்லே. என் வாழ்க்கையை அமைச்சுக்கறதுக்குத்தான் எனக்கு அதிகாரம் இருக்கே தவிர மத்தவாளிலே தலையிட எனக்கு அதிகாரமில்லே. இதப்பார், ஒரு விஷயம் ஒளியராச் சொல்றேன். என்னை எந்தப் படாடோபத்துக்கும் கட்டாயப்படுத்தாதே. எனக்கும் அந்தக் கூட்டத்துக்கும் சம்பந்தமில்லே. பட்டுப் புடவை அவா குடுத்தா கட்டிக்கோன்னு சொல்லாதே. நா யாருக்காகவும் என்னை மாத்திக்க மாட்டேன்!''

''நன்னாத் திமிர் பிடிச்சுப் போச்சு உனக்கு!'' என்று அம்மா திடீரென்று கோபத்துடன் இரைந்தாள். ''நீ மாறு, மாறுட்டாப் போ! உன் கல்யாணத்திலேயே இப்படி மூளிக் காதும், மூளிக் கழுத்துமாய் நில்லு. எவன் வந்து மாலை போடறான்னு பார்க்கறேன்.''

''போடல்லேன்னு நா கழுத்தை நீட்டுவேன்னு நினைச்சியா? சில பேர் பேசற தொண்ணூறு, நடத்துக்கிறதொண்ணுன்னு வேஷம் போடறாளே, அப்படி நான் இருக்க மாட்டேன்மா, தெரிஞ்சுக்கோ!'' அவள் நிறுத்தினாள். வராண்டாவுக்குள் பாலு நுழைவது தெரிந்தது. அவனுடன் பேசும் மனநிலை இல்லாமல் அவள் விருக்கென்று எழுந்து உள் அறைக்குச் சென்றாள்.

(தொடரும்)

இம்மாத இல்லத்தரசி போட்டி

பொருள் : புதிய காரவகைகள் கடைசி தேதி: 15–10–84

சமையல் கூப்பன்


.... என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இத்துடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும், எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

அறுசுவை உணவின் ஆதார சுருதி!



உஷா
டபிள்-ரிபைண்ட் கடலை எண்ணெய்



சமையல் கலையில் உங்கள் கைவண்ணம் உயிர் ஊட்டம் பெற... உஷா டபிள் ரிபைண்ட் கடலை எண்ணெய். அன்றாடச் சமையலுக்கும், இனிப்பு மற்ற தின்பண்டங்கள் தயாரிக்கச் சிறந்தது. எளிதில் செரிக்கக் கூடியது. இதயத்துக்கு இதமானது.

உஷா—சுத்தம், சுவை, மணம், சிக்கனம். 15 கிலோ டின்களில் கிடைக்கிறது.



தயாரிப்பாளர்கள்:

B.S.P.
ரி:பைனரீஸ்
சேலம் 636 009

உயர் தரம்!
உன்னத சேவை!
உஷா வழங்கிடும் உத்தரவாதம்!

ADWAVE USHA

சுவைத்துப் பாருங்கள்!

பனீர் புலாவ்

தேவையான பொருட்கள்

அரை கிலோ பாசுமதி அரிசி,
200 கிராம் பச்சைப் பட்டாணி.
கால் கிலோ பனீர் துண்டங்கள்.
2 பெரிய வெங்காயம்,
4 பச்சை மிளகாய்,
1 டீஸ்பூன் மிளகாய்ப் பொடி,
அரை கட்டு கொத்துமல்லி.
2 செ. மீ. துண்டு பட்டை,
4 ஏலக்காய்,
4 கிராம்பு,
2 தக்காளி,
நெய் அல்லது டால்டா தேவையான அளவு.
உப்பு தேவையான அளவு.
அரை மூடி எலுமிச்சம்பழம்.

செய்முறை

வெங்காயத்தை நீள வாக்கில் மெல்லிய துண்டுகளாக நறுக்கவும். பச்சை மிளகாய்களைக் கீறிக் கொள்ளவும்.

அரிசியைக் கழுவி நீர் வடிய விடவும்.

குக்கரை அடுப்பில் வைத்து நெய்(அ) டால்டா விட்டுச் சூடானதும் பனீர் துண்டங்களைப் போட்டுச் சிவக்கப் பொரித்துக் கொள்ளவும்.

மீதி நெய்யில் வெங்காயம் பச்சை மிளகாயை வதக்கி, பட்டை, ஏலக்காய், கிராம்பு சேர்த்து வதக்கவும்.

தக்காளி துண்டுகளாக நறுக்கிச் சேர்க்கவும். வெந்ததும் அரிசியைக் கொட்டிக் கிளறவும். பட்டாணியைச் சேர்த்துக்கொள்ளவும்.

திட்டமாக உப்பு சேர்த்து மிளகாய்ப் பொடி தூவி ஒன்றுக்கு இரண்டு என்ற கணக்கில் தண்ணீரைச் சேர்த்துக் குக்கரை மூடி வேக விடவும்.

சத்தம் வந்து 5 நிமிடம் வரை வேக விடவும்.

பரிமாறும் தட்டில் கொட்டி சமமாகப் பரப்பி மேலாகப் பொரித்த பனீர் துண்டுகளை வைக்கவும். பொடியாக நறுக்கிய கொத்து மல்லித் தழையைத் தூவி விடவும்.

பனீர் தயாரிக்க:

1 லிட்டர் பால்,
1 டேபிள் ஸ்பூன் தயிர்,
1 சிறிய எலுமிச்சம்பழம்.
கால் டீஸ்பூன் சால்ட்.

செய்முறை:

பாலைக் காய்ச்சிக் கொதி வந்ததும் எலுமிச்சம்பழத்தைப் பிழிந்து விட்டு தயிரையும் விட்டுத் தொடர்ந்து கிளறவும்.

பால் திரிந்து தண்ணீர் வேறு பால் கட்டி வேறாக வரும் பொழுது உப்பு சேர்க்கவும், கிளறவும்.

மெல்லிய மஸ்லின் துணியில் நீரைச் சிறிது சிறிதாக வடிய விடவும்.

துணியில் தங்கியுள்ள பால் கட்டி உதிரிகளைச் சேகரித்துத் தாம்பாளத்தில் கொட்டி உள்ளங்கையில் தேய்த்துத் தட்டொன்றில் சமமாகப் பரப்பி — ஆவியில் வைத்து எடுத்தால் நன்கு கெட்டியாக இருக்கும். துண்டுகளாக வெட்டலாம்.

பிரட் அண்ட் சாக்லெட் புட்டிங்

தேவையான பொருட்கள்

10 பழைய பிரட் ஸ்லைஸ்கள்.
3 முட்டைகள்,
முக்கால் லிட்டர் பால்,
ஒன்றரை டேபிள் ஸ்பூன் கோகோ பவுடர்,
அரை டீஸ்பூன் ஜாதிக்காய்த் தூள்.
1 டீஸ்பூன் வெனிலா எசென்ஸ்,
தேவையான அளவு சர்க்கரை.



அலங்கரிக்க:

முந்திரிப் பருப்பு, செர்ரிப் பழங்கள்.

செய்முறை:

பிரட் ஸ்லைஸ்களை கொதிக்கும் பாலுக்குள் அமுக்கி முக்கால் மணி நேரம் ஊறவிடவும்.

வேண்டிய அளவு சர்க்கரை சேர்த்து எசென்ஸ் ஜாதிக்காய், கோக்கோ பவுடர் சேர்த்து நன்கு கலக்கவும்.

முட்டைகளை நன்றாக அடித்து பிரட் கலவையில் கலக்கவும்.

சூடு தாங்கக் கூடிய கிண்ணத்தில் கொட்டி வாயைத் துணியால் இறுகக்கட்டி நீருள்ள பாத்திரத்தில் வைத்து மெல்லிய சூடு அடுப்பில் ஒன்றரை மணி நேரத்துக்கு வேக (ஸ்டீம் செய்யவும்.) விடவும்.

கட்டியுள்ள துணியை எடுத்து விட்டு முந்திரி செர்ரி பழங்களால் அலங்கரித்துச் சூடாகவோ குளிர்சாதனப் பெட்டியில் குளிர வைத்தோ பரிமாறவும்.

பேரீச்சம்பழ ஃபட்ஜ்

தேவையான பொருட்கள்

400 கிராம் சர்க்கரை,
60 கிராம் வெண்ணெ,
150 மில்லி லிட்டர் பால்,
150 மில்லி தண்ணீர்,
ஒரு சிட்டிகை சோடா பை கார்பனேட்,
100 கிராம் பொடியாக நறுக்கிய பேரீச்சம் பழம்,
அரை டீஸ்பூன் வெனிலா எசென்ஸ்,
25 கிராம் முந்திரிபருப்பு.

செய்முறை:

அடி கனமான பாத்திரத்தில் பால், தண்ணீர் சர்க்கரை, சோடா பை கார்பனேட் இவற்றைப் போடவும்.

சர்க்கரை கரையும் வரை மெதுவாகக் கிளறவும்.

சரைத்ததும் கொதிக்க விடவும். பாகு முத்துப் போல் திரண்டு வந்ததும் இறக்கி வைத்து எசென்ஸ், பழம் சேர்க்கவும்.

கலவையை மரக்கரண்டியால் நன்கு கிளறவும். கெட்டியானதும் வெண்ணெ தடவிய தட்டில் கொட்டி சதுரங்களாக வெட்டவும்.

பொடியாக நறுக்கிய முந்திரியைத் தூவி விடவும்.

முந்திரி செர்ரி ரோல் (பிஸ்கட்)

தேவையான பொருட்கள்

225 கிராம் மைதாமாவு,
120 கிராம் வெண்ணெ,
60 கிராம் பொடித்த சர்க்கரை,
1 முட்டை,
60 கிராம் பொடித்த முந்திரி,
துருவி எலுமிச்சம் பழத் தோல்,
சிறிதளவு பால்,
செர்ரி பழங்கள் சில.

செய்முறை:

வெண்ணெயையும் சர்க்கரையையும் நன்கு கலக்கவும்.

முட்டை மஞ்சள் கருவையும் எலுமிச்சம் பழத் தோல் துருவியும் சேர்க்கவும். நன்கு கலக்கவும்.

மாவையும் சேர்த்துக் கலக்கவும். மாவு சிறிது தளர்த்தியான சப்பாத்தி மாவு போல் இருக்க வேண்டும். தேவையானால் பால் சேர்க்கவும்.

எலுமிச்சம்பழ அளவு உருண்டைகளாக்கி முட்டை வடிவில் உருட்டவும்.

நுரையாக அடித்த முட்டை வெள்ளையில் தோய்த்து பொடித்த முந்திரியில் புரட்டி நறுக்கிய செர்ரி பழம் தூவவும்.

வெண்ணெ தடவிய தட்டில் ஒவ்வொன்றாக அடுக்கி 350°F சூடுள்ள ஓவனில் 20 முதல் 25 நிமிடம் வரை பேக் செய்யவும்.

சியாமளா சிவராமன்

புகைப்படங்கள்: பால்ராஜ்

வேலைக்குச் செல்லும் பெண் மணிகளுக்கு கீரையைப் பொடியாக நறுக்கிச் சமைக்க நேரம் இருக்காது. இதைத் தவிர்க்க, கீரைகளைப் புல் களைந்து, இலைகளைப் பிய்த்து, காம்புகளை சிறிதாக ஒடித்து, நன்கு கழுவி, குக்கர் பாத்திரத்தில் போடவும். இதனுடன் சிறிது உப்பு, மிளகாய், தக்காளி, சிறிது பயத்தம் பயறு சேர்த்து ஒரு ஸ்டீம்விட்டு இறக்கி, மிக்ஸியில் ஒரு சுற்று சுற்றி இறக்கவும். பிறகு கடுகு, பெருங்காயம் தாளித்து, கீரையைக் கொட்டி ஒரு கிளறு கிளறி இறக்கினால், மிகவும் சுவையாக இருக்கும்.

இதில் மிளகாய், தக்காளியை முழுதாகவே போட்டு வேக வைக்கலாம். இதனால் நேரம் மீதமாகிறது.

—ஜானகி.

கஸ்தூரிபா

(சென்ற இதழ்த் தொடர்ச்சி...)

காந்திக்கு அப்போது 16 வயது. மகாத்மாவுக்கான தன்மைகள் சில அவரிடம் பூடகமாக இருந்தன. அதே நேரம் ஒரு சாதாரண இளைஞனைப் போன்று ஏராள துர்க்குணங்களும் இருந்தன.

அவர் தந்தை நோய்வாய்ப்பட்டிருந்த நேரம் காந்திக்குத் தனது பெற்றோரைப் பேண வேண்டும் என்று ஒரு நற்குணம்!

தந்தைக்குச் செய்யும் சேவை எல்லாம் தமது கடமை என்று நம்பினார்.

இருந்தும் குறிப்பிட்ட இரவு காந்தி ஒரு தவறு செய்தார்.

தந்தையின் சகோதரர் ஒருவர் வந்திருந்தார். அவர் பொறுப்பில் தந்தையை விட்டுவிட்ட காந்தி நேராகப் படுக்கை அறைக்குச் சென்றார்நேராக கஸ்தூரிபாவைப் போய் எழுப்பினார்.

தூங்கிக் கொண்டிருந்த அவர் எழுந்து, ''என்ன விஷயம்'' என்று கேட்க, காந்தி தமது இச்சையைக் கூறினார். தந்தை மிகவும் மோசமான நிலைமையில் இருக்கும் வேளையில் நடு இரவில் இப்படி ஒரு செயலை கஸ்தூரிபா எதிர்பார்க்கவில்லை. எனினும் காந்தியின் பிடிவாத குணமும் ஆத்திரமும் அவருக்குத் தெரியும்.

பேசாமல் அடிபணிவதைத் தவிர வேறு வழியில்லை. சிறிது நேரத்தில் படுக்கை அறைக் கதவு தட்டப்பட்டது. காந்தி சோர்வோடு போய்த் திறந்தார்.

தந்தை மிகவும் மோசமாகி விட்டதாக வேலைக்காரன் அறிவிக்க, காந்திக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. ஓடிச் சென்று பார்த்தபோது தந்தை இறந்திருந்தார்.

தந்தை இறந்த கடைசி நிமிடங்களில் தாம் படுக்கை அறையில் இருந்த அவலத்தை நினைத்துப் பின்னர் காந்திஜி சோகத்தோடு தமது சுயசரிதையில் எழுதி உள்ளார்.

தந்தை இறந்த சில நாட்களில் காந்திக்கு முதல் குழந்தை பிறந்தது. அது அதிக நாட்கள் வாழவில்லை. சில நாட்களில் இறந்து விட்டது. காந்தி பின்னர் மெட்ரிகுலேஷன் எழுதித் தேர்ச்சி பெற்றார். அவரை இங்கிலாந்துக்குப் பாரிஸ்டர் படிப்புக்கு அனுப்புவதற்கான பேச்சு நடந்தது.

இங்கிலாந்துக்கு காந்தி கப்பல் ஏறிய போது கஸ்தூரிபாவுக்கு இரண்டாவது குழந்தை பிறந்து சில மாதங்களே ஆகியிருந்தன.

மூன்று ஆண்டுகள் சென்ற பின்னர்தான் காந்திஜி இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். கணவர் பாரிஸ்டராகி திரும்பி வருகிறார். மேல் நாட்டுப் பழக்கம் அவருக்குப் பரந்த மனப்பான்மையை கொடுத்திருக்கும் என்று கஸ்தூரிபா கனவு கண்டார்.

அவருக்கு அப்போது வயது இருபத்து மூன்றுதான். ஆனால் அவருக்கு ஏமாற்றந்தான் மிச்சம். காந்தி அவளைப் பொறுத்த வரையில் ஒரு இம்மி கூட மாறவில்லை. அப்படியே அதே பழைய சுபாவங்களுடன் திரும்பி வந்திருந்தார். கஸ்தூரிபாவைக் கண்டதற்கெல்லாம் கடிந்தார். ஒரு சின்னத் தவறுக்கும் பொறுமை இழந்து பேசினார்.

கஸ்தூரிபாவுக்கு மனம் ஒடிந்து விட்டது. என்றுதான் தமது கணவர் சரி ஆவார் என்று மனம் வெதும்ப ஆரம்பித்தார். இந்தியாவில் காந்தி தொழில் நடத்த ஆரம்பித்தார்.

அப்போது தான் ஒரு வியாபார நிறுவனத்திலிருந்து தென் ஆப்பிரிக்கக் கோர்ட்டில் வழக்காடும்படி அழைப்பு வந்தது. காந்தி அதை ஏற்றுக் கொண்டார். ஆனால் இந்தத் தடவை மனைவி மக்களைப் பிரிவது சற்றுக் கடினமாக இருந்தது. அவருக்கு இந்தச் சமயத்தில் இரண்டு பிள்ளைகள்!

ஒரே வருடத்தில் திரும்பி வந்து விடுவேன் என்று காந்தி புறப்பட்டுச் சென்றார். ஆனால் காந்தியின் ஆப்பிரிக்கப் பிரவேசம் அவர் வாழ்க்கையை மட்டுமல்ல, இந்தியாவின் வாழ்க்கையையே திருப்பப் போகிறது என்பது கஸ்தூரிபாவுக்குத் தெரியாது. ஆப்பிரிக்காவிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர்தான் காந்தி இந்தியாவுக்கு வந்தார்.

வந்தவர் இந்தியாவில் தங்குவதற்காக வரவில்லை. மனைவி மக்களை அழைத்துப்போகவே வந்தார். கஸ்தூரிபா ஆப்பிரிக்காவுக்குச் சென்றார்.

கப்பலில் இருந்து இறங்கும்போதே அவளுக்குச் சோதனைகள் ஆரம்பித்து விட்டன. தமது கணவரின் பெயர் ஆப்பிரிக்காவில் பிரபலமாகி இருப்பதை உணர்ந்தார். அவருக்கு எல்லாம் புதுமையாக இருந்தது.

காந்தியுடன் டர்பனில் வாழ்க்கை துவங்கியது. நல்ல சுகபோகத்திலிருந்த காந்தியின் வாழ்க்கை முறை மாற ஆரம்பித்தது. ஆப்பிரிக்காவில் இந்தியர் படும் கொடுமைகள் அவர் மனத்தை இழுத்தது.

கஸ்தூரிபாவுக்குப் புதுத் தொல்லைகள் ஏற்பட ஆரம்பித்தன. காரணம் காந்தி தாம் நம்பும் புதுக் கொள்கைகளை கஸ்தூரிபாவிடமும் திணிக்க ஆரம்பித்தார்.

இது பல அபிப்பிராய பேதங்களைக் கொண்டு வர ஆரம்பித்தன. குறிப்பாக காந்தி தம்முடன் வேலை செய்பவர்களைத் தம் சொந்தக்காரர் போல நடத்தினார். இதில் அரிஜனக் கிறிஸ்துவர் ஒருவர் இருந்தார்.

வீடு ஐரோப்பிய முறை வீடு. அந்நாளில் அந்த வீடுகளில் சாக்கடை கிடையாது.



ஒவ்வொரு அறையிலும் 'சேம்பர் பாட்' என்ற பானை இருக்கும். அதில் தான் கழிவு நீர் எல்லாம் சேகரிக்கப்படும்.

காந்தி தமது ஊழியர் பலர் தங்கும் அறையிலிருந்து கழிவுப் பானைகளைத்தாமே எடுத்து வந்து சுத்தம் செய்ய ஆரம்பித்தார்.

ஏற்கெனவே இது அருவருப்பான வேலை! கஸ்தூரிபாவுக்கு அவை கஷ்டமாக இருந்தன. அதிலும் அரிஜனக் கிறிஸ்துவர் அறையிலிருந்து கழிவுப் பானையை எடுத்து வருவதற்கு அவர் மனம் இடம் கொடுக்கவே இல்லை.

ஒருநாள் தமது கருத்தைச் சொல்லிக் கஸ்தூரிபா பானையை அகற்றும் வேலையை மறுத்தார்.

காந்திஜிக்குச் சினம் வந்தது. குரலை உயர்த்தி, "என் வீட்டில் இதெல்லாம் கூடாது!" என்று இரைந்தார்.

"உங்க வீடு உங்களுக்கே இருக்கட்டும்! நான் போகிறேன்" என்று பதிலுக்கு இரைந்தார் கஸ்தூரி பா!

காந்திக்குக் கடும் கோபம் வந்தது.

கஸ்தூரிபாவைத் தரதரவென்று இழுத்து வெளியே தள்ளுவதற்குக் கொண்டுபோனார். வாசல் கதவைத் திறந்தும் விட்டார்.

கஸ்தூரிபாவின் கண்களில் நீர் பொழிந்தது.

"என்னை விடுங்க! இன்னும் எவ்வளவு தூரம் தான் போவீங்க? உங்களுக்கு வெட்கம் இல்லையா? என்னைப் போகச் சொல்றீங்களே! எங்கே போவேன்? எனக்கு அப்பா இருக்கிறாரா, அம்மா இருக்கிறாரா அல்லது என்னை ஏத்துக்க யாராவது உறவுக்காரங்க இருக்காங்களா? உங்களைப் புருஷனு ஏத்துக் கிட்டதிலே எனக்கு என்ன சுகம் கிடைத்தது! உதையும் இட்டும்தானே! ஊர்சிரிக்கப் போகுது. முதல்லே கதவைச் சாத்துங்க!" என்றாள்.

காந்திஜி ஸ்தம்பித்து நின்றார்.

தாம் செய்தது தப்பு என்பதை உணர்ந்தும் அதை வெளியே சொல்ல மனம் வர இல்லை.

கஸ்தூரி பாவுக்கு ஒரு சமயம் நிறைய ரத்தப் போக்கு ஏற்பட்டது. அதனால் அவள் உடம்பு மிகவும் பலவீனமாகி விட்டது. டாக்டர்களிடம் கேட்டதற்கு ஆபரேஷன் செய்ய வேண்டும் என்றார்கள்.

ஆனால் கஸ்தூரிபா மிகவும் நலிந்திருந்ததால் மயக்க மருந்து கொடுக்க முடியவில்லை. அது கொடுக்காமலேயே அறுவைச் சிகிச்சை செய்தார்கள். தாங்க முடியாத வலி! ஆனால் அத்தனையையும் தாங்கிக் கொண்டார் கஸ்தூரிபா.

> **சீதபேதி உள்ளவர்கள்....**
>
> **கால் லிட்டர் நெல் பொரியை வாயிலிட்டு மென்று தின்று தண்ணீர் குடியுங்கள். ஒரு நாளில் இரண்டு மூன்று தடவையாக அருந்தலாம். சிறுவர்களுக்கு அளவு குறைத்துத் தரவும். இரண்டு வேளையில் பேதி நிற்கும்.**
>
> **ஆதாரம்: சித்தமருத்துவம்**
> **ராஜிராதா**

இதற்கிடையில் கஸ்தூரிபாவின் உடல்நிலை தேறவில்லை. மோசமாகியது. மயக்கமும் வந்தது. டாக்டர் அவருக்கு மதுவும், மாட்டிறைச்சி சூப்பும் கொடுக்க விரும்பினார்.

காந்தியின் குணம் அவருக்குத் தெரியும். ஆதலால் அவருக்குப் போன் செய்து கேட்டார்!

காந்தி உடனே, "நான் இதை அனுமதிக்க மாட்டேன்! ஆனால் என் மனைவி இதை அனுமதித்தால்.. நீங்கள் கொடுக்கலாம்!" என்றார்.

"நான் நோயாளிகள் விருப்பத்தைக் கேட்பதில்லை. நீங்கள் என் இஷ்டப்படி சிகிச்சை செய்ய அனுமதிக்க வில்லை என்றால் நோயாளியின் உயிருக்கு நான் உத்திரவாதி அல்ல!" என்று கூறினார்.

காந்தி உடனே ரயில் ஏறி டர்பனுக்கு வந்தார்.

"நான் உங்களுக்குப் போன் பண்ணும் போதே உங்கள் மனைவிக்கு சூப்கொடுத்து விட்டேன்" என்றார் டாக்டர்.

"இது ஒரு ஏமாற்று வேலை!" என்றார் காந்தி.

"நோயாளிக்கு சிகிச்சை செய்வதில் பொய், ஏமாற்று வேலை எதுவும் கிடையாது. ஒரு பொய் சொல்வதனாலே ஒரு நோயாளி உயிரைக் காப்பாற்ற முடியுமானால் அதைச் சொல்ல நாங்கள் தயங்க மாட்டோம்!" என்றார் டாக்டர்.

"சரி! டாக்டர் இனி மேலே அவளுக்கு இறைச்சி சூப் கொடுப்பதை நான் அனுமதிக்க முடியாது. இதனால் அவள் இறந்தாலும் பரவாயில்லை."

"அப்படியானால் நீங்கள் உங்கள் மனைவியை எடுத்துச் செல்லுங்கள்! என் ஆஸ்பத்திரியில் அவள் சாவதை நான் விரும்பவில்லை!" என்றார் டாக்டர்.

காந்தி இசைந்தார்.

ஆனால் கஸ்தூரி பா அதுவரை அங்கே நடந்த நாடகத்தைக் கவனித்து வந்தார். காந்தியை சைகை காட்டி அழைத்தார். 'நான் சூப் சாப்பிட மாட்டேன். உங்க கையிலே உயிரை விடுவேனே தவிர அந்தப் பாபத்தைச் செய்ய மாட்டேன்" என்றார்.

காந்தி அவளை விடவில்லை. அவருக்காக கஸ்தூரி பா எந்த முடிவும் எடுக்க வேண்டாம்

என்று கூறினர். விருப்பமானல் சூப்கூடச் சாப்பிடலாம்'' என்றார்.

கஸ்தூரிபா ஒத்துக் கொள்ளவில்லை. தம் தீர்மானத்தில் உறுதியாக இருந்தார்.

காந்தி உடனே கஸ்தூரி பாவை அப்புறப் படுத்த வேலைகள் செய்தார்.

அதைப் பார்த்த டாக்டர் ஆத்திரத்தோடு, ''மிஸ்டர் காந்தி! என்ன மனிதர் நீங்கள்? உங்க மனைவியிடம் இதைச் சொல்லலாமா? வெட்கமாயில்லே? உங்க மனைவி ஒரு அடி நகர முடியாது. எந்த விநாடியும் இறந்து விடுவார். ஜாக்கிரதை'' என்று கூறினர்.

காந்தி தமது தீர்மானத்தை மாற்ற விரும்பவில்லை. வெளியே தூறிக் கொண்டிருந்தது. ரயில் நிலையம் சற்று தூரத்தில் இருந்தது. ரயிலில் ஏறி ஃபோனிக்ஸ் போய் அங்கிருந்து இரண்டரை மைல் நடந்தால் தான் வீட்டை அடையலாம்.

காந்தி ஒரு ரிக்ஷாவை வரவழைத்தார். கஸ்தூரி பாவைப் பார்க்க மிகவும் மோசமாக இருந்தார். வெறும் எலும்பும் தோலும் தான்! எனினும் ரிக்ஷாவில் ஏற்றினர்.

''எனக்கு எதுவும் ஏற்படாது, கவலைப் படாதீங்க'' என்றார், கஸ்தூரிபா.

ரிக்ஷா ரயில் நிலையத்துக்குச் சென்றது சிறிது தூரம் நடந்துதான் உள்ளே போக வேண்டும் காந்தி தமது மனைவியைக்கையில் தூக்கிக் கொண்டார். ரயில் பெட்டியில் ஏற்றினர்.

ஃபோனிக்ஸ் அடைந்த அங்கிருந்து தூளி போன்ற அமைப்பில் வீடு கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

காந்தி பிறகு கஸ்தூரிபாவுக்குஇயற்கை வைத்தியம் கொடுத்தார்.

கஸ்தூரிபா ஆச்சரியமாகக் குணம் அடைந்தார்.

மற்றொரு முறையும் கஸ்தூரிபாவுக்கு ரத்தப் போக்கு ஏற்பட்டது. காந்தி இயற்கை வைத்தியத்தில் இறங்கினர். கஸ்தூரிபாவுக்கு அதில் நம்பிக்கை அதிகம் இல்லை. எனினும் கணவர் சொல்லை மீறவும் விருப்பமில்லை.

பல சிகிச்சை முறைகள்தோல்வியானபிறகு காந்தி அவரை உப்பையும் பருப்புகளையும் விலக்கும்படி கூறினர்.

கஸ்தூரிபா இணங்கவில்லை. இருவருக்கும் வாக்குவாதம் வந்தது. ''உங்களால் முடியுமா'' என்று ஆத்திரத்தில் கேட்டார் அவர்.

''தேவையானல் முடியும். இன்றிலிருந்து ஒரு வருஷம் உப்பு, பருப்பு இல்லாமல் இருப்பேன்'' என்று சபதமிட்டார் காந்தி.

கஸ்தூரிபா அதிர்ச்சி அடைந்தார். காந்தியின் குணம் அவருக்குத் தெரியும்.

''என்னை மன்னிச்சிடுங்க! உங்க குணம் தெரிஞ்சு, நான் இம்மாதிரி சொல்லியிருக்கக் கூடாது. உப்பு பருப்பை நான் விட்டுவிடுறேன்! நீங்க சபதம் எடுக்க வேண்டாம்'', என்றுள்.

''நான் சொன்னது உனக்கு நன்மை கொடுக்கும். அதேபோல இந்த 'விரதம்' எனக்கும் நன்மை கொடுக்கும். உனக்கு நான் தார்மீகத் துணை கொடுத்த மாதிரியும் இருக்கும். எனவே நானும் உப்பு, பருப்பு சேர்த்துக் கொள்ளப் போவதில்லை'' என்றார் காந்தி.

பின்னர் இந்தச் சம்பவத்தைக் குறித்து தமது 'சத்யாக்ரக'த்தின் ஆரம்பம் என்று காந்திஜி எழுதினர்.

விரதம் ஆரம்பித்த சிறிது காலத்தில் கஸ்தூரிபாவின் நோய் குணம் ஆயிற்று. காந்திக்கும் பல உடல் அனுகூலங்கள் ஏற்பட்டன.

தமது வைத்தியம் தான் ஒரே காரணம் என்று காந்தி கூறவில்லை; நம்பிக்கையும் காரணமாக இருக்கலாம் என்று நம்பினர் காந்தி.

தென்னாப்பிரிக்காவில் காந்தி ஒன்பது ஆண்டு காலம் இருந்தார்!

இந்த ஒன்பது ஆண்களிலும் அவர் படிப் படியாக மாறி வந்தார்.

மெல்ல மெல்ல ஆடம்பரத்தை ஒதுக்கினர்.

எளிமையாக வாழ ஆரம்பித்தார்.

எல்லோரையும் சமமாகப் பாவிக்க ஆரம்பித்தார்.

எளியவர்களுக்குச் சேவை செய்வதே தமது லட்சியம் என்று எண்ணத் தொடங்கினர்.

காந்தியின் மாறுதல் கஸ்தூரி பாவைப் பெரிதும் பாதித்தன. பலவற்றில் அவருக்கு உடன்பாடு இல்லை எனினும், சிறுகச் சிறுக அவர் காந்தியின் வழியிலேயே சேர ஆரம்பித்தார்.

ஆரம்பத்தில் தமது கருத்துக்களை பலாத்காரமாக கஸ்தூரிபா மீது திணித்த காந்தி, மெல்ல மெல்ல கஸ்தூரி பாவும் தன்னைப் போன்ற ஒரு ஜீவன், அவளும் ஒரு கருத்தைத்

முகப்பருக்கள் மறைய

ஆற்றுமணலிலும், கடற்கரைகளிலும் காணப்படும் சங்குகளைச் சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள். முகத்தில் பருக்கள் ஏற்படும் பொழுது இச்சங்குகளை உறைத்துப்பருக்களின் மேல் பற்று போடுங்கள். பருக்கள் பறந்து போய்விடும்.

-திருமதி தேவனுதன்

தானகவே விரும்பி ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்று நினைக்க ஆரம்பித்தார்.

ஆப்பிரிக்காவில் இடைத்த பெரும் புகழுடன் இந்தியா திரும்பி வந்த காந்திஜி முதன் முதலாக 'சத்தியாகிரகம்' ஆரம்பித்த போது அதன் முதல் அணியில் கஸ்தூரிபாவைச் சேர்த்துக் கொள்ளவில்லை.

தமது கணவனின் உன்னத நோக்கங்களைப் புரிந்து அவைகளோடு ஒன்றிவிட்ட கஸ்தூரிபாய் உடனே காந்திஜியிடம் சண்டைபோட்டார்.

''உனக்குச் சிறை வாழ்க்கை அனுபவிக்க முடியுமா என்று பார்த்துக் கொள்! அதன் பின் வருந்தக் கூடாது'' என்று உபதேசித்தார் காந்திஜி.

''தாங்கள் கூறும் எந்த வாழ்க்கையையும் நான் ஏற்றுக் கொள்வேன்'' என்று கூறினார் கஸ்தூரிபா! உண்மையில் அவர் ஒரு மாதர் இலகமாக மாறி விட்டார்.

காந்திஜி அவரை சத்யாக்கிரகத்தில் சேர்த்துக் கொண்டார்.

அதன் பின் கணவன் மனைவியர் வாழ்க்கை இந்திய வரலாற்றோடு கலந்து விட்டது.

இந்திய நாடு பூராவுமே அவர்களுக்கு வீடாகத் தோன்றியது. இந்திய மக்கள் அனைவருமே அவர்களது மக்களாக மாறினர்கள்.

இருவரும் பல போராட்டங்களில் கலந்து கொண்டபின், 1942 ஆகஸ்ட் மாதம் 'வெள்ளையனே, வெளியேறு' என்ற தீர்மானம் நிறைவேற்றியதை ஒட்டி இருவரும் கைது செய்யப்பட்டார்கள்.

இருவரும் ஆகாகான் அரண்மனையில் சிறை வைக்கப்பட்டார்கள்.

அங்கே காந்திஜியின் நெருங்கிய காரியதரிசி மகாதேவ தேசாய் ஆகஸ்ட் பதினைந்தில் காலமானர்.

1943 மார்ச் மாதத்தில் கஸ்தூரிபாவுக்கு மார்பு வலி வந்தது.

காந்திஜியும் அதே சிறையில் இருந்ததால் கஸ்தூரிபாவை நோய் காரணமாக விடுதலை செய்ய வேண்டியதில்லை என்று அரசாங்கம் எண்ணியது.

துளசிச் செடியை நடும் போது வெங்காயத்தை யும் அதன் கூடவே நட்டுவையுங்கள். துளசி வேரைப் புழு அரிக்காது. செடியும் வாடாமல் சீக்கிரம் நன்கு வளரும்.

-என். குப்பம்மாள்



1944 பிப்ரவரிக்குள் கஸ்தூரிபாவின் நிலை மோசமாகியது.

அன்னை கஸ்தூரிபா நலிந்து போய்க் கிடந்தார்.

டாக்டர்கள் அடிக்கடி வந்து கவனித்தார்கள்.

அப்போது தான் தோன்றியிருந்த பெனிஸிலின் மருந்து விமானம் மூலமாக வரவழைக்கப்பட்டது.

அந்த இஞ்செக்ஷன் கொடுக்கலாமா என்று காந்திஜியின் மகன் தேவதாஸ்காந்தி கேட்க,

''உன் தாய் இனி பிழைக்கப் போவதில்லை. எல்லா மருந்துகளையும் அவள் தவிர்த்து விட்டாள். இறைவனிடம் தன்னை அர்ப்பணித்து விட்டாள். அப்படிப்பட்டவளுக்கு நான்கு மணி நேரத்துக்கு ஒரு ஊசி கொடுக்க வேண்டுமா? அவள் உடலைப் புண்ணாக்க வேண்டுமா? அவளுக்கு நோகாதா? எனினும் உன் இஷ்டம்!'' என்றார்காந்திஜி.

பெனிஸிலின் கொடுக்கப்படவில்லை.

1944 பிப்ரவரி 22-ந் தேதி இருட்டிய பிறகு, தம் பிள்ளைகள் சுற்றி நிற்க, கணவர் காந்திஜியின் மார்பு மீது சாய்ந்தவாறு ஜீவனை விடுத்தார் கஸ்தூரிபா!

நாடு முழுதும் கண்ணீர் விட்டு அழுதது. பத்திரிகைகள் பிரலாபித்தன.

'அன்னையே! நாங்கள் 40 கோடி மக்கள் இருந்தும், தங்களைச் சிறையில் சாவதற்கு அனுமதித்தோம்' என்று கஸ்தூரி பாவின் படத்தை வெளியிட்டு உருக்கமான வாசகத்தை எழுதியிருந்தார் கல்கி!

காந்திஜி ஊன்றுகோலுடன் நடந்து கொண்டே சமக்கிரியைகளைக் கவனித்தார்.

அடிக்கடி அவர் கண் கலங்கியது.

அன்னையின் புனிதசாம்பலை பிரயாகையில் கரைத்தார் அவரது மகன் தேவதாஸ்காந்தி.

இந்தியாவின் ஒரு மாபெரும் பெண் தெய்வம் மறைந்தது.

வாழ்க்கை ஒப்பந்தம்!

இந்து, முஸ்லீம் திருமணங்களைப் பார்த்தோம். கிறித்துவத் திருமணங்களும் சட்டப்படி ஏறக்குறைய ஒரே மாதிரியான விதிகளைக் கொண்டவையே. எனினும் மத அமைப்புப்படி சில வேறுபாடுகளைக் கொண்டுள்ளது.

பதினாறு வயது நிரம்ப வேண்டும்!

கிறித்துவத் திருமணங்களுக்கு என்ன நிபந்தனை எனப் பார்க்கலாமா?

1. திருமணம் செய்து கொள்ளும் இருவரும் பதினாறு வயது நிரம்பியவர்களாக இருக்க வேண்டும்.

2. இருவருமோ அல்லது இருவரில் ஒருவரோ கிறித்துவராக இருக்க வேண்டும்.

3. 1857—ஆம் ஆண்டு இயற்றப்பட்ட கிறித்துவத் திருமணச் சட்டங்களுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

4. திருமணம் செய்து கொள்ளும் ஆண் (அ) பெண்ணிற்கு மனைவியோ கணவனோ உயிருடன் இருத்தல் கூடாது.

ஒரு கிறித்துவர் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் வசிக்கும் ஊரிலுள்ள கிறித்துவத் திருமணப் பதிவாளரை அணுக வேண்டும். அப்பதிவாளர் விவரங்களைக் கேட்டுக் கொண்டு ஒரு நோட்டீஸைப் பதிவு அலுவலகத்திற்கு முன் ஒட்டுவார். நோட்டீஸ் ஒட்டிய ஒரு வாரத்திற்குள் மறுப்போ, எதிர்ப்போ எதுவும் எழவில்லையெனில் ஒரு சான்றிதழ் தருவார். அதில் குறிப்பிட்ட நபரின் திருமணம் நடக்கும் சர்ச் (அ) சேப்பல் (அ) இடம் குறிப்பிடப் பட்டிருக்கும். திருமணம் நடக்கின்ற தேதியும், நேரமும் குறிப்பிட்டிருக்கும். எப்படியிருப்பினும் சான்றிதழ் வெளியிடப் பட்ட இரண்டு மாதத்திற்குள் திருமணத்தை நடத்திவிட வேண்டும்.

- கிறித்துவத் திருமணங்கள் சர்ச்சிலோ, சேப்பலிலோ தான் நடக்கவேண்டும் என்பதில்லை. திருமணத்திற்குத் திருமணப் பதிவாளர் இருக்க வேண்டும் என்பதுதான் விதி.



- திருமணத்தைப் புனிதத் தன்மையுடன் நடத்தும் விருப்பத்தால் அநேகம்பேர் சர்ச்சில் வைத்துக் கொள்கிறார்கள்.
- திருமணத்திற்கு இருவர் சாட்சிகளாக இருக்க வேண்டும்.
- திருமணம் செய்து கொள்பவர் பதினாறு வயதுக்கு மேம்பட்டவராகவும், பதினெட்டு வயதுக்கு உட்பட்டவராக

வும் இருந்தால், அவருடைய பெற்றோரோ, கார்டியனோ திருமண ஒப்பந்தத்தில் கையெழுத்து இட வேண்டும்.

திருமணப் பதிவாளரிடம் பதிவு செய்து, குறிப்பிட்ட தினத்தன்று திருமணம் நடக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அன்றைய தினம் திருமணப் பதிவாளர் முன் மணமகனும், மணமகளும் உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும்.

''நான் குறிப்பிட்ட இவரைக் கணவராக ஏற்றுக் கொள்ள முழு மனதுடன் சம்மதிக்கிறேன்...''

என மணமகளும்,

''நான் குறிப்பிட்ட இவளை மனைவியாக ஏற்றுக் கொள்ள முழுமனத்துடன் சம்மதிக்கிறேன்...''

என மணமகனும்

கர்ப்ப காலத்தில் பெண்கள் உப்பைக் குறைக்க வேண்டும். உப்பைச் சாப்பிடுவதால், உடம்பில் நீர் கோர்த்துக் கொள்ளலாம். அதனால் எடை 'பரபர' வென்று அதிகமாகலாம். சில சமயங்களில் இது இரத்த சுத்தியைக் கெடுத்துக் குறைப் பிரசவத்தில் வந்து முடியும். திடீரென்று காரணமில்லாமல் தான் பருத்து விடுவதைக் கர்ப்பிணி உணர்ந்தால், முதல் காரியமாக உணவில் உப்பைக் குறைத்து விட வேண்டும்.

○ இப்ராஹீம்

உறுதிமொழி கூறித் திருமணப் பதிவேட்டில் கையெழுத்தும் இடவேண்டும். எனவே இங்கு 'வாழ்க்கை ஒப்பந்தமாக' இவர்களுடைய திருமணம் மாறுகிறது. இத்திருமணத்திற்கு இருவர் சாட்சியாகக் கையெழுத்தும் இட வேண்டும்.

மாதத்திற்கு ஒருமுறை இப்பதிவேட்டில் பதிக்கப்பட்ட திருமணங்கள் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு முறையாகப் பதிவு செய்யப்படுகிறது. இத்திருமணச் சான்றிதழை வாங்க விரும்புபவர்கள் மனு செய்து கட்டணமாக நாலணாவும் அளித்தால் அவர்களுக்குச் சான்றிதழும் வழங்கப்படும்.

மற்றபடி ஒருவனுக்கு ஒருத்தி எனும்பண்பாடே கிறித்துவத் திருமணச் சட்டத்திலும் பின்பற்றப்படுகிறது. விவாகரத்துச் செய்திகளும் இந்து, பார்ஸிச் சட்டங்களைப்போன்று பொது வானதே.

-டி. ஆர். ரமேஷ்



கடலலையில் நீராடும் சுகம்...
உலகையே வென்றிட
ஒரு புதிய குளியல் சோப்
வேவ்!
கொழிக்கும் நுரைவளம்
செழிக்கும் அற்புத நறுமணம்
ஈடிணையற்றது
வேவ்!
இன்றே உபயோகித்துப் பாருங்கள்.
WAVE
LUXURY TOILET SOAP
புதிய
வேவ்
லக்ஸரி டாய்லெட் சோப்
உடலெங்கும் நிறைந்திடும் உல்லாச நறுமணம்!

ஸ்ரீ மாதா

ரா. கணபதி

12

புலிக்குட்டிகள் வெளியே கர்ஜிக்க, அக்னிக் கோட்டையுள்ளே அன்னக்குஞ்சு சிரித்துக் கொண்டது.

அன்னையே தான் இப்படி அன்னக்குஞ்சுமாயிருந்தாள்.

அவளைத்தான் பாலா என்பது. அப்படிச் சொன்னாற்போதாது என்று பாலா த்ரிபுர ஸுந்தரி என்றும் பாலா பரமேச்வரி என்றும் பெருமை த்வனிக்கப் போற்றுவது.

லலிதா மஹாத்ரிபுரஸுந்தரியின் செல்வ மகளாகக் கூறப்படும் இவள் எப்போது எப்படி உத்பவித்தாளோ தெரியாது. இடுமென இப்போது ஒன்பது பிராயத்தினளாக நமக்குக் காட்சி கொடுக்கிறாள். என்றுமே இவள் ஒன்பது வயதினள்—''ஸதா நவ வர்ஷா'' — என்கிறார் புராணகர்த்தர். என்றும் நவமாயிருப்பது என்றால் எப்போதும் புதியதாய், அதாவது வாடாத வியன்வெளியாய் உள்ள ப்ர—நவம் (ப்ரணவம்) என்றே பொருள். ப்ரணவப்பொருளான பாலைக்கும் பிறப்பைச் சொல்வதா என்றே விட்டு விட்டாரோ?

அம்மா போலவே செக்கச் சிவந்தவள். அம்மா போலவே நாற்கரத்தினள். ஆனால் அவற்றில் அம்மாபோல் பாச — அங்குச — தநுர் — பாணம் தாங்குபவளல்ல. ஸரஸ்வதி போல ஞானமூர்த்தியாக இரு கரங்களில் மாலையும், புத்தகமும், தாங்குகிறாள். ஸகல வித்யைகளுக்கும் இவளே கருவூலம்: ''ஸர்வ வித்யா மஹாகதி'' என்கிறது புராணம். மற்ற இரு கைகளில் அபய — வரத முத்திரைகள். குழந்தையம்மா பரம கருணையோடு நமக்கு அச்சம் நீக்குகிறாள்; வேண்டும் வரம் நல்குகிறாள். அம்மாவின் அரச மேட்டிமை நெகிழ்ந்து பட்டாய்த் திகழ்கிறது இவளிடம். அம்மாவை ஸிம்ஹவாஹினியாக ஸிம்ஹாஸனேச்வரியாக த்யானிக்கவேண்டுமெனில், நம் குழந்தையம்மாவைப் பொல்லென மலர்ந்த செங்குவளைப் புஷ்பத்திடை ஜில்லென அமர்ந்தவளாய் ஸ்மரிக்க வேண்டும்.

ஸ்ரீசக்ர தேவதையரெல்லாம் இந்த ராஜகுமாரியைப் பூஜித்த போதிலும், ராணிக்கு உயிரான அவள் பக்கலை விட்டு நீங்காத மகளோ பூஜையில் பூரிக்காமல் அன்னையின் அடிப் பீடத்திலேயே ஒட்டி அமர்ந்திருக்கிறாள்.

பண்டபுத்ரர் வெளியே அறைகூவ, உள்ளே அம்பிகைபுத்ரி அரைச் சிரிப்புச் சிரித்துக் கொண்டாள்.

மறுவிநாடி ஹம்ஸக் குஞ்சு ஸிம்ஹக் குட்டியாயிற்று. குதித்தெழுந்து தாயிடம் கூறினாள் பாலை: ''அம்மா! பண்டபுத்ரர் போருக்கு அழைக்கிறார்கள். குழந்தைக்கு விளையாட்டுப் பிடிக்குமல்லவா! இப்போது உன் குழந்தை போர் விளையாட்டுப் புரிய ஆசை கொண்டேன். அதைத் தடுக்காதே. என் தோளின் தினவைத் தீர்த்துக்கொள்ள அனுமதிப்பாய்!''

மானுட அம்மாவின் அங்கலாய்ப்புப் பாசத்துடனேயே மஹாமாதா மறுமொழி சொன்னாள். ''கண்ணே! ம்ருதுவினும் ம்ருதுவான உன் தோளுக்கா தினவு? ஒன்பது வயதுச் சிறுமி, போரில் முன்னநுபவமில்லாதவள், நீ மஹாயுத்தத்துக்கு ஏற்றவளா? என்னுடைய ஒரே ஒரு குழந்தையான உன்னைக் கணமும் பிரியச் சகியாத நான் போர் முனைக்கு உன்னை எப்படி அனுப்புவேன்?'' என்றாள். ஆதியிலிருந்து ஊழிவரை உண்டாகும் உயிர்களையெல்லாம் குழந்தையாய்க் கொண்ட ஜனனி, பாலையைத் தன் ஒரே குழந்தை என்றது அவளிடம் மட்டும் இவளுக்குள்ள அதீதக் குழைவால் தான்!

குழந்தையாகப் பாலையும் அடம் செய்தாள்.

முடிவில் அன்னை அவளை யுத்தத்திற்கு அனுப்ப உளம் கொண்டாள்.

மகளை ஆரத்தழுவித் தன் சக்தி முழுவதையும் அவளுக்கும் ஆக்கினாள். தனது கவசத்திலிருந்தே ஒரு சிறு கவசத்தை ஸ்ருஷ்டித்து அதை இளங்கொடியின் இன்னுடலில் பூட்டினாள். போரில் அபய — வரதத்தையும், ஏட்டுச் சுவடியையும், அக்ஷமாலையையும் வைத்துக் கொண்டு என்ன செய்வது? எனவே தனது தநுர் — பாண — பாச — அங்குசங்களிலிருந்து அதே போன்ற ஆயுதங்களைப் படைத்து அருமைப் பெண்ணுக்குக்கொடுத்தாள். தன்னிலிருந்தே உண்டான தனயைக்குத் தன் கவசத்திலிருந்து உண்டான கவசம், ஆயுதங்களிலிருந்து உண்டான ஆயுதம்! ஆனாலும் அந்தச் செல்வ மகளுக்கு கூடத் தனது ஸ்ரீசக்ரத்திலிருந்து அதன் குழந்தையை உண்டாக்கித் தர சக்ரவர்த்தினிக்கு மனமில்லை போலும்! அதனால் தன்னுடைய சக்ரராஜ ரதத்திலிருந்து அதன் 'மினி'யைப் படைத்துப் பெண்ணுக்குத் தராமல், கரும்பு வில்லின் தண்டத்திலிருந்து ஒரு ரதத்தை ஸ்ருஷ்டித்து பாலாவுக்குக் கொடுத்தாள். பரமஹம்ஸையான ஞானக் குமரிக்கேற்றதாக அன்னங்கள் பூட்டிய அழகு ரதம், பல்லக்குப் போன்ற வடிவழகு கொண்டதால் அது ''கர்ணீ ரதம்'' எனப் பெயர் பெற்றது.

ராஜகுமாரி ரதமீதமர்ந்தபோது கந்தர்வ கின்னரர் மங்கள கானம் பாடினர். ஆவரண தேவதையர் யாவரும் வாழ்த்தினர்; சிலர் வணங்கவும் செய்தனர்.

ஏற்கெனவே சிறிய தேவி கோபத்தில் தணலாய்க் கனன்று புறப்பட்டாள். விஷயம்



கேட்டு அமைச்சி ச்யாமளையும், ஸேனுநாயகி வாராஹியும் ஓடோடி வந்தனர். ''பர்த்ரு தாரிகே! (பட்டத்திளவரசி!) நாங்களிருக்க நீ யுத்தம் செய்யவா? சற்றும் எதிர்பாராத படி தேவி தனது ஜீவனேயான உன்னை எப்படி அனுப்பினுள், திரும்பிச் செல், குட்டித் தாயே! உன்னை நமஸ்கரிக்கிறேம்!'' என்று வேண்டினர்.

''அதெப்படி இவ்வேண்டுதலை ஏற்பதாம்? எதிரெதிர்த் தரப்புகளில் ஸம ஸ்தானத்தி லுள்ளவர்கள்தாமே பரஸ்பரம் மோதிக் கொள்வது வழக்கம்? பண்ட ராஜகுமா ரர்கள் சமருக்கு வந்துள்ள போது சக்தி ராஜகுமாரிக்குத் தானே பதிலடி தரத் தனி யுரிமை?' — பாலை கம்பீர மிடுக்குடன் பதில் பகராமலே மேலே சென்றுள். அப்படிப் பட்ட ஸ்தானம் அவளுக்கு மெய்யாகவே இருந்தது என்பதை உணர்ந்த மந்திரிணியும் தண்டினியும் தங்கள் படைகளோடு அவளை அணைத்துச் சூழ்ந்து அவளுடன் சென்றனர். கோட்டை வாயில் கோமகளுக்காகத் திறந் தது. அதன் வழி பாலை வெளிவந்ததும் அவளது வீர கம்பீரப் பொலிவைக்கண்டு வியந்து தடதடவென்று படைத் தலைவியர் அவள் முன் விழுந்தனர். குழந்தையம்மா அஞ்ஜலிகளை இயல்பாய் ஏற்று, அரும்புக் கையால் ஆசி பாலித்தபடிச் சென்றுள்.

அஸுரரைப் பொறுத்த மட்டில் இந்த அமுத மகளும் எதிரிதான்! எனவே அம்பு அர்ச்சனைதான் அவளுக்குச் செய்தனர். அதற்ச்திகமாகவே ஆசிசனை — அதே அம்பு உருவில் தான் பாலையும் அவுணர் மீது பொழிந்து தள்ளினுள். ஆம், ஆசிதான். இவளால் உயிரிழந்தவர் உயர் முக்தியே பெறுவரன்றே?

அவளது அற்புத ஸாஹஸங்களைப் பரிவார கணங்கள் கணத்திற்குக் கணம் லலிதை யிடம் ஓடி, ''ரிலே'' செய்தன. ச்யாமளை யும், வாராஹியுமோ தாங்கள் போரே செய்வதற்கில்லாமல் பர்த்ருதாரிகை புரியும் சத்ரு ஸம்ஹாரத்தை வியந்து ரஸித்துக் கொண்டிருந்தனர்.

ஒரு பாலைதானு, அல்லது பண்டபுத்ரர் முப்பது பேரில் ஒவ்வொருவருக்கும் ஒரு பாலையாக முப்பது பாலைகளா எனுமாறு அங்கும் இங்கும் எங்கும் சுற்றிச் சுழன்று ''விளையாட்டு'' புரிந்தாள் குழந்தைத்தேவி. ''பாலா லீலா விநோதினீ.'' என ஸஹஸ்ர நாமம் சொல்வதில் அழிப்பு லீலை இரண் டாம் நாள் போர் முழுவதும் அவளின் தனிக் குத்தகை ஆயிற்று.

விளையாட்டை முடிக்க மனம் கொண் டாள்.

மாமனுக்குப் பெருமை கூட்ட எண்ணி ளுள் போலும்! நாராயணுஸ்திரத்தை விசி ளுள். பண்ட புத்ரருடன் வந்த இருபது அக்ஷௌஹிணியும் அந்த க்ஷணமே சாம்பற் குவியலாயிற்று. வெருண்ட பண்டபுத்ரர் முப்பது பேரும் ஏக காலத்தில் குழந்தைத் தேவியைச் சுற்றிக் கொண்டு தாக்க, அவளும் ஒரே வீச்சில் முப்பது சணைகளைத் தொடுத்தாள். அவை கண் இமைக்கும் நேரத்தில் முப்பது சிரங்களையும் துணித்து விட்டன. இத்தனை எளிதாய் — பாப்பாவின் சொப்பு உடைப்பு விளையாட்டாய் — முடிந்து விட்டது மாபெரும் வீரதீர காரியம்!

ஜயகோஷமே தூக்கிக் கொண்டு வந்தாற் போல் தன் முன் வெற்றித்திரு விளங்கத் திரும்பி வந்து நிற்கும் திவ்ய குமாரியை அள்ளி எடுத்து மடி சார்த்திச் சிரம் மோந்து கொஞ்சிக் கொண்டாடினுள் ஸ்ரீமாதா.

அதோடு என்ன? மகள் மாதாவுக்குள் ளேயே கரைந்து ஐக்யமாகி விட்டாளா? அப்படித்தான் போலும். பண்டபுத்ரரின் யுத்த கோஷத்துக்கு முன் பாலையைப்பற்றி லலிதோபாக்யானத்தில் எந்தக் குறிப்பும் இல்லாதது போலவே அவள் வெற்றிகண்டு அன்னையிடம் திரும்பிய பின்னரும் அவளைப் பற்றிப் பிரஸ்தாவம் இல்லை. ஆதி அந்தம் அற்றதாக உள்ளது அவளது அற்புத சரிதம்.

• • • •

அங்கே தன் குலமே குலைந்ததே என்று ஆகுலத்தோடு அலறினுன் பண்டாஸுரன். ''சதுர்பாஹு! சகோராக்ஷா! சதுச்சிரா வஜ்ரகோஷா!... ஸிம்ஹகோஷா!... கண் டலா! சண்டவர்மா!... பூர்வமாரா!'' என் றெல்லாம் ஒவ்வொரு பிள்ளையையும் விளித்து, ''ஸ்வர்க்க சத்ரு!... அதிமாயா! உபமாயா! தனியொருத்தியான மாயாச் சிறுக்கி உங்கள் முப்பது பேரில் ஒருவரைக் கூட எனக்காக விட்டு வைக்கவில்லையா? அந்தகா! யமாந்தகா! நீங்களிருவரும் கூட அந்தகனிடம் சென்று விட்டீர்களா? இதோடு நானும் நாசமானேன்'' என்று கதறி ஆஸ னத்திலிருந்து சாய்ந்தான் அஸுர ராஜன்.



Our latest introductions:

BKR "SANDAL SUPER & SUPRADEEP"

Incense sticks

உங்களுக்காகவே



அழகு மிளிரும் அடர்த்தியான கூந்தலுக்கு

குண

கூந்தல் தைலம்

தலை மயிர் உதிர்தல், செம்பட்டை நிறம்.
பருவத்திற்கு முன்பு ஏற்படும் பித்த நரைகள் மாறும்.
தினசரி தலைக்குத் தடவி வந்தால் தலை மயிர்
நீண்டு கறுத்து அடர்த்தியாய் வளரும். தலை அரிப்பு
பொடுகு. மண்டையில் சொறிந்தால் செதில் உரிதல்
குணமாகும். பெண்கள் ஆண்கள் அனைவரும்
விரும்பி உபயோகிக்கின்றனர்
1 பாட்டில் விலை ரூ 16-25 V.P.P. உண்டு
தபால் செலவு இல்லை.

தேவைக்கு எழுதவும் **நவசக்தி வைத்தியசாலை**
தபால் பெட்டி எண் 7 சேலம் 636 001

எமது தைலம் கிடைக்குமிடங்கள்: 1. சேலம்— ரோக மெடிக்கல்ஸ். 2. ஆத்தூர்— முத்து மெடிக்கல்ஸ், 3. நாமக்கல்— கஸ்தூரிபா மெடிக்கல்ஸ். 4. ராசிபுரம்— ராசி மெடிக்கல் ஸ்டோர்ஸ், 5. மேட்டூர்— ஜெயலஷ்மி மெடிக்கல்ஸ், 6. திருச்செங்கோடு— சீனிவாசா மெடிக்கல்ஸ், 7. தர்மபுரி— விஜயலஷ்மி மெடிக்கல்ஸ் 8. கிருஷ்ணகிரி— கோபாலகிருஷ்ணா மெடிக்கல்ஸ் 9. ஒசூர்— மூர்த்தி மெடிக்கல்ஸ் 10. பெங்களூர்— பிரசாத் ஸ்டோர்ஸ் K.G. சர்கிள். 11. சென்னை-3— ஹேமா மெடிக்கல்ஸ். 12. அமிஞ்சிகரை— வேலவன் மெடிக்கல்ஸ் 13. குடியாத்தம்— திருமகள் மெடிக்கல்ஸ். 14. காஞ்சிபுரம்— லஷ்மி மெடிக்கல்ஸ். 15. அரக்கோணம்— அகிலாம்பிகை மெடிக்கல்ஸ். 16. ஆரணி— பாக்கியம் அண்ட் கோ., மருந்துகடை. 17. திருவண்ணாமலை— அன்னை மெடிக்கல்ஸ். 18. வேலூர் (NA)— பாரத் மெடிக்கல்ஸ். 19. திருப்பத்தூர் (NA)— லஷ்மி மெடிக்கல்ஸ் 20. விழுப்புரம்— அன்பு மெடிக்கல்ஸ் 21 கள்ளக்குறிச்சி— A. ராஜீ நாட்டு மருந்துக்கடை. 22. கும்பகோணம்— செல்வம் மெடிக்கல்ஸ். 23. தஞ்சாவூர்— சிட்டி மெடிக்கல்ஸ். 24. திருச்சி— சண்முகா மெடிக்கல் ஹால் 25. திண்டுக்கல் தமிழ்நாடு சித்த மருந்துக்கடை 26. பெரியகுளம்— N. லஷ்மணன் மருந்துக்கடை. 27. தேனி— ஆண்டாள் மெடிக்கல்ஸ்— 28. மதுரை— குமார் மெடிக்கல்ஸ். 29. மதுரை— ஸ்டேட் மெடிக்கல் கார்பரேசன் (24 மணி நேர கடை). 30. ராமநாதபுரம்— பாத்மா மெடிக்கல்ஸ். 31. காரைக்குடி— மலேசியா ஜெனரல் ஸ்டோர்ஸ். 32. விருதுநகர்— S.S.K. மெடிக்கல்ஸ். 33 தூத்துக்குடி— அன்பு மெடிக்கல்ஸ். 34. திருநெல்வேலி— கோமதி மெடிக்கல்ஸ். 35. பாளையங்கோட்டை— ஒலிவா இந்தியன் மெடிக்கல்ஸ் 36. நாகர்கோவில்— S. நல்ல பெருமாள் மருந்துக்கடை. 37. தென்காசி— M.R. மெடிக்கல்ஸ். 38. ராஜபாளையம்— அரவிந்த் மெடிக்கல்ஸ். 39. சிவகாசி— சிவகாசி மெடிக்கல்ஸ். 40. கோவில்பட்டி— சாந்தி மெடிக்கல்ஸ்— 41. ஸ்ரீ வில்லிபுத்தூர்— பாலாஜி மெடிக்கல்ஸ். 42. உடுமலை— ஜாம் ஜாம் மெடிக்கல்ஸ் 43. பொள்ளாச்சி— ராமநாதன் மெடிக்கல்ஸ் 44. கோவை— காசிநாத் அண்ட் கோ., 45. கோவை— திருமலை மெடிக்கல்ஸ் காந்திபுரம் 46. திருப்பூர்— கீதா மெடிக்கல்ஸ். 47. அவினாசி— அவினாசி மெடிக்கல்ஸ் 48. கோபி— வாணி பார்மஸி 49. ஈரோடு— ஸ்ரீ ராகவேந்திரசாமி மெடிக்கல்ஸ் 50. திருச்சி ஜங்— சுபாஸ்ரீ மெடிக்கல்ஸ் 51. புதுக்கோட்டை— மீனு பார்மஸி 52. திருவாரூர்— அன்னபூர்ணா மெடிக்கல்ஸ் 53. மாயவரம்— ஸ்வாமி மெடிக்கல்ஸ் 54. சிதம்பரம்— ராஜா மெடிக்கல்ஸ் 55. விருத்தாசலம்— ஜெயா பார்மஸி 56. சேலம் செவ்வாய்பேட்டை— பிரபாத் மெடிக்கல்ஸ் 57. தொட்டியம்— மீனாஷி மெடிக்கல்ஸ் 58. கிருஷ்ணகிரி - பி. கே. பி. எம். ஜி. மெடிக்கல்ஸ் 59. கரூர் - அண்ணாமலை மெடிக்கல்ஸ். 60. நாமக்கல்— சரஸ்வதி மெடிக்கல் ஹால். 61. காரைக்குடி— சரோஜா டிரக்ஸ் ஸ்டோர்ஸ். 62. பாண்டிச்சேரி— ராஜா மெடிக்கல்ஸ்.

எமது இதர சித்த ஆயுர்வேத தயாரிப்புகளான நவரத்ன கல்பலேகியம், சில்வர் பில்ஸ், வாயுக்கூர், குணா மலசுத்தி சூரணம், நெல்லிக்காய் லேகியம் etc. எமது ஸ்டாக்கிஸ்ட்டுகளிடம் மற்றும் எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்.

அவனை ஆச்வாஸப் படுத்தினர் விகக்ரனும் விஷங்கனும். "வீர புருஷர்கள் இப்படிப் பிரலாபிக்கலாமா? போரில் மரிப்பது பெரும் பேறல்லவா? ஆயினும் பெண்ணொருத்தியால் மரணம் வந்த அவமானத்திற்கு வேண்டுமாயின் துக்கிப்போம்!" என்று அவர்கள் கூறும்போதே பண்டனின் துக்கம் விலகிற்று. அந்தப் "பெண்"ணைப் பழி தீர்க்கும் சீற்றம் ஊற்றெடுத்தது.

உருவிய வாளுடன் புறப்பட்டான் உடனே! உடன் பிறந்தானைத் தம்பியர் தடுத்துத் தணித்து நிறுத்தினர். "நாங்கள் இருக்கத் தாங்கள் யுத்தம் புகுவதாவது?" என்று கூறி, தோல்வியிலும் வர்மத்திலும் பிறந்த புதிய ரோஷத்துடன் விகக்ர–விஷங்கர்கள் கிளம்பினர்.

பண்டன் யோசித்தான். தம்பியரை அழைத்து, "வாளும், வேலும் கொண்டு எதிரியை வெற்றி காண முடியும் எனத் தோன்றவில்லை. மாய மந்திரச் சூதுதான் செய்தாக வேண்டும். பேத உபாயத்தால் எதிர்த்தரப்புத் தனக்குள்ளேயே ஒற்றுமை குலையச் செய்வது தான் வழி. எனவே, விகக்ரா! நீ எப்படியேனும் மறைவாகச் சென்று சத்ருவின் கடகத்தில் (படைவீட்டில்) இடையூறுகளை உண்டாக்கும் விக்ன யந்த்ரத்தை நாட்டி விட்டு வா" என்றான்.

அண்ணன் ஆணையை உச்சிமேல்கொண்டு விக்ன யந்த்ரம் உருவாக்கினான் விகக்ரன். சோம்பல், பலவீனம், கையறுநிலை, உறக்கம், தயக்கம், மயக்கம், பேடித்தனம், முனைப்பின்மை ஆகியவற்றின் அதிதேவதையரான அலஸா, க்ருபணு, தீனா, நித்ரா, தந்த்ரா ப்ரமீலிகா, க்லீபா, நிரஹங்காரா என்ற எண்மரை யந்த்ரத்தில் ஆவாஹனம் செய்து, அதன் நடுவே ஸம்ஹார அஸ்த்ரத்தையும் எட்டுத் திசைகளில் சூலக் குறியையும் பொறித்தான். மந்த்ர ஜபத்தால் அதை வீர்யமுள்ளதாக்கி, அதற்கு மிருக பலிகள் ஏராளமாகத் தந்தான்.

இரவரசியின் இறுகிய அணைப்பில் கதிரவன் மறைய, அவளது உட்பிரவேசத்தால் கருமைக் கடலிலிருந்து எழும்பிச் சிதறிய திவலைகள் போல் தாரகைக் குவியல்கள் உதித்தன. அந்த நிழல் மூட்டத்தில் மாயா ரதமேறி மறைந்து சென்றான் விகக்ரன். அக்னிக் கோட்டையை நோக்கி, ஹயக்ரீவனும், ஸ்தம்பினியும் உஷாராய் காவலிருக்கும் கோட்டையுள் பிரவேசித்து விக்னயந்த்ரத்தை ப்ரதிஷ்டை செய்வது நடக்காத காரியம் எனக் கண்டான். வெகுநேரம் யோசித்தபின் வெளியிலிருந்தே விசையுடன் யந்த்ர சிலா பட்டத்தை வீசி உள்ளே எறிந்தான். அது வானை முட்டும் வன்ஹி ப்ராகாரத்தைத் தாண்டி அம்பாளின் சிபிர (கூடார)த்தருகே பூமிக்குள் ஆழப்பதிந்து புதைந்தது.

இந்த நம் காவியம் உருவாக வேண்டுமென்று பராசக்தி தன் சக்தியை ஒளித்து லீலை செய்தாள்! எனவே அவளது ஸந்நிதியிலேயே விக்ன யந்த்ரத்தின் சக்தி வேலை செய்யத் தொடங்கியது. அவளை உயிருக்குயிராய் நேசித்து, அவள் இட்ட பணியை இட்டமுடன் செய்து வந்த சக்தி சேனைகளின் புத்தியில் சோம்பல், பலவீனம் முதலான அந்த எட்டு அவகுணங்களும் குடி புகுந்தன. சூலக்குறியும், ஸம்ஹார அஸ்த்ரமும் இந்தச் சோர்வு நிலையிலேயே அவர்களுக்கு அடங்காமையையும், விரோத உணர்வையும் ஊட்டி விட்டன. மாபெரும் சக்தி சேனை முழுவதையும் பிடித்த இந்த துராவேசத்துக்குத் தப்பியவர்கள் மந்திரிணி, தண்டநாதை ஆகிய இருவர் மட்டுமே.

அவ்வளவுதான்! சக்திகளுக்குப் போர் "போர்" அடித்து விட்டது! ஆயுதங்களை அப்பால் எறிந்தனர். "போதும், போதும் மோதலும், நோதலும். யஜமானி என்று சொல்லிக் கொண்டு எவளோ ஒருத்தியும், அவளுடைய கையாட்களாயுள்ள அமைச்சியும், படைத் தலைவியும் கொண்டாட்டம் போடுவதற்காக நமக்கேன் இந்தத் திண்டாட்டம்? ஆம், வெற்றியடைந்து தான் நமக்கு என்ன லாபம்? தோல்வி கண்டால் தான் நமக்கென்ன நஷ்டம்? என்றைக்கும் நமக்கென்னவோ அடிமைப் பிழைப்புத்தான் மிஞ்சப் போகிறது. எனவே அடி, உதை, படாமல் அஸுரருக்கேதான் அடிமைப்பட்டு விடுவோமே! ஒத்துழையாமைக்காக இந்த "மஹா"ராக்ஞீ நம்மை ஒன்றும் சிக்ஷித்து விட முடியாது. ஏனென்றால் நம்மால்தான் அவள் ராக்ஞியாய் அதிகாரம் செலுத்துவது. நம் ஆற்றலே அவளுக்குச் சக்தி. நாம் பிரிந்தால் ராணிக்குத் திராணியேதுவும் இராது" என்றெல்லாம் விபரீத மார்க்ஸிஸம் பேசினார்கள். உடனேயே விநோத காந்தீயமும் பேசலாயினர். "அஸுரர்களும் உயிர்கள் தாமே! அவர்களோடு போர் செய்து நாம் ஏன் ஜீவ ஹிம்ஸை செய்யவேண்டும்?" என்றனர். இப்படிச் சொல்லிக் கொண்டேயிருக்கையில், உறக்க, மயக்க, தயக்க சக்திகள் அவர்களுள் ஊறின. "வீரம் என்று சொல்லிக் கொண்டு எதற்காக ஓடி அலைந்து, முட்டி மோதி, அலட்டிக் கொள்ளவேண்டும்? ஆஹா, நித்திரையில் உள்ள சௌக்கியம் எதில் உண்டு?" என்றவாறு சக்தி சேனைகள் அசக்தி சேனைகளாகிக் கொட்டாவி விட்டன! கண்கள் சொருக, அப்படியப்படியே நீளநெடுகப் படுத்துவிட்டன.

விகக்ரன் தான் எத்தனை ஸாமர்த்தியமாய் விக்ன யந்த்ரம் செய்து விட்டான்? பேத உபாயம் என்று பண்டன் சொன்னதற்காக லலிதையை அவளது சேனைகளே எதிர்த்துத் தாக்கச் செய்யாமல் அவற்றைத் தூங்க வைத்தேயல்லவா இடையூற்றை உண்டாக்கி விட்டான்!

விக்னத்தை அம்பாள் எப்படித் தகர்க்கப் போகிறாள்? விக்னம் நீக்கும் காரியத்துக்கே ஏற்பட்ட விக்நேச்வரனை–?

அந்த அற்புதத்தை அடுத்த அத்தியாயத்தில் தெரிந்து கொள்ளலாம். (தொடரும்)

திருமண மலர்

மணமகள் தேவை

Alliance invited from fair beautiful educated domesticaly trained Mudaliar/ Pillai brides for handsome 5' 5'' B. Com. LLB Mudaliar groom 30, Govt. employed. Bangalore decent family. No dowry. simple wedding reply with photograh, full details to Box No: 1603.

Alliance from preferably employed, fair, tall, Brahmin girls for Ashtasahasram. Pharmacy graduate 183 cms, 26, Rs. 2000 per month. Employed in multinational company. Apply full details and horoscope to Box No: 1604.

ஸௌராஷ்ட்ரா உபமன்யு கோத்திரம் எல். ஐ. சி ஆபீஸர், எம். ஏ., வயது 40 எந்த விதமான கெட்ட பழக்கமும் கிடையாது. 21 வயதிற்கு மேற்பட்ட குறைந்தபட்சம் எஸ். எஸ். எல். சி. முதல் வகுப்பில் தேறிய தரமான எந்த ஸௌராஷ்ட்ரா பெண்ணும் நண்பர் உறவினர் மூலமாக அணுகலாம். பெட்டி எண்: 1605.

மகாராஷ்டிராவில் ரூ. 2000 சம்பாதிக்கும் இந்து நாடார் மணமகனுக்கு (வயது 28) இதே இனத்தில் சிவப்பாக, அழகாக குடும்பப் பாங்கான பெண் தேவை (வயது 18–21க்குள்.) போட்டோ, ஜாதகம், குடும்ப விபரத்துடன் அனுப்பவும். பெட்டி எண்: 1606.

கௌண்டின்ய கோத்திரம், வடமாள் வயது 28, மகம் நட்சத்திரம், காது கேளாத, பேச முடியாத பெரிய கம்பெனியில் நிரந்தர வேலையிலுள்ள மாதம் ரூ. 1500 சம்பளமுள்ள பையனுக்கு குடும்பப் பாங்கான அனுசரித்துப் போகக் கூடிய 24 வயதிற்குள் உள்ள பெண் தேவை. ஜாதகம், நட்சத்திரம், போட்டோவுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 1607.

தனியார் துறையில் ரூபாய் 900. சம்பாதிக்கும், 30 வயது, (குடும்ப தொந்தரவற்ற) வன்னியகுல க்ஷத்திரிய வாலிபருக்கு அதே வகுப்பைச் சார்ந்த பணிபுரியும் (அ) பணிபுரியாத மணமகள் தேவை.. குடும்ப விவரம் – ஜாதகம் – போட்டோவுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 1608

For Palghat Iyer boy, 29, 163 cms, fair, M.Com., CAIIB-I Bank employed, owning accomodation, Haritha Gothram, Uthirattathi, slight limp due to Polio, only son. Reply with Horoscope working girl preferred. Box No: 1609.

Wanted Non-Sandilya Gothram Bride preferably employed for Palghat Brahmin boy age 30, employed in private sector in Calcutta drawing salary of Rs. 1000/-. Apply with Horoscope and details Box No: 1610.

Aliance invited from employed girls for Vadama Bharadwaja smartha boy 31, S. S. L. C. employed in Dhanalakshmi Bank Madras. Salary Rs. 850/- plus perks subsects no bar reply with Horoscope Box No: 1611.

அய்யங்கார், பாரத்வாஜம், ஸ்வாதி, 34 வயது அழகான 5' 9'' இடதுகை ஸ்வாதீனமற்ற (போலியோ) உயர் பட்டதாரி, சொந்த கம்பெனி மாதம் ரூ. 3000க்குமேல் வருமானமுள்ள பையனுக்கு லட்சணமான மனப்பக்குவமுள்ள உடல் ஊனம் இல்லாத, குறைந்தது பி. யு. சி. படித்த மணமகள் தேவை. ஜாதகமும் விவரங்களும் அனுப்பவும். பெட்டி எண்: 1612.

பம்பாயில் தனியார் நிறுவனத்தில் நல்ல உத்தியோகத்தில் உள்ள ரூபாய் 1500. சம்பளம் பெறும் 27 வயது சைவ வேளாளர் மணமகனுக்கு, படித்த, உத்தியோகத்தில் உள்ள சைவ முதலியார் பிள்ளை சைவ வேளாள மணமகள் தேவை. போட்டோவுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி பெட்டி எண்: 1613.

திருமண மலர்ப்பகுதியில் விளம்பரம் செய்ய கட்டணம் ரூ. 30/- தொகையை 'மங்கையர் மலர்' என்ற பெயருக்கு போஸ்டல் ஆர்டராக மட்டுமே அனுப்பவேண்டும். ஒரு விளம்பரத்தில் ஒருவருக்கு 30 வார்த்தைகளுக்குள் விவரங்கள் தரவேண்டும். பதில் அனுப்புபவர்கள் ''விளம்பரதாரர், பெட்டி எண்.... c/o. மங்கையர் மலர், கிண்டி, சென்னை-600 032 என்ற விலாசத்துக்கு அனுப்பவும். தனிப்பட்ட கடிதப் போக்குவரத்து கிடையாது.

Karkatha Vellala fair, Modest, domestically well-trained 'Bride' for S. S. L. C. Boy (30) Madras employed (Rs. 1250 p. m.) Correspond with full details, Horoscope and Photo (Returnable) Box No: 1614.

அகவடி, தமிழ் ஐயர், 28 வயது மாடல் கோத்திரம், சென்னையில் மத்திய அரசு வேலையில் ரூபாய் 1200. சம்பளம் பெறும் பையனுக்கு நல்ல வேலையிலுள்ள மணமகள் தேவை. ஜாதகம் போட்டோவுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 1615.

Alliance invited from employed girls around 26 for . Iyer Boy (Diploma in Civil Engineering.) working as Junior Engineer has Slight Hearing Impediment Haritha Gothram Uthiram Box No: 1616.

Non-Athreya, Srivatsa, Govt./Bank Employed, Homeloving Bride, (Transferable) around 30, for Brahacharanam, Pooratathi, 37/155/1000, (B. Com), Govt. Service. Tanjore wellplaced. Sub-sect considered. Horoscope with Photo to Box No: 1617.

43 வயது ஐயர் அஷ்டசஹஸ்ரம், ஹரித கோத்திரம், முதல் தாரத்தை இழந்தவர். 11 வயது பெண் குழந்தை உள்ளது. அரசாங்க வேலை; மாதம் ரூபாய் 1100 சம்பளம். மணமகள் 35 வயதிற்கு மேற்பட்டுச் சென்னையில் வேலையில் இருத்தல் வேண்டும். உட்பிரிவுகள் பாதகமில்லை பெட்டி எண்: 1618.

Wanted Non-Athreya Smartha Bride, fair, tall, Graduate, Government/Bank employed with well settled broad minded parents forboy28-175faif Graduare,employed. at Saudi. Shathayam. Horoscope optional Box No: 1619.

அஷ்ட சஹஸ்ரம், காச்யப கோத்திரம், அஸ்தம், வயது 29, பி. ஏ. Simpson, Bangalore மாதம் வருமானம் ரூபாய் 1100. உள்ள பையனுக்கு அரசாங்கம் அல்லது வங்கியில் வேலை பார்க்கும் பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். சென்னைக்கு மாற்றல் ஆகலாம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். வரதட்சிணை இல்லை. உயரம் 5' 4''. பெட்டி எண் 1620.

திருநெல்வேலி இந்து நாடார் வகுப்பைச் சேர்ந்த பையன். சிவப்பு நிறம். உயரம் 5'5'' வயது 27. பட்டதாரி. தொழில் சொந்தவியாபாரம், வீட்டு நிர்வாகமும் குடும்பக்கலையும் தெரிந்த அதே இனத்தைச் சேர்ந்த நல்ல முகலட்சணமும் அழகுமுள்ள வேலையில்லாத குடும்பப் பாசமுள்ள பெண் தேவை. ஒருவேளை பெண் வேலையில் இருந்தாலும் தடையில்லை. பெண் திருநெல்வேலி மாவட்டத்தையோ அதன் அருகிலோ உள்ளவராக இருந்தால் நலம். வரதட்சிணை வேண்டாம். குடும்ப விவரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும். எளிய முறையில் திருமணம் நடத்தப்படும். பெட்டி எண்: 1621.

சொந்தமாகத் தொழில் செய்யும் 30 வயதுள்ள கல்யாணமாகாத அழகான வடமாள் பையனுக்கு, தொழிலில் முதலீடு செய்யக் கூடிய அழகான ஸ்மார்த்த பெண் தேவை. விவாகரத்து – விதவை பரவாயில்லை. விபரங்களுக்கு பெட்டி எண்: 1622

சைவ வெள்ளாளர் சோழியர் வகுப்பைச் சேர்ந்த 29 வயதுடைய கல்லூரியில் விரிவுரையாளராகப் பணிசெய்யும் மணமகனுக்கு ஏற்ற மணமகள் தேவை. வீடு, நிலம் உள்ளது சம்பளம் ரூ. 1500. ஜாதகம் மற்றும் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 1623.

அரசுப் போக்குவரத்துக் கழகத்தில், பொறியியற்துறையில், எல். எல். எல். ஈ. மற்றும் ஐ. டி. ஐ. படித்து மெக்கானிக் ஆக, இருப்பில் ரூபாய் 950. சம்பளம் பெறும், நற்குணமும் உள்ள 36 வயது, கேட்டை நட்சத்திரம், சோழிய வெள்ளாளர் வரனுக்கு, ஆசிரியர், மற்றும், மத்திய, மாநில அரசில் நிரந்தரமாகப் பணிபுரியும் நற்பண்புள்ள, அழகும் எளிமையான மணப் பெண் தேவை, எளிமையான திருமணம். ஜாதகம் அனுப்பவும். பெட்டி எண்: 1624.

எம். ஏ. பட்டம் பெற்று மாதம் ரூபாய் 1500. சம்பாதிக்கும் 30 வயது நிரம்பிய தனிமையில் வாழும் கிறிஸ்துவ இளைஞனுக்கு வேலையில்லாத, குடும்பப் பாங்கான, பாசமுள்ள துணைவி தேவை. சாதி, மதம், விதவைகள் தடையில்லை. பிறந்த நாள் அல்லது ஜாதகம் அனுப்பவும். பெட்டி எண்: 1625.

சௌராஷ்டிர குலம், எஞ்சினியர், பி.ஈ.,(மெக்) 28, 164 செ மீ., அரசு பணி, ரூபாய் 2400. சம்பளம் பாரத்வாஜ கோத்திரம், அதே குலத்தைச் சேர்ந்த அழகும். குணமும் உள்ள பட்டதாரி – படித்துக் கொண்டிருக்கும் மணமகள் தேவை. வரதட்சிணை தேவையில்லை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 1626.

ஐயர், வடமாள், பட்டதாரி, வயது 40, நல்ல சிகப்பு, எடுப்பான தோற்றம், உயரம் 5' 5'', தாரமிழந்தவர், தாய் தந்தை இல்லை, சொந்த வியாபாரத்தில் மாத வருமானம் ரூபாய் 1500. சொத்துக்களின் மதிப்பு ரூபாய் 5 லட்சம். சொந்த வீடு, சிறிய குடும்பம், மூன்று குழந்தைகள், யாவும் 8 வயதுக்கு மேல் உள்ளவருக்கு. தகுந்த துணை தேவை. பிராமண, மிக அழகான விதவைகள் 40 வயதுக்குள் வரதட்சிணைக் கொடுமையால் கல்யாணமாகாத பெண்கள், தேவை. மனப்பொருத்தம் மட்டும். வரதட்சிணை இல்லை. பெட்டி எண்: 1627.

தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கின்ற 7 வயதில் ஆண் குழந்தை உள்ள தென்கலை அய்யங்கார் 30 வயது பையனுக்கு அரசாங்க உத்தியோகத்தில் உள்ள மணமகள் தேவை. சம்பளம் ரூபாய் 750. நட்சத்திரம் பரணி, ஸ்ரீவத்ஸ கோத்திரம். பெட்டி எண்: 1628.

படையாச்சி வயது 29, உயரம் 5' 6'' உத்திராடம் பட்டதாரி சம்பளம் ரூ. 1050 மத்திய அரசுத் துறையில் ஸ்டெனோகிராபர் மணமகனுக்கு அதே வகுப்பைச் சார்ந்த மத்திய, மாநில அரசுத் துறை, வங்கியில் பணிபுரியும் எளிமையான மணமகள் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்:1629.

சோழிய வேளாளர், வயது 32, சிகப்புநிறம், 162 செ. மீ., வருவாய்த் துறையில் ஆய்வாளராக ரூ. 900. சம்பளத்தில் நிரந்தரமாகவுள்ள பட்டதாரிக்கு அதே ஜாதியில் பேங்க், கல்வி நிறுவனங்கள், அரசுப் பணியில் நிரந்தரமாகவுள்ள 27 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை. விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்:1630

கோவை சிந்துஜா — போலியோ வந்ததால் நடக்க இயலாத 34 வயது வியாபாரம், சொத்து வசதியுள்ள இந்து தெலுங்கு, க்ஷத்திரிய பையனுக்கு பண்பு, சேவை மனப்பான்மையுள்ள, அழகான, ஆங்கிலம் சரளமாகப் பேச எழுத அறிவுள்ள இந்து கன்னிப் பெண் தேவை. போட்டோ பார்த்துத் தான் ஒரு முடிவுக்கு வர முடியும். போட்டோ திரும்ப அனுப்பப்படும். ஆதரவு, வசதி அற்றவர்களும் முகவரி, ஜாதகம் போட்டோவுடன் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 1631.

தமிழ்நாடு அரசு மேல்நிலைப் பள்ளியிலுள்ள தெலுங்கு வெல்லநாடு பிராமணர் சாண்டில்ய கோத்திரம் M.A. M. Ed. P.G.C.T.E., 30, — 168 செ. மீ. ரூபாய் 1231. முதுகலைப்பட்டதாரி ஆசிரியருக்கு படித்த — வேலையிலுள்ள தெலுங்கு பிராமண மணமகள் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண்: 1632.

பணக்கார பாரம்பரிய டாக்டர்ஸ் குடும்பம் பி. எஸ்.சி., எம். பி. பி. எஸ்., எம். ஆர். எஸ். ஹெச். (லண்டன்) 32 வயது உயரம் 175 செ.மீ. பாடி 130 செ. மீ. பருமன் 75 கிலோ, சிவப்பு நிறம், வெள்ளாளர் பிள்ளை தமிழ் டாக்டர் வரனுக்கு மணமகள் மதராஸ் சிட்டியில் வசிக்கும் 160 செ. மீ. உயரமும், நல்ல சிவப்பு நிறமும் 30 வயதிற்குள்ளும், திடகாத்திரமுள்ள பீ.ஜி.லேடி டாக்டர் தேவை. லேடி டாக்டரின் ஜாதிமதம் விரும்பாத பெற்றோர் முதல் கடிதத்திலேயே பெண்ணின் புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 1633.

அரபு நாட்டில் மஸ்கட்டில் சொந்தமாக கார்பெண்டர் கடை வைத்து இருக்கும் வயது 34. மாப்பிள்ளைக்கு பெண் தேவை. சாதி வன்னியர் க்ஷத்திரிய நாயக்கர் மாத வருமானம் 6000 ரூபாய். பெண் நல்ல அழகுடன் இருக்க வேண்டும். படித்து இருக்க வேண்டும். விதவையாக இருந்தாலும் சம்மதம். தென் மாவட்டங்களை சேர்ந்தவர்கள் தெரியப்படுத்தவும். பெண் வேலையில் இருக்கக் கூடாது. விலாசம்: Neelakantan Post Box 24642 Sumail Post Sultanate of Oman.

மணமகன் தேவை

சௌராஷ்ட்ரா வகுப்பைச் சேர்ந்த ரூ. 1170. சம்பளத்தில் ரிசர்வ் பாங்கில் பணிபுரியும் பி. காம். 21 வயது, அழகான பெண்ணிற்கு, 27 வயதுக்குட்பட்ட நல்ல உத்தியோகத்திலிருக்கும் சௌராஷ்டிர மணமகன் தேவை. போட்டோ, ஜாதகம், விவரங்களுடன் எழுதவும். பெட்டி எண்: 1634.

ஸ்ரீவத்ஸ கோத்திரம் வடகலை ஐயங்கார், கேட்டை நட்சத்திரம், பி. யூ. சி. படித்த 35 வயது மாநிறமான பெண்ணிற்கு நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. உட்பிரிவுகள் பாதகம் இல்லை. பெட்டி எண்: 1635.

Vadama, Iyer girl, 21, Avittam fair, intelligent, pious, beautiful, B. Com., employed temporarily as Teacher, domestically well trained seeks permanent Govt./pvt. employed, kind, non-Koundinya boy. Simple marriage. Subsects no bar Box No: 1636.

தபால் தந்தி துறையில் டெலிபோன் ஆபரேட்டராக மாதம் ரூ. 950. சம்பளம் பெறும், 35 வயதான, பாரத்வாஜ, பிரகசரண பட்டதாரி பெண்ணுக்கு தகுந்த வரன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். நல்ல முறையில் திருமணம் செய்து கொடுக்கப்படும். ஜாதகம் மற்றும் விவரங்களை அனுப்பவும். பெட்டி எண்: 1637.

பிரகசரணம் அசுவனி நட்சத்திரம், காசியப கோத்திரம், 24 வயது எம். ஏ. படிக்கும் குடும்பப்பாங்கான, தீவிபத்தால் கழுத்து சிறிது பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு அதே பிரிவில் இரக்க சிந்தனையும், பரந்த மனப்பான்மையும் உள்ள மணமகன் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்க. பெட்டி எண்: 1638.

கிறிஸ்தவர், சோழிய வெள்ளாளர் 28 வயது, அழகான, சிகப்பான, குடும்பப்பாங்கான எஸ்.எஸ்.எல். சி. பாஸ் செய்து, டைப்-ரைட்டிங் லோயர் பாஸ் செய்துள்ள பெண்ணுக்கு; மத்திய, மாநில அரசு வங்கி ஊழியர் மணமகன் தேவை. விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 1639.

பிரஹசரணம் ஆத்ரேய கோத்திரம் பூரட்டாதி—4 35 வயது பி. யூ. சி., தமிழ்நாடு அரசில் பணிபுரியும் ரூ. 1000. வருமானமுள்ள 5' 4'' உயரமுள்ள பெண்ணிற்கு வசதியான குடும்பத்தை சேர்ந்த மணமகன் தேவை. வரதட்சிணை தர இயலாது. குழந்தையில்லாத தாரமிழந்தவரும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 1640.

சென்னை தனியார் துறையில் வேலை பார்க்கும் சௌராஷ்டிரா சமூகத்தைச் சார்ந்த 30 வயது மணமகளுக்கு அரசு பணி அல்லது சுய தொழில் புரியும் மணமகன் தேவை. ஜாதகம், முழு விவரங்களுக்கு விண்ணப்பிக்கவும். வரதட்சிணை தர இயலாது. பெட்டி எண்: 1641.


பார்கவ குலம், நத்தமான் பிரிவு. 30 வயது நிரம்பிய மத்திய அரசு ஊழியரும் அழகும், பண்பும் நிறைந்தவரும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணிற்கும் படிப்பும், பண்பும் நிறைந்த சிறந்த வேலையில் உள்ள மணமகன் தேவை. பெட்டி எண்: 1642.

ஷடமர்ஷண கோத்திரம், பிரஹசரணம், பூராடம் நட்சத்திரம், வயது 25, சிவப்பு நிறம், உயரம் 5' தமிழ் ஐயர் பெண்ணிற்கு நிரந்தர வேலையிலிருக்கும் பினிஷல் செய்யும் நல்ல குணங்கள் பொருந்திய பையன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண்: 1643.

திருநெல்வேலி சைவப் பிள்ளைமார் இனத்தைச் சேர்ந்த, 24 வயது, உயரம் 5' 3'' மத்திய அரசில் பணிபுரியும் பட்டதாரிப் பெண்ணிற்கு மணமகன் தேவை. ஜாதகம் இருந்தால் அனுப்பவும். திருநெல்வேலி சைவப் பிள்ளைமார் மட்டுமே விண்ணப்பிக்கவும். முழு விபரங்களுடன் எழுதவும். பெட்டி எண்: 1644.


1984
அமுதசுரபி
தீபாவளி மலர்
திகட்டாத தீங்கனி
எடுத்துச் சுவையுங்கள்!
கொடுத்து மகிழுங்கள்!
விலை
ரூ. 25 மட்டுமே!
450
பக்கங்களுக்கு மேல்
அமுதசுரபி
(ஸ்ரீராம் டிரஸ்ட்)
145, லிங்கிச் செட்டித் தெரு, சென்னை 600 001
போன்: 28545 தபால் பை: 5043
★ அக்டோபர் 15ம் தேதிக்குள் முன்பணம் அனுப்புவோருக்கு
பதிவுத் தபால் செலவு இனாம்!
ADWAVE/ST/2728


santha



டில்ட்டிங் டைப்

கிரைண்டரை சாய்த்து கை
படாமல் மாவை எடுக்க வசதி
உள்ளது. அரவை செய்யும்
கீழ்பகுதியும் மேல்பகுதியும்
சேர்ந்து சுழல்வதால்
நேயமானம் இல்லை,
உட்பாகங்களை அப்புறமாக
கழுவ வசதி உள்ளது.

உட்பாகங்கள்
எவர்சில்வரினாலானது.
சப்தமில்லாத ஓட்டம்
அதிக சுகாதாரம்,
குறைந்த எடை.
மின் செலவு குறைவு
அளவுகள் : 1½ லிட்டர்
முதல் 2 லிட்டர் வரை



வெட் கிரைண்டர்

சாந்தா இண்டஸ்ட்ரியல்ஸ்
158, அவினாசி ரோடு, பீளமேடு,
கோயமுத்தூர் 641 004
போன் : 32429

SASI-SI-339 T

இலவசம் !
இலவசம் !!
இலவசம் !!!

13 விதமான உடைகளின் வரை படங்கள் பத்து பேப்பர் பாட்டர்ன் களில் உங்களுக்கு **"10 எளிய பாடங்களில் வீட்டிலேயே தையல் கற்றுக் கொள்ளுங்கள்"** என்ற சமீபத்திய பதிப்பான நிர்மலா தேசிகனின் புத்தகத்துடன் கிடைக்கும். மிக எளிய நடையில் வீட்டிலேயே உட்கார்ந்து தையல் கற்றுக் கொள்ள ஓர் அரிய வாய்ப்பு. சிங்கர் தையல் மெஷின் கம்பெனிக்காக ஆங்கிலத்தில் முதலாக பதிப்பான புத்தகம். இப்போது தமிழில் பதிப்பாக நூற்றுக்கணக்கான குடும்பத் தலைவிகளைப் பெருமைபடுத்தியிருக்கிறது.

1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 எளிய பாடங்கள்தான்.

இந்தப் பத்து பாடங்களில் குடும்பத் தலைவிக்கும் பெண்களுக்கும் தினசரி தேவையான உடைகளுடன் கிடைக்கிறது. ரூபாய் 30/- விலையுள்ள புத்தகத்தின் காசை ஓரிரு மாதங்களில் தையல் கூலி மிச்சப்படுத்திச் சேர்த்து சம்பாதித்து விடலாம்.

கல்யாணத்தில் பெண்களுக்கு பரிசளிக்க ஏற்ற உயர்ந்த புத்தகம். இன்றே வாங்குங்கள். ரூபாய் 30/- தபால் செலவு உட்பட DD/MO/P.O. மூலம் உடனே அனுப்பவும். கீழ்க்கண்ட கூப்பனுடன் இணைத்து இன்றே அனுப்பவும்.

ஸ்பெஷாலிடி பதிப்பகம்
22, II மெயின் ரோடு, கஸ்தூர்பா நகர்,
சென்னை-600 020

ஐயா

எனக்கு நிர்மலா தேசிகன் அளிக்கும் "10 எளிய பாடங்களில் வீட்டிலேயே தையல் கற்றுக் கொள்ளுங்கள்" புத்தகத்தை ரெஜிஸ்டர் தபாலில் அனுப்பவும். இத்துடன் ரூபாய் 30/க்கு மணியார்டர் / ட்ராப்ட் / போஸ்டல் ஆர்டர் இணைத்துள்ளேன்.

கையொப்பம்,

பெயர் :____________________

முகவரி :____________________

____

____

சோழிய வெள்ளாளர் கேட்டை, செவ்வாய் தோஷம் 21 – 164 தஞ்சையைச் சேர்ந்த தாய் தந்தை உள்ள பட்டதாரியான அழகான ஒரே பெண்ணுக்கு கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த நல்ல உத்தியோகத்தில் உள்ள 30 வயதுக்குட் பட்ட பண்புள்ள பட்டதாரி வரன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 1645.

வடமாள், காஸ்யபம், தமிழ் ஸ்மார்த்த பிராமணர் வடஆர்க்காடு மாநிறம் 5' 2'' தனியார் துறை. சம்பளம் ரூபாய் 400. மணமகளுக்கு அரசாங்க – தனியார் துறை – கம்பெனி – பேக்டரி யில் வேலையிலுள்ள வடமாள், பிரஹசரணம் பாலக்காடு, 33 முதல் 44 வரை வயது. பிராமண மணமகன் தேவை. ஜாதகம் இல்லாவிட்டாலும் சம்மதம். பெட்டி எண்: 1646.

Wanted a Bridegroom for a Brahacharanam Palghat Iyer girl aged 32 years (7-3-1952) Koundinya Gothram - Star Poosam - settled Madras - fair, S. S. L. C. unemployed Type-writing Tailoring, domestic trained Home-loving girl subsect no bar. send Horoscope with detals to Box No: 1647.

Alliance invited from well-settled Good - looking 32/34 years bridegrooms for a beautiful fair, Cuturally - trained city - employed graduate girl 27 years/150 cms intercaste parents Father Iyer Mother Non-Brahmin. Box No: 1648.

பிரஹசரணம் – சங்கிருதி கோத்திரம் (1.6.1953) உத்திராடம், எஸ். எஸ். எல். ஸி. நன்றாக சமையல், தையல், வீட்டு நிர்வாகம் தெரிந்த நல்ல அழகான குடும்பப் பாங்கான வேலைக்குச் செல்லாத பெண்ணிற்கு மணமகன் தேவை. இரண்டாம் தாரமும், உட்பிரிவும் சம்மதம். பெட்டி எண்:1649.

மாரம்பாடி மகரிஷி கோத்திரம், வணிக வைசியர் வகுப்பைச் சேர்ந்த 29 வயதான வேலை யில் இருக்கும் விதவைக்கு, அதே இனத்தைச் சேர்ந்த பரந்த மனப்பான்மை உள்ள கடந்த கால வாழ்க்கையை நினைக்காத மணமகன் தேவை. இரண்டாம் தாரமாக இருந்தாலும் விண்ணப்பிக்கலாம். வேறு ஜாதியாக இருந் தாலும் பாதகமில்லை. பெட்டி எண்: 1650.

அரசு பள்ளியில் ஆசிரியையாக பணிபுரியும் 30 வயது 157 செ. மீ. உயரம், மாநிறம் உள்ள, மாதம் ரூபாய் 800. ஊதியம் பெறும் சோழிய வேளாள பெண்ணுக்கு தகுந்த மணமகன் தேவை. பெட்டி எண்: 1651.

Alliance invited from progressive, well-settled, tall and Handsome, Non-Haritha Iyer Grooms around 35 for Iyer girl 31, Postgraduate, Teacher in Railways, tall, fair and charming. write to Box No: 1652.

தென்கலை . அய்யங்கார் பரணி நட்சத்திரம், கௌசிக கோத்திரம், எம். ஏ. படித்த 25 வயது கன்யான பெண்ணிற்கு நல்ல உத்தியோகத்தி லுள்ள, பி. இ. – ஏ. ஸி. ஏ. – எம். பி. ஏ. அல்லது எம். ஏ., – எம். எஸ். ஸி பாங்க் ஆபீஸராக உள்ள 28 முதல் 32 வயதிற்குள் உள்ள மண மகன் தேவை. பெட்டி எண்: 1653.

வடமாள் – ஸ்ரீவத்ஸ கோத்திரம், ஹஸ்த நக்ஷத்திரம், 27 வயது பி. யூ. ஸி. தேறிய 5' 3'' உயரமுள்ள பெண்ணுக்கு படித்த நல்ல உத்தியோகத்திலுள்ள 34 வயதிற்குட்பட்ட வடமாள் வரன் தேவை. ஜாதகம் அவசியம் தேவை. பெட்டி எண்: 1654.

ஹரித கோத்திரம், பிரஹசரணம், பூர நக்ஷத்தி ரம், 30 வயது எஸ். எஸ். எல். ஸி படித்த தனியார் கம்பெனியில் கிளார்க்காக வேலை பார்க்கும் பெண்ணுக்கும் பரந்த மனமும் நல்ல குணமும் 35 வயதுக்கு உட்பட்ட பையன் தேவை. விரைவில் எளிய திருமணம். பெட்டி எண்: 1655.

ஸ்மார்த்தாள், அஷ்ட சஹஸ்ரம், ஸ்ரீவத்ஸ கோத்திரம், பூர நக்ஷத்திரம், 25 வயதான, விபத்தினால் சிறிது பார்வை பாதிக்கப்பட்டுள்ள அழகான, பட்டதாரிப் பெண்ணிற்கு வரன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகம் மற்றும் விவரங் களுடன் தொடர்பு கொள்ளவும்; பெட்டி எண்: 1656.

5' உயரமும், 22 வயதுமுடைய பி. எஸ்.ஸி பட்ட தாரி வடமாள், வாதூல கோத்திர ஐயர் பெண் ணிற்கு தகுந்த வரன் 25–28 வயதிற்குள் தேவை. வடமாள் விசேஷம். உட்பிரிவுகள் பாதக மில்லை, ஜாதகம், வேலை, நிலையான வருமானம் மற்றும் விரிவான குடும்ப விவரத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 1657.

பவானி அருகே நடுநிலைப்பள்ளியில் தலைமை யாசிரியையாக மாதம் ரூபாய் 500. வாங்கும் மாதவ (பிராமண வகுப்பைச் சேர்ந்த 31 வயது காசியப கோத்திரம், விசாக நட்சத்திர. பெண் ணிற்கு அதே வகுப்பைச் சார்ந்த வேறு கோத்தி ரத்தில் அரசாங்க வேலை பார்க்கும் 35 வயது வரன் தேவை. பெட்டி எண்: 1658.

Alliance invited from qualified, well settled boys of Non-Srivathsa Gothram for decent, good looikng, 5' 4'', Vadama, Central Government employed, drawing Rs. 1200/- p. m., M. A., 24 years. Reply with horoscope to Box No: 1659.

எட்டாவதுபடித்த 25 8 (158) வயது நல்ல தோற்ற முள்ள பாலக்காடு 150 செ. மீ. கவுண்டின்ய வடமாள் பெண்ணிற்குக் குறைந்தது மெட்ரிக் படித்த சுமாரான வேலையுள்ள 38 வயது வரையிலான பண்பான குடும்பத்துப் பிராமணப் பையன் தேவை. திருமணம் சீர்வரிசையுடன் நன்கு நடத்தப்படும். பெட்டி எண்: 1660.

ரோமன் கத்தோலிக்க கிறிஸ்துவ வெள்ளாளப் பிள்ளை வகுப்பைச் சேர்ந்த பி. யூ. ஸி. படித்த மத்திய சர்க்காரில் 900 ரூபாய் சம்பளத்தில் வேலை பார்க்கும் 23 வயது பெண்ணிற்கு அதே வகுப்பைச் சார்ந்த படித்த வேலை பார்க்கும் 29 வயதிற்குள் மணமகன் தேவை. பெட்டி எண்: 1661.

சைவ வெள்ளாளர் சோழிய வகுப்பைச் சேர்ந்த 24 வயதுடைய எஸ்.எஸ்.எல்.சி. படித்த படித்த பெண்ணுக்கு வேலையில் உள்ள அல்லது நிரந்தர வருமானம் உள்ள மணமகன் தேவை. ஜாதகம் மற்றும் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 1662.

செங்குந்த முதலியார் தமிழக அரசில் நிரந்தர பணிபுரியும் 5' 4'' நல்ல தோற்றம், வசதியான பெற்றோர்களுடைய அழகான குடும்பப்பாங்கான எம். ஏ. 30 வயது பெண்ணுக்கு செங்குந்தர் பட்டதாரியான அரசு பணி – நிலக்கிழார்– வியாபாரி வரன் தேவை. முழு விவரம் ஜாதகத்துடன் எழுதவும். வசதியானவராக இருப்பின் பணியிலிருந்து விலகவும் தயார். பெட்டி எண்: 1663.

பிருஹசரணம், ஆத்ரேய கோத்திரம், வயது 23, பூராடம், பி. எஸ்ஸி., படித்த, மாநிறமான, கன்னிகைக்கு, பட்டதாரியான வயது 30க்குள்ளான நல்ல உத்தியோகத்தில் இருக்கும் குணமுள்ள பண்பான குடும்பத்தைச் சேர்ந்த வரன் தேவை. முழு விவரங்களுடனும் ஜாதகத்துடனும் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 1664.

வாதூல கோத்திரம், வடகலை அய்யங்கார், பூரம், பட்டதாரி (பி. எஸ்ஸி), 31 வயது, குடும்பப் குடும்பப் பாங்கான Good – Looking பெண்ணிற்கு தகுந்த உத்தியோகத்திலுள்ள வரன் தேவை. சீர் வரிசைகள், திருமணம் நன்றாகச் செய்யப்படும். தென்கலை சம்மதம். பெட்டி எண்: 1665

பாண்டிய வேளாளர் பிள்ளை இனத்தில் நல்ல கவுரவமான நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த – 9–ம் வகுப்பு வரை படிப்பும், தையல் மற்றும் எம்பிராய்டரி கலைகளும் தெரிந்த 25 வயது பெண்ணிற்கு, சிறிய பரந்த மனப்பான்மை கொண்ட நல்ல மணமகன் தேவை. திருமணம் எளிய முறையில் – உட்பிரிவுகளும் சம்மதம். பெட்டி எண்: 1666.

திருமணமாகி ஒரு வார காலத்தில் கணவன் ஆண்மையற்றவர் என தெரிந்து கோர்ட் மூலம் விவாகரத்து பெற்ற 23 வயது பி. யு. சி. படித்த நல்ல குடும்பப்பாங்கான நடுத்தர குடும்பத்தைச் சார்ந்த ஒரே பெண்ணுக்கு இந்து மதத்தைச் சார்ந்த பட்டப்படிப்பு படித்து நிரந்தர வருவாய் உள்ள வரன் தேவை. பெட்டி எண்: 1667.

Alliance for Sangiruthi Gothram Brahacharanam, Star Pooradam, 5' Iyer girl 26, Stenographer P&T Salary 1200. Government or Bank employee upto 32 !can contact. Sub-sect no bar. Box No: 1668.

Wanted well employed graduate or diploma of any Brahmin between 31 to 35, years for Harithasa, Smartha Ulachakammi B. Sc., fair, slim, 5' 1'' 29 years girl. reply with details to Box No: 1669.

வடமாள் கௌண்டின்யம் பூரட்டாதி – 21– 167 செ. மீ. – பட்டதாரி – மத்திய அரசு வேலை பண்பும் அழகும் உள்ள குடும்பப்பாங்கான பெண்ணிற்கு ஐயர் வகுப்பைச் சேர்ந்த நல்ல உத்தியோகத்தில் உள்ள வரன் தேவை. பெற்றோர்கள் ஜாதகத்துடன் எழுதவும். பெட்டி எண்: 1670.

கம்மவார் நாயுடு மல்லின்றார் குலத்தைச் சேர்ந்த 25 வயதுள்ள சிவப்பு நிறமாகவும், 5' 5'' உயரமும் உள்ள எம். ஏ. படித்த பெண்ணுக்கு மணமகன் தேவை. நன்கு படித்தவராகவும் வேலை பார்ப்பவராகவும் (அ சுயவேலை செய்பவராகவும் நாயுடு இனத்தில் இருக்க வேண்டும். ஜாதகத்துடன் போட்டோவுடன் விபரமாக அணுகவும். சுமாரான முறையில் திருமணம் செய்யப்படும். பெட்டி எண்: 1671.

Alliance invited from qualified, decently Employed Non- Athreya Groom for very fair, good looking well Accomplished Iyer Graduate girl 31/155 cms from Affluent familydecentearly Marriage. BoxNo: 1672.

Wanted Alliance for Ashtasahasram graduate girl 24 years, star - Avittam (Tanjore district born.) Typewriting-Shorthand qualified, employed in Central Govt. Madras, sub-sects no bar. Reply Box No: 1673.

Aliance for BrahminBrahacharanam,Smastha star Poorattadhi, Shadamarshana girl, 31, studied P.UC unemployed well domestcally trained decently employed Brahmins preferred. Sob-sects no bar. apply with horoscope. Bux No: 1674.

மணமகன் / மணமகள்

ஸ்ரீவத்ஸ கோத்திரம், வடமாள் அய்யர் வேலை பார்க்கும் 40 வயது பெண்ணுக்கும், நல்ல வேலையில் இருக்கும் அவளது 43 வயது சகோதரனுக்கும் மணமகன் மற்றும் மணமகள் தேவை. பெண் கொடுத்துப் பெண் வாங்க சம்மதம். ஜாதகத்துடன் மற்ற உட்பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 1675.

வடமாள், ஆத்ரேய கோத்திரம், சர்வஜித்வருஷம் தைமாதம், தமிழக அரசு நிறுவனத்தில் உதவியாளராக (யூ. டி. சி.) பணிபுரியும் 1300 ரூபாய் சம்பளம் வாங்கும் வரனுக்கு பெண்ணும், கூட அவரது சகோதரி விஜய வருஷம் ஆடி மாதம் பி. ஏ., தனியார் நிறுவனத்தில் மாதம் ரூபாய்600. சம்பளம் வாங்கும் 8–ல் செவ்வாய் உள்ள பெண்ணுக்கு, செவ்வாய் தோஷமுள்ள, அரசு உத்தியோகத்தில் சுமார் ரூபாய் 1000. சம்பளம் வாங்கும் பையனும் தேவை. பெண் கொடுத்துப் பெண் எடுக்க சம்மதம் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். (அஷ்ட சஹஸ்ரம், பிரஹசரணமும்) விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 1676.

Bank employed Solia Vellala Groom, Thiruvonam Salary Rs. 2000/- 31 years, 5' 1' Veg. seeks very beautiful educated (preferably Sathya Sai devotee) girl and alliance for sister 32 years graduate 4 10'' employed. Chitthirai Box No: 1677.

Edited, Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032. (Phone: 431543)
Assistant Editor: Manjula Ramesh.







இந்தச் சிக்கனம் மிக அருமையானது!



நெரோலாக்

வாஷபிள் ஆயில் பௌண்ட் டிஸ்டெம்பர்

ஸோல்ஜர் டிஸ்டெம்பரின்
புதிய பெயர்!



வீட்டிற்கு வண்ணம் பூசுவது கஷ்டமில்லை என்று எண்ணவைக்கும் சிக்கனம். நெரோலாக் டிஸ்டெம்பரின் தரம்பற்றி கவலைப்படவே தேவை இல்லை. இது கூடுதல் அளவு பரவுகிறது, உடனடியாக உலர்கிறது. மேலும் பரப்புகளுக்குப் பாதுகாப்பும் அளிக்கிறது. அதாவது சிக்கனம், வனப்பு மற்றும் செயல்திறன்.

நெடுங்காலம் உழைக்கவும் செய்கிறது. எனவே ஆண்டுதோறும் சுவர்களுக்கு வண்ணம் பூசும் அவசியமில்லை. வாஷபிள் என்பதால், எங்கேயாவது கறை—வடு ஏற்பட்டால், ஈரத் துணியைக் கொண்டு லேசாகத் துடைத்தால் போதும்.


வெள்ளை தவிர, முற்றிலும் புதிய 5 சாயல்கள் அடங்கிய கவர்ச்சியான 3 1 சாயல்களில் வருகின்றன. இவைகளிலிருந்து, எத்தனை வண்ணங்கள் வேண்டுமானாலும் தயார் செய்துகொள்ளலாம்.

நெரோலாக் பெயிண்ட்ஸ்

எந்த ரூபத்திலும்,
எந்த வண்ணத்திலும் மேம்பட்டது!

ULKA-GNP-13-84-TAM





❝ என்னதான் சொல்லுங்கள், அந்த காலத்து சாமான்களே உசத்திதான்!

எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து வீட்டிலிருக்கும் இந்த கருங்காலி மர ஊஞ்சல். இன்றைக்கும் சரியான நேரம் காட்டும் என் கணவரது பழைய "பாக்கெட்" கடிகாரம். நான் முப்பது வருடங்களுக்கு மேலாக உபயோகிக்கும் கல் போன்ற எவர்சில்வர் பாத்திரங்கள்.

அந்த நாள் போல இனிமேல் வராது என்றே நினைத்தேன் — சேலம் எவர்சில்வரில் செய்த பாத்திரங்களைப் பார்க்கும் வரை.

அந்த காலத்தில் கிடைத்த பாத்திரங்களைப் போலவே நல்ல தரமானவை. கரும்புள்ளிகளோ, கறையோ பிடிக்காது. வருடக் கணக்கில் உபயோகித்தாலும் பளபளப்பு போகாது.

அனுபவப்பட்டவள் என்ற முறையில்தான் சொல்லுகிறேன். — அடுத்த முறை பாத்திரங்கள் வாங்கும்போது சேலம் எவர்சில்வரில் செய்ததுதானு என்று ஒரு வார்த்தை கேட்டுவிட்டே வாங்குங்கள்.

அந்த காலத்து பாத்திரங்கள் போல் வாழ்நாளிற்கும் உழைக்கக் கூடியவை! ❞

ஸ்டீல் அதாரிட்டி ஆஃப் இந்தியா லிமிடெட்.
ஒரு இந்திய அரசு நிறுவனம்

சேலம் உருக்காலை

சேலம் 636 013 தமிழ் நாடு.

சேலம் எவர்சில்வர். நம்பிக்கைக்குப் பாத்திரமான பாத்திரங்கள்.

Sista's- SSP 223/84 TM B

மதுரை கோட்ஸ் வழங்கும் காம்ளிமென்ட்ஸ் மூலம் நீங்கள் மெலிந்த கைகளைப் பெறலாம்.




கைகள் மெலிந்து விளங்க பயிற்சி செய்வது ஒரு வழி. அதைவிட சாமர்த்தியமான மற்றொரு வழி இருக்கிறதே.

முதலில் நீங்கள் அணியும் ப்ளவ்ஸைப் பாருங்கள். நீங்கள் ப்ளவ்ஸ் அணியும் விதம், கை நீளம் இவற்றால் கைகள் ஒல்லியாக தோற்றமளிக்கக் கூடும். கைகள் இயற்கையாகவே ஒல்லியாக இருந்தால் 'கையில்லாத' ப்ளவ்ஸை அணிந்து கைகளின் அழகை வெளிப்படுத்தலாம்.

ஆனால் கைகள் மெலிந்து இல்லாவிடில், முழங்கை வரை நீளமான ப்ளவ்ஸை அணியவும். இறுக்கமான ப்ளவ்ஸ் அணியாதீர்கள்.

கைகள் மெலிந்து காட்சியளிக்க, உங்கள் கழுத்தும், தோள்பட்டையும் சற்றே தெரியட்டும். 'U' கழுத்து மற்றும் அகலமான 'V' கழுத்து உடைய ப்ளவ்ஸை அணியவும். கழுத்தை ஒட்டி ஆரம்பமாகும் ப்ளவ்ஸ், உங்கள் கைகளை நீளமாகக் காட்டுகிறது. கைகள் மேலும் நீண்டதாய் காட்சிதர அதிக அகலமில்லாத, எடுப்பான, கலர் 'பைப்பிங்' வைத்த ப்ளவ்ஸை அணியலாம்.

உங்கள் கைகளை அலங்கரிக்க, அகலமான வெள்ளி வளையலையோ கனமான கலர் வளையலையோ ஒற்றையாக அணியவும் (புடவையின் கலருடன் வளையல் கலர் மாறுபட்டதாகத் திகழ வேண்டும்). இதனால் உங்கள் கைகள் மேலும் நீளமாயும், மெலிந்தும் தோற்றமளிக்கும்.



ஆம், நீங்கள் அடுத்து வாங்கும் ப்ளவ்ஸ் துணி மதுரை கோட்ஸ் வழங்கும் காம்ப்ளிமென்ட்ஸாகவே இருக்கட்டும். அது அழகான நிறங்களில், நல்லதரத்துடன் திகழ்வதை உணர்வீர்கள். 70-80 செ.மீ. காம்ப்ளிமென்ட்ஸ் உங்கள் தோற்றத்தை மேலும் அழகாய் காட்டும். டூ-பை-டூ ரூபியா காட்டன், பாலியஸ்டர் மற்றும் பாலியஸ்டர் இழைகலந்த வகைகளில் இதுவே கச்சிதமான ப்ளவ்ஸ் துணி.

எல்லா முக்கிய துணிக் கடைகளிலும், மேட்சிங் சென்டர்களிலும் காம்ளிமென்ட்ஸ் என்று கேட்டு வாங்குங்கள்.

Complements

Madura Fabrics

மதுரை கோட்ஸின் ஒரு தரமான தயாரிப்பு.

மதுரை கோட்ஸ் வழங்கும் ப்ளவ்ஸ் துணி,
ஒவ்வொரு புடவைக்கும் ஒரு இணையான துணை.


ஒளிவீசிடும்
விழாக்கால
ஆடைகள்
கோ-ஆப்டெக்ஸ்
பட்டு,
பருத்தி.
பாலியஸ்டர்
ஷிப்பான் சேலைகள்
20%
40%
சிறப்புத் தள்ளுபடி
10.10.84 முதல்
23.10.84 வரை
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
பொன்விழா ஆண்டு
DIPR-210/84 ELEGANT


காந்தமென அலங்காரம்
கவர்ந்திழுக்க
சாந்தமுள்ள பொட்டிடுவீர் நெற்றியிலே.
கவிபாடுதே உங்கள்
கண்கள்...கவர்ச்சி காட்டுதே
ரோஜா இதழ்கள். கட்டழகு
மலருதே. நெற்றி கொண்ட
சிங்கார் குங்குமத்தால்.
சிங்கார்...உன்னத
பொருட்களால் உருவானது.
உங்கள் உள்ள நிலைக்கும்
உடை அழகுக்கும் எற்ற
வண்ணங்களிலே.
இப்புதிய
பேக்கிலே
காணுங்கள்
இவள்
முகத்தை!
சிங்கார்
குங்குமப் பொட்டு
—இந்தியாவின்
ஒப்பற்ற
அழகுதிலகம்.


அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

REGISTERED No. TN MS (S) 231
Registered as a Newspaper in Sri Lanka



UIPC : KS : 1001.